உ

தயவு

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# நெஞ்சறிவுறுத்தல்

இது, திருவருட்பாவின் மூன்றாவது பகுதி. உள்ளத்திற்கு உபதேசித்தலை, நெஞ்சறிவுறுத்தல் என்று நிறுத்தினார். ஊர்க்கு ஓதுவதில் ஒரு பயனும் இல்லை; தம் மனத்திற்குத் தாம் உபதேசிப்பதுதான் தகுதி. அறிவித்தலைக் கேளாமல் அசட்டை செய்யாதே; மனமே கேள்! என்று, வலியுறுத்தித் தெரிவித்தல் அறிவுறுத்தல். அறிவு+உறுத்தல்=அறிவுறுத்தல்; முற்றுமற் றொரோவழி" என்பது புணரியல் விதி. 703 கண்ணிகளைக் கொண்ட இது, பரவிவரும் கலிவெண்பா யாப்பான பாடல்.

இப்பாடலின் முதல் எழுத்து 'பொ'; இறுதி எழுத்து 'து'. தேசம், மொழி, சமயம் எனப் பிணங்கினரும் இணங்கி வருமாறு, எவர்க்கும் பொதுவான செய்திகளே இப்பாட்டில் உள என்றும், நெஞ்சறிவுறுத்தல் எனும் தலைப்பிற்கு, 'பொ' இராஜ எழுத்து என்பது யாப்பியல் விதியாதலின், இது அரச கம்பீரமான அறிவிப்புடையது என்றும், 'பொன்' எனத் துவக்கி, 'மகிழ்ந்து' என நிறையும் மங்கலத்தது பெருகிய நூல்போல் பிறங்கும் இப்பாடல் என்றும், எண்ணும் மனத்தில் இன்பம் சுரக்கும்.

நெஞ்சை முன்னிலை யாக்கி, இறைவனது சொரூப தடத்த இலக்கணங்களைச் சோர்விலாது சொல்வதன் மூலம் அவனது அருளின் பெருக்கை அறிவித்து, பாதாதி கேச பரியந்தம் அவனது பண்பாம் அழகைப் பார்! கேள் எனப்பாராட்டி, மனமே! நீ சீரழியும் வழியில் செல்லாதே! சத் சங்கத்தில் சார்ந்து இரு! இதுவரை யிருந்த "பாழ் வாழ்வு நீங்கப், பதிவாழ்வில் எஞ்ஞான்றும் வாழ்வாய் என்னோடு மகிழ்ந்து" என நிறைவுறும் இப்பாடல் பொருளை, ஓதியபின் வேறு ஒருநூல் ஓதவேண்டா என்னும் அளவு, விழுமிய செய்திகள் யாவும் விளங்க ஆற்றொழுக்காய்ப் பெருகி, ஓதி உணர்வாரை ஓம் பொருளோன் அருளொளியில் இணைக்கும் இன்ப நலத்தது இப்பாடல். இங்ஙனம் கூறுதல் வெறும் உயர்வு நவிற்சியன்று எனலை, விநய பூர்வமாக உலகிற்கு விண்ணப்பித்துக் கொள்கிறோம்.

This e-book can be downloaded for free from
http://www.vallalar.org

**உ**

## காப்பு

### குறள் வெண்பா.

1. **சீர்சான்ற முக்கண் சிவகளிற்றைச் சேர்ந்திடில்ஆம்**
**பேர்சான்ற இன்பம் பெரிது.**

(பொ-ரை) சீர் சான்ற முக்கண் சிவகளிற்றைச் சேர்ந்திடில்-சிறப்புப் பொருந்திய முக்கண்களை யுடைய சிவகளிறு ஆகிய கணபதியை அடைக்கலம் புகுந்தால்; பேர் சான்ற இன்பம் பெரிது ஆம்-பெரும் புகழான பெயருடன் (சிறந்த) பேரின்பம் சித்திக்கும், (எ-று.)

(வி-ரை.) சான்ற-சாட்சி மாத்திரமான எனினுமாம். எச்செயலிற்கும் முதலில் வைத்து எண்ணுதலாலும், ஆதாரமான மூல நிலத்தர் ஆதலினாலும், ஒலிக்கு உரிய உயிர்ப்பான ஓங்காரர் எனப் பெறுதலாலும், எந்த இடத்திலும், எதனிலும் உரு எழுப்பி எவரும் வழிபடும் இயல்பாலும், 'சீர் சான்ற' என்றார். சித்தை விட்டகலாத இன்பம், சத்தின் பெருக்காகச் சார்பொழுது, அது 'முக்கண் களிறாய்' முன்னிற்கும்; அந்த அருமையை இங்கு எண்ணல் நலம். களிறு-(மதக்) களிப்புடைய ஆண் யானை; இங்கு மதம் என்பது, அறக்கருணை மறக்கருணையின் அதிகரிப்பு; விளக்கம், விநாயகர் அகவல் விரிவுரையின் உளது. பிடி பிடி என்னும் பேருணர்வொடு பெரிது தொடர்ந்து, அக்கருணைக் களிற்றொடு கலக்கும் ஆன்மா, பேரும் புகழும் பெருகலுறும்; தொன்மைப் பேரின்பம் தொடர்தலுறும் என்னும் இக்குறளின் குறிப்பு கோடிபெறும். (1)

2. **ஆறுமுகத்தான் அருளடையின் ஆமெல்லாப்**
**பேறு மிகத்தான் பெரிது.**

(பொ-ரை.) ஆறு முகத்தான் அருள் அடையின் - ஆறுமுகப் பெருமானின் (அருமைத்) திருவருளை அடையப் பெற்றால்; எல்லாப் பேறும் மிக தான் பெரிது ஆம் - (இம்மை மறுமை வீடு எனும் மும்மையின் உள்ள) எல்லா இன்பங்களும் பெரிதாக எளிது பெருகி வரும், (எ-று.)

(வி-ரை.) சத்தைப் பிரியாத் ஆநந்தம் சித்தின் பூரிப்பாக வெளிப்பட்டால், அது ஆறுமுகம் என்னும் திருவுருவாம். இந்நுட்பத்தை ஐந்தாம் திருமுறையில் விரிவாக அறியலாம். 'அடையின்' எனும் சொற்போக்கால், அது அவ்வளவு எளிதன்று; எம்முகத்தும் புலனாகும் அவ் எம்மானை, அடைக்கலம் ஆனவர்க்கே அப்பேறு என்பது, குறிப்பாய் உணர்த்தப்பெற்றது.

பெறுதற்கு உரியது பேறு; தான் - அசைநிலை. "மன்னர் ஆவார் உறுசுகமும், வானோர் மகிழ்ந்து பெறுசுகமும், மணிப்பைந் நாகத் தவர்சுகமும், மற்றையோர்கள் அடை சுகமும், பன்னும் இடத்தில் சிவத்தெழுந்த பரமாநந்த லேசமெனப், பகர்ந்தாய்

குருவாய் எழுந்தருளி, படிறேன் மறந்திங் குழல்வேனோ” என்றார் திருப்போரூர் சிதம்பரர்; அதன்படி, ‘எல்லாப் பேறுமிகத் தான் பெரிது’ என்றார். (2)

## கலிவெண்பா

1. **பொன்னார் மலைபோல் பொலிவுற் றசையாமல்**
   **எந்நாளும் வாழியநீ யென்நெஞ்சே-பின்னான**

2. **இப்பிறப்பி னோடிங் கெழுபிறப்பும் அன்றியெனை**
   **எப்பிறப்பும் விட்டகலா என் நெஞ்சே-செப்பமுடன்**

3. **செவ்வொருசார் நின்று சிறியேன் கிளக்கின்ற**
   **இவ்வொருசொற் கேட்டிடுக என்நெஞ்சே**

(ப-ரை.) (1) என் நெஞ்சே-என் மனமே; பொன் ஆர் மலைபோல் பொலிவுற்று அசையாமல்-பொன்மயமான நிறைவுடைய (மேரு) மலைபோல் (ஆடாது அசையாது) பொலிவொடு விளங்கி; நீ எந்நாளும் வாழிய-நீ எந்த நாளும் (இன்புற்று)வாழ்வாயாக, (எ-று.)

(வி-ரை.) மலைக்கு அசலம் எனும் ஒரு பெயருளது; பெயராதது என்பது அதன் பொருள். அதுபோல் நீயும் ஆடாது அசையாது மேருமலை போல் நிமிர்ந்து கம்பீரமாக நில்; இது சாதனா சம்பந்தமான உபதேசம். புரிகிறதா!எனது நோக்கம், நீ வாழவேண்டும்; அவ்வளவுதான். (1)

(2) பின் ஆன இப்பிறப்பினோடு இங்கு எழு பிறப்பும் அன்றி-இறுதியில் எழுந்த இந்தப் பிறவியுடன், இவ்வுலகில் உளதான (தேவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம் எனும்) எழுவகைப் பிறவிகளில் மட்டும் அல்லாமல்; எனை எப்பிறப்பும் விட்டு அகலா என் நெஞ்சே-என்னை (84 லட்சம் யோனிபேதம் எனும்) எந்தச் சென்மத்திலும் விடாமல் தொடர்ந்து வருகின்ற என் மனமே;

(3) செப்பமுடன் - செம்மையுடன்; செவ் ஒருசார் நின்று-சிறக்க ஒரு பக்கமாக (உறுதியுடன்) நின்று; சிறியேன் கிளக்கின்ற இவ் ஒரு சொல் கேட்டிடுக என் மனமே-எனது மனமே! இளைஞனான நான் இயம்புகின்ற இந்த ஒரு சொல்லிற்குச் செவிசாய்த்தருள், (எ-று.)

ஆற்றில் ஒரு காலும் சேற்றில் ஒருகாலும் ஆவது போல், நீதியும் அநீதியும், தருமமும் அதர்மமும், சத்தியமும் அசத்தியமும் ஆகியவைகளை, சமய சந்தர்ப்பம்போல் பேசிச் சாய்வார்கள் பலர்; முன்னே முக இனிப்பாய்ப் பேசி, பின்னே கால் தட்டும் விரையமானவர்கள் வரலாற்றில் வீழ மாட்டேன்; ‘செப்பமுடன் செவ்வொடு சார்’ நிற்பேன்; செப்பம்-செம்மை எனும் பண்புப் பெயர்; இது அக ஒழுக்கம்; செவ்வொரு சார் நிற்றல்-புற ஒழுக்கம். நான் இளம் பருவத்தன்; கிளிபோல் மழலை மொழியாகக் கிளத்தல் செய்வேன். (கிளத்தல் எனும் சொற்குப் பொருள் இதுதான்.) ஒரு

சொல்தான்; ஆயினும் இது ஒப்பற்ற சொல். வாழிய, கேட்டிடுக என்பது, வியங்கோளீறு. கேட்டிடுக என்பதில் இடு-துணைவினை. (3)

## சொரூப லட்சணம்

### 1. பதி சொரூபம்

**-எவ்வெவ்**

4. **உலகும் பரவும் ஒருமுதலாய் எங்கும்**
**இலகும் சிவமாய் இறையாய்**

(ப-ரை.) எவ் எவ் உலகும் பரவும்ஒரு முதல் ஆய் - அனைத்து உலகத்தவரும் (வாழுமாறு கருதி) வழிபடும் ஒப்பற்ற (அரிய) முதன்மை(ப் பொருள்) ஆகியும்; எங்கும் இலகும் சிவமாய் - எங்கும் விளங்குகின்ற சிவம் (என்று) ஆகியும்; இறை ஆய் - முதன்மை வியாபக முழுமையாகி, (எ-று.)

(வி-ரை.) உலகு - இடவாகு பெயராய் உயிர்களை உணர்த்தியது; உணர்ந்தோரை அறிவுறுத்தியது எனினுமாம். பரவுதல் - (பரத்தில் உணர்வு பயிலும் நெறியில்) வழிபடுதல். அதுதான் முதல்; அதனை முன் வைத்துத்தான் பின் வரும் முதல்கட்குப் பெருமை; கசடதபற ஆறும் வல்லினம்; ஆயினும் மொழிமுதல் ஆவது கசதப; டற ஆவது இல்லை. அதுவும் இதே செய்திதான். முதல்கட் கெல்லாம் அவர் 'முதல்வர்' என்னும் இதனை, ஊன்றிச் சிந்தித்தால் பல உண்மைகள் புலனாகும். சிவம் என்பதன் பொருளை, திருவடிப் புகழ்ச்சி உரையில் அறிக. இறை-எப்பொருளிலும் தங்கிருப்பவன் எனும் குறிப்புப் பெயர். (4)

**-விலகும்**

5. **உருவாய் உருவில் உருவாய் உருவுள்**
**அருவாய் அருவில் அருவாய்**

(ப-ரை.) விலகும் உரு ஆய் - (பருமையி லிருந்து) விலகிய (நுண்மை) உருவாகி; உருவில் உரு ஆய்-(இந்நுண்மை) உருவுள் (காரண) உருவாகி; உருஉள் அருவாய். (காரண) உருவுள் அருவத் திருமேனி ஆகி; அருவில் அருவாய்-அருவுள் அருவம் ஆகி, (எ-று.)

(வி-ரை.) தூலம், சூக்குமம், காரணம், மகாகாரணம் எனும் நான்கு சொரூபங்களை, மூன்றாகத் தொகுத்துரைத்த இடம் இது. பருமை யுருவம் நான்முகன்; நுண்மை உருவம் திருமால்; காரண உருவம் உருத்திரர்; மகாகாரண உருவர் மகேச்சுரர். இப்படியே அருவம் நான்குள், அருமை உருவம் விந்து; நுண்மை உருவம் நாதம்; காரண உருவம் சத்தி; மகா காரண உருவம் சிவம். உருவருவம் -

(பாவனை மூர்த்தமான) சதாசிவம் என்னும் செய்திகள் இங்கு எண்ணத்தக்கவை. விலகும் என்பதற்குப் பிரகாசிக்கும் எனப்பொருள் கொள்ளினுமாம். (5)

**-உருவருவாய்**

**6. நித்தியமாய் நிர்க்குணமாய் நிர்ச்சலமாய் நின்மலமாய்ச்**
**சத்தியமாய்ச் சத்துவமாய்த் தத்துவமாய்**

(ப-ரை.) நித்தியமாய் - என்றும் இருப்பதாய்; நிர்க்குணம் ஆய் - எந்தக் குணமும் இல்லாததாய்; நிர்ச்சலம் ஆய்-எப்போதும் அசைவு இல்லதாய்; நின்மலம் ஆய்-(எந்த) அழுக்கும் (இயல்பில்) இல்லாததாய்; சத்தியமாய் - மெய்ம்மைச் சொரூபமாகி; சத்துவம் ஆய்-என்றும் உரங்கொண்டு இருப்பதாய்; தத்துவம் ஆய்-உள்பொருள் என உணரப் பெறுவதாய், (எ-று.)

(வி-ரை.) இதன் விரிவுகளை, திருவடிப் புகழ்ச்சியுரையிற் காண்க. நித்தியம் சத்தியம் நிர்க்குணம் சத்துவம் நிர்ச்சலம் நின்மயம் தத்துவம் என்று உச்சரிக்கும் போதே நாவில் நீர் ஊறுகிறதே; உணர்வில் ஏதோ ஒன்று வந்து உறவு புரிதல் தெரிகிறதே! "நித்தியமாய் நின்மலமாய் நிஷ்களமாய் நிராமயமாய் நிறைவாய் நீங்காச் சுத்தமுமாய்" என்று தாயுமானார், இம்மந்திரச் சொற்களை அனுபவிப்பதில் ஆர்வம் பெரிதும் உடையவர் என்பர். (6)

**-முத்தியருள்**

**7. ஒன்றாய்ப் பலவாய் உயிராய் உயிர்க்குயிராய்**
**நன்றாய் நவமாய் நடுநிலையாய்**

(ப-ரை.) முத்தி அருள் ஒன்றாய் - வீடுபேறு அருளும் ஒரு முதலாய்; பலவாய் - (பயனான சொரூபம்) பலவாகி; உயிர் ஆய் - (ஒரு மலர், இருமலர், மும்மலர் எனும்) ஆன்மாக்கள் (மூன்று வகை என) ஆகி; உயிர்க்கு உயிர் ஆய்-(அந்த) உயிர்கட்குள் (உயிர்க்கும்) உயிராகி, நன்றாய்-நலம் என இருப்பவை அனைத்தும் ஆகி; நவம் ஆகி-புதுமைகள் அனைத்தும் பொலிவது ஆகி; நடுநிலை ஆய்- (நல்லார்க்கும் பொல்லார்க்கும் எல்லார்க்கும்) சமநிலையுடையதாய், (எ-று.)

(வி-ரை.) முத்தி-(பாச பந்தங்களில் இருந்து பெறும்) விடுதலைப் பேறு. உயர்ந்த பக்குவர்க்கு ஏகமானான்; பரிபாகத்தில் தாழ்ந்தாரை ஆட்கொள்ள, பல மூர்த்தி பேதங்கள் ஆயினான்; அரிய விஞ்ஞானகலர், பிரளயாகலர் சகலர் எனும் மூவகை உயிர்களும் அவன் சொரூபமாகத் தோன்றலின், 'உயிராய்' என்றார். அம்மூவகை உயிர்களை, திருவடிப் புகழ்ச்சியுரையில் அறிக. உடல் உளது; உடலுள் உளமுளது; உளத்துள் உயிருளது; உயிருள் இறை உயிர்த்துக் கொண்டுளது. ஆதலின், 'உயிர்க்குயிராய்' என்றார். நன்மை மயமே நம்பன் ஆதலின், 'நன்றாய்' என்றார். "பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியன்" ஆதலின், 'நவமாய்' என்றார். நடுநிலையாய்-நடுநாடியில் நிலைபேறுடையனாய் எனினுமாம். (7)

-நின்றோங்கும்

8. வேதமாய் வேதாந்த வித்தாய் விளங்குபர
நாதமாய் நாதாந்த நாயகமாய்

(ப-ரை.) நின்று ஓங்கும் வேதமாய்-விரிந்து இருந்து எங்கும் விளங்கும் மறையாகி; வேதாந்த வித்து ஆய்-(முதன்மை) உபநிடத மூலமாகி, விளங்கு பரநாதம் ஆய்-(எங்கும்) விளக்கம் பெற்று எழும் பரநாதம் ஆகி; நாதாந்த நாயகம் ஆய்-நாதாந்தம் (என்னும் உச்சியின்) நாயகம் ஆகி, (எ-று.)

(வி-ரை.) வித் என்னும் தாதுவில் இருந்து, வேதம் என்னும் பெயர் விளைந்தது; வித் -ஞானம்; இந்த ஞானம் எனும் வித், உலகம் அனைத்தும் ஊடுருவியது; தேச சீதோஷ்ண நிலைக்குத் தக்கபடி, வாழும் வழி முறைகளை எந்தத் தேசத்திலும் எழுப்பியது; அத்தேச ஆசாரம், அனுட்டானம் நமக்குப் பொருந்தாமல் இருக்கலாம்; அதுகொண்டு அவர்களைத் குறைத்தளப்பது ஆகாது. சூழ் நிலைக்குத் தக்கபடி, அரிய மறைகள் அவர்கட்கு அளித்த அறிவிப்பு அது. உரிய இந்த அருமையை உணர்ந்து, ‘நின்று ஓங்கும் வேதமாய்’ என்றார். வேதங்களின் சாரமே வேதாந்தம்; அவைகளை உபநிஷத்துக்கள் என்று உரைப்பம். வித்து-மூலம்; இந்த “வித்தில்லாத சம்பிரதாயம் மேலும் இல்லை கீழுமில்லை” என்கிறது திருவாசகம். ஊன்றி இதை இடையறாது உணர்ந்தார்க்கு ஓசையாகி, அடுத்து ஒலியாகி, ஒலி அபர நாதமாகி, அபரம் பரநாதம் ஆகும் அனுபவத்தைப் பார்க்க முடியும் ஆதலின், ‘பரநாதமாய்’ என்றார். (ஓம்ஓம்.)

ஆம். அந்த நாத இறுதியில் நம் நாயகர். (சிவ சிவ சிவ.) ஷடாந்தத்தில் உள்ள வேதாத்த நாதாந்தம், இங்கு ஓர் அளவு விளக்கப் பெற்றது. நாதாந்தத்தில் போதை; வேதாந்தத்தில் தீபம். போதும் இந்த அளவு இங்குச் சொன்னது. (8)

-ஓதும்

9. செறிவாய்த் திரமாய் சிதாகாச மாய்ச்சொல்
அறிவாய் அறிவுள் அறிவாய்

(ப-ரை.) ஓதும் செறிவாய் - (பொருளுடைய சொல் கொண்டு) புகழப்பெறும் நிறைந்த நிறைவாகி; திரம் ஆய்-ஊற்றமுள்ள உறுதி ஆகி; சித் ஆகாசம் ஆய்-ஞான விண் ஆகி; சொல் அறிவு ஆய் - (உள் பொருள்களில்) உரைக்கப் பெறும் அறிவாகி; அறிவுள் அறிவு ஆய் - அறிவுள் (இருந்து) அறிவிக்கும் அறிவு ஆகி, (எ-று.)

(வி-ரை.) ஓதுதல் - விநயம் கொண்டு விளம்புதல். செறிவு - பரிபூரணமான நிலை. திரம் - இது வடமொழியில் ஸ்திரம் எனப் பெறும்; ஆகாயம் பல; அவைகளுள் இது சிதாகாசம்; இது குறித்து திருவடிப்புகழ்ச்சி உரையில் விரிவாகச் செய்தியுளது; அதை ஆங்கறிதல் நலம். சொல் - (ஊன்றித் தத்துவங்களை உணர்ந்துரைக்கும்)

உரை. "அறிவித்தால் அன்றி அறியா உளங்கள்" என்பது சாத்திரக்குறிப்பு; அதற்கு ஏற்ப, 'அறிவுள் அறிவாய்' என்றார். (9)

**-நெறிமேவு**

10. **காலமாய்க் காலங் கடந்த கருத்தாய்நல்**
**சீலமாய்ச் சிற்பரமாய்ச் சின்மயமாய்**

(ப-ரை.) நெறி மேவு காலம் ஆய் - வழியிடைப்படும் (இறப்பு நிகழ்வு எதிர்வு எனப்பெறும் மூன்று) காலங்கள் ஆகி; காலம் கடந்த கருத்தாய் - கால தத்துவத்திற்கு அப்பாற்பட்ட கருத்தாகி; நல் சீலம் ஆய் - சிறந்த அகவொழுக்கம் ஆகி; சித்பரம் ஆய்-மேலான ஞான மெய்யாக்கி; சின்மயம் ஆய் - அருளுடைய ஞான சொரூபம் ஆகி, (எ-று.)

(வி-ரை.) 96 தத்துவங்களுள் காலம் ஒன்று; 'காலம் என்பது கடவுள் உள்ளங் கையில் உளது' என்பது கந்தபுராணச் செய்தி. கால அதீதன் என்பது இறை திருநாமங்களுள் ஒன்று. 'காலம் கடந்த கருத்து' கடவுள் சொரூபம்; அரிய இதனை மறுதலித்து, தாம் ஏதோ வளர்ந்து இருப்பது போல் எண்ணி ஏமாந்து போகின்ற உலகம் இது. சீலம் - புறத்தது; நல் எனும் அடை அகத்தது. சிற்பரம், சின்மயங்களின் செய்தி, திருவடிப் புகழ்ச்சியில் இயலுமளவு விரிவுளது. ஆங்கு அதை அறிக.

**"காலமே! காலமொடு மூன்றும் காட்டும் காரணமே"**
**"காலம் மூன்றும் கடந்தொளிரா நின்ற சீலமே"**

எனும் தாயுமானாரை இங்கு எண்ணல் நலம். (10)

**-ஞாலம்**

11. **பொருந்தாப் பொருளாய்ப் பொருந்தும் பொருளாய்ப்**
**பெருந்தா ரகம்சூழ்ந்த பேறாய்த்**

(ப-ரை.) ஞாலம் பொருந்தா பொருளாய் - உலகொடு ஒன்றாத பொருளாய்; பொருந்தும் பொருளாய் - (புனித நிலையில் எங்கும்) பொருந்தி இருக்கும் பொருளாகி; பெரும் தாரகம் சூழ்ந்த பேறு ஆய் - பெரியதான ஓங்காரம் வட்டமிட்ட (அதனுள் இருக்கும்) பெறும் பயனாய், (எ-று.)

(வி-ரை.) ஞாலம், இடவாகு பெயர் எனினும் ஆம். பாச நிலையில் பாச நிலையில் பற்றாதது ஆதலின், 'பொருந்தாப் பொருள்' என்றார். இயற்கைச் செறிவில் இரண்டற்று இருப்பது ஆதலின், 'பொருந்தும் பொருள்' எனப் பெற்றது. உள்ளும் புறமும் அரிய பெரிய ஆதாரமானது ஆதலின், 'பெருந்தாரகம்' எனினுமாம். தாரகம் - நிலையான ஆதாரம்; "ஆதார ஆதேயம் முழுதும் நீ ஆதலால், அகிலமீ தென்னை ஆட்டி, ஆடல் கண்டவனும் நீ ஆடுகின்றவனும் நீ" என்பது தாயுமானவர் உபநிடதம். பேறு-ஆன்மானுபவம். (11)

-திருந்தாத

**12. போக்கும் வரத்துமிலாப் பூரணமாய்ப் புண்ணியர்கள்**
**நோக்கும் திறத்தெழுந்த நுண்ணுணர்வாய்**

(ப-ரை.) திருந்தாத போக்கும் வரத்தும் இலாப் பூரணம் ஆய் - திருத்தம் அடையா இறப்பும் பிறப்பும் இல்லாத முழு நிறைவாய்; புண்ணியர்கள் நோக்கும் திறத்து எழுந்த நுண் உணர்வாய் - சிவபுண்ணிய சீலர்கள் (உள்முக) நாட்டத்தின் ஊற்றத்தில் உதிக்கும் நுண்மை உணர்வு ஆகி (எ-று.)

(வி-ரை.) பிறத்தல்; நெறி பிறழாது இருத்தல்; ஆன்மாவைச் சிவத்திற்குப் பாவனையால் அர்ப்பணித்தல் முதலியன சன்மார்க்க சாதனை; இதன்வழி "திருத்தித் திருத்தி வந்தென் சிந்தை இடம்கொள் கயிலாயா" என்று ஆளுடைய நம்பிகள் அறிவித்தபடி, திருவருளால் பல திருத்தம் பிறக்கும்; அங்ஙனமின்றி மாயா விலாசத்திற்கே மனத்தினை அர்ப்பணித்தவர், திருந்தாத போக்கு வரத்தில் புழுங்கிப் புரள்வர். இவைகள் ஆன்ம உலக அவதிகள்; அருளுலக நியதி, போக்கு வரத்திலா பூரணானுபவம்; ஆ! என்ன அருமையான அறிவிப்பு இது!

**"புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு,**
**அண்ணலங் கதுகண்டு அருள்செய்யா நிற்கும்".**

கண்முன் காணும் திருவுருவைக் கருத்தில் இருத்தி வழி படற்கு, உள்ளாற்றல் வேண்டும்; அந்த உள்முக நாட்டம் உண்டான பொழுது, அங்கு அதிநுட்ப ஞானம் காட்ட எழும் அருளொளியை, 'நோக்கும் திறத்து எழுந்து நுண்ணுணர்வு' என்பது, சாதகர்கட்குக் காட்டிய சமிக்ஞை. "நம்மின் மிக்கவர் நுங்கண் உள்ளார், விழித்தவர் காண்மின்" என்பது திருவிளையாடல் புராணம்; "எண்ணருளி, ஏழைமை துடைத்து, எழும் மெய்ஞ்ஞானக் கண்ணருள் செய் கண்ணன்" என்பது கம்பர் காவியம். (12)

-நீக்கமிலா

**13. ஆதியாய் ஆதிநடு அந்தமாய் ஆங்ககன்ற**
**சோதியாய்ச் சோதியாச் சொற்பயனாய்**

(ப-ரை.) நீக்கம் இலா ஆதி ஆய் - (மூவுலகினும்) நீக்கம் அற நின்ற முதல் பொருள் ஆகி; ஆதி நடு அந்தம் ஆய் - முதலும் இடையும் முடிவிலும் இருப்பதாய்; ஆங்கு அகன்ற சோதி ஆய் - அங்கங்கும் எங்குமான பேரொளிப் பிழம்பாய்; சோதியா சொல் பயனாய் - ஆராய்ச்சியில் அடங்காத சொல்லின் பொருளாய், (எ-று.)

(வி-ரை.) நீக்கம் இலா ஆதியை, "பார்க்கும் இடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணம்" என்றார் தாயுமானார். "எங்கெங்கே வல்வில் மனிதன்

என்றெதிர்ந்தோர் யார்க்கும், அங்கங்கே ஆகி நின்று" என்பது போல், எங்கே உளது என்று அறிவித்தபடி. எப்பொருட்கும் தோற்றம், இடைக்காலம், இறுதி நாள் என்னும் 'வரையறை' யுண்டு; அம்மூன்றிடத்தும் இருந்து முறுவலிக்கும் முதற் பொருலை, 'ஆதி நடு அந்தமாய்' என்றார். 'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் ஜோதியை' எனும் திருவாசகத்தை ஒட்டி, 'ஆங்கு அகன்ற ஜோதியாய்'; என்றார். அகன்ற-விசாலமான; அல்லது, (ஆதி நடு அந்தம் அனைத்தையும் விழுங்கி) அதற்கு அப்பாலுமான எனினுமாம். "சொல்லாத வார்த்தையைச் சொன்னாண்டி தோழி; சொன்ன சொல் ஏதென்று சொல்வேன்! என்னைச் சூதாய்த் தனிக்கவே சும்மா இருத்தி-முன்னிலை ஏதும் இல்லாதே-சுகம் முற்றச் செய்தே என்னைப் பற்றிக் கொண்டாண்டி" என்றபடி அனுபவம் காட்டும் சொல் ஆதலின், 'சோதியாச் சொல் பயனாய்' என்றார். அது எழுத்துருவம் கொள்ளாதது; உணர்வில் கொழுந்தாய் ஒலிப்பது ஆதலின், அதை எவர் ஆய இயலும்? அறிவை நம்பி ஆய முயன்றால், குன்றில் முட்டிக் கொள்ளும் குருவிகதை ஆகிவிடும். "சோதனையில் அகப்படாத சோதீ! உன்னைச் சோதிக்கத் துணிந்தேன் அந்தோ!" என்று இயம்ப வரும். அச்சொல்லின் பயன், கணுவறச் சொரூபத்தில் கலப்பது தான். (13)

**-நீதியாய்**

**14. ஆங்காரம் நீக்கும் அகார உகாரமதாய்**
**ஓங்கார மாயவற்றின் உள்பொருளாய்**

(ப-ரை.) நீதி ஆய் - (அவரவர் தரத்திற்கு உரிய) நீதி ஆகி; ஆங்காரம் நீக்கும் அகார உகாரமது ஆய் - (ஆணவச் சாயையான) அகங்காரத்தை அடியொடு விலக்கும் அகர உகர சொரூபம் ஆகி; ஓங்காதம் ஆய் - ஓம் எனும் பிரணவம் ஆகியும்; அவற்றின் உள் பொருள் ஆய் - அப் பிரணவத்தின் அகப்பொருள் ஆகி, (எ-று.)

(வி-ரை.) நீ - மறைப்பு; தி-நெருப்பு; இது முதற் குறிப்பால் போந்த பொருள். நீதி யாது செய்யும் என்பார்க்கு, அதன்படி நடந்தால், அறிவை மறைத்த திரையகலும்; அதன்பின் தெய்வ விலாசம் அறியப் பெறும்; அதனால்தான் நிதிபோல் போற்ற வேண்டும் நீதியை என்பர், நியதியாளர்கள். சிவபிரான் தோழன் குபேரன் என்பர்; அஃது இதை எண்ணித்தான் பிறந்ததோ என்னோ? (ஓம்.ஓம்.) தலைமைத் தத்துவங்கள் முப்பதாறுள் ஒன்று ஆங்காரம்; ஆரம்பத்தில் அதை எழாதபடி, அடக்கிப் பயிலுதல் நம்செயல்; அதன்பின் இயல்பாகவே அகர உகர நாதம் எழ, அதன்முன் ஆங்காரவேர் அறுத்துவிடும். அதன்பின் ஓங்காரத்தில் உணர்வு ஒடுங்கும். ஓங்காரத்துள், புனித சிவ ஜோதியே பொருள்; "ஆங்காரமும் அடங்கார், ஒடுங்கார்; பரமாநந்தத்தே தேங்கார், நினைப்பும் மறப்பும் அறார்ல் தினைப்போதளவும் ஓங்காரத்து உள் ஒளிக்கு உள்ளே, முருகன் உருவம் கண்டு தூங்கார்" என்று அருணை முனிவரும், "ஓங்காரத்து உள்பொருளை, ஐயன் எனக்கு அருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே" எனும் திருவாசகமும் இங்கு எண்ணத் தகும். (14)

**-பாங்கான**

**15. சித்தமாய்ச் சித்தாந்த தேசாய்த் திகம்பரமாய்ச்
சத்தமாய்ச் சுத்த சதாநிலையாய்**

(ப-ரை.) பாங்கு ஆன சித்தம் ஆய் - பக்குவமான சித்த தத்துவம் ஆகி; சித்தாந்த தேசு ஆய் - (ஷடாந்தத்தில் இறுதியதான) சித்தாந்த ஜோதியாகி; திக் அம்பரம் ஆய் - (அட்ட) திசைகளே (உடுத்தும்) ஆடை ஆகி; சத்தம் ஆய் - நாதம் ஆகி; சுத்த சதா நிலை ஆய் - தூய சதா சிவம் ஆகி, (எ-று.)

(வி-ரை.) சித் - ஞானம்; அதையுடையது சித்தம். சித்தத்தின் முடிவில் ஒளி வெள்ளம்; அந்த ஒளி வெள்ளதீதிற்கு எண்திசைகளே ஆடை; அதன்பின் நாதம்; ‘சத்தத்தின் உள்ளே (சுத்த) சதாசிவம்’ என்பது ஔவையார் அறிவிப்பு. ஊன்றி இவைகளை உணர்பொழுது, போதும் இப்பேறு; வேண்டா உலகியல் என்று, விரக்தி உளத்தில் விளையாவோ! இதுதானே இயற்கை. (திகம்பரம் - திக் - திசை; அம்பரம் ஆடை.)சதாநிலை என்பதில், நிலை-பதி எனும் பொருட்பெயர்; இஃதே சிவம். (15)

**-வித்தமாய்**

**16. அண்டமாய் அண்டத் தணுவாய் அருளகண்டா
கண்டமாய் ஆநந்தா காரமதாய்**

(ப-ரை.) வித்தம் ஆய் - (அறிவுப்) பொருள் ஆகி; அண்டம் ஆய் - அண்டங்கள் ஆகி; அண்டத்து அணு ஆய் - அண்டத்தில் (உள்ள) அணுக்கள் ஆகி; அருள் அகண்ட அகண்டம் ஆய் - அருள் ஆகிய அகண்ட வெளியில் (ஊடுருவிய) அகண்டப் பொருள் ஆகி; ஆநந்த ஆகரமது ஆய் - ஆநந்த சொரூபம் ஆகி, (எ-று.)

(வி-ரை.) வித்தம் - (பர) வஸ்து. அண்ட எல்லையை, கந்தபுராண அண்ட கோசப் படலம் கொண்டும், சண்முக கவச விரிவுரையிலும் அறியத் தகும். அணு - (பூதக்கண்ணாடிக்கும் பெரிது புலனாகாத) அதிநுண்மை உரு பெருகியது அருள்வெளி; அதைத் தன்னுள் அடக்கிப் பெருகியது பரசிவமாதலின், ‘அகண்டா கண்டப் பொருளாகி’ என்றார்; இந்த நியதியில், அகண்ட கண்டம் என்றாயது; அகண்டம் - வியாபகம்; கண்டம் - அதனுள் அடங்கிய வியாப்பியம். ஆகரம் - இருப்பிடம்; அல்லது உறைவு இடம்; வடசொல். (16)

**-அண்டத்தின்**

**17. அப்பாலாய்இப்பாலாய் அண்மையாய்ச்சேய்மையதாய்
எப்பாலாய் எப்பாலும் இல்லதுமாய்**

(ப-ரை.) அண்டத்தின் அப்பால் ஆய் - அண்டங்கட்கு அப்பாற்பட்ட மேல் எல்லை ஆகி; இப்பால் ஆய் - இப்பால் (எனும் கீழ் எல்லை) ஆகி; அண்மை ஆய் சேய்மையது ஆய் - சமீபம் ஆகி தூரம் ஆகி; எப்பால் ஆய் எப்பாலும் இல்லதும் ஆய் -எப்புறமும் ஆகி, எப்புறமும் இல்லதும் ஆகி, (எ-று.)

(வி-ரை.) உடன் பாடும் எதிர்மறையும் ஆவது சொரூப இயல் என்பதை, இக் கண்ணிகளைக் கொண்டு இங்கு அறியத் தகும். "அண்டமுடி தன்னிலோ? பகிரண்டம் அதனிலோ...நீ வீற்றிருப்பது? தொழும்பனேற்கு உளவு புகலாய்!" எனவும், "அண்டபகி ரண்டம் அறியாத நின் வடிவைக், கண்டவரைக் கண்டால் கதியாம் பராபரமே" எனவும் தாயுமானார் குறிப்பிடுவன இங்கு குணிக்கத் தகும்.

**-செப்பாலும்**

**18. நெஞ்சாலும் காய நிலையாலும் அந்நிலைக்குள்**
**அஞ்சாலும் காண்டற் கரும்பதமாய்**

(ப-ரை.) செப்பாலும் - சொற்களாலும்; நெஞ்சாலும். மனத்தாலும்; காய நிலையாலும் - தேகத்தாலும்; அந்நிலைக்குள் அஞ்சாலும் - அக்காயத்தின் உள்ள ஐந்து அறிவுகளாலும்; காண்டற்கு அரும்பதம் ஆய் - தரிசித்தற்கு அரிய (எல்லாப்) பதங்களும் ஆகி, (எ-று.)

(வி-ரை.) திரிகரணங்கட்கும், ஐம்பொறிகளின் அறிவுகட்கும் எட்டாத பதவிகள் பல இருக்கின்றன; அவைகள் அனைத்தும் சொரூப நிலங்கள் என்று அறிவித்தபடி. (18)

**-எஞ்சாப்**

**19. பரமாய்ப் பகாப்பொருளாய்ப் பாலாய்ச் சுவையின்**
**தரமாய்ப் பரப்பிரமந் தானாய்ச்**

(ப-ரை.) எஞ்சாப் பரம ஆய் - (ஒரு) குறைவும் இல்லாத (நிறைவுடைய) பரம்பொருள் ஆகி; பகாப் பொருள் ஆய் - பகுக்க முடியாத வஸ்து (என்று) ஆகி; பாலாய் சுவையின் தரம் ஆய் - (பயனுள்ள) பாலாகி, (அதன்) உயர்ந்த சுவையாகி; பரப்பிரமம் தானாய் - அரிய பெரிய பொருள் தானே ஆகி, (எ-று.)

(வி-ரை.) எஞ்சுதல் - குறைதல். எஞ்சாப் பரம் எனவே, குறையாத நிறைவினது என்பது குறிப்பு. பிற பொருள்கள் உறுப்புறுப்பாய்ப் பகுத்தற்கு உரியன? இது அங்ஙனம் செய்ய இயலாதது ஆதலின், 'பகாப் பொருள்' என்றார். பிரமம் - பெரிய பொருள். பரம் - மேலானது எனும் பொருட்டு. (19)

**-வரமாய**

**20. ஒன்பான் வடிவாய் ஒளியெண் குணக்கடலாய்**
**அன்பாய் அகநிலையாய் அற்புதமாய்**

(ப-ரை.) வரம் ஆய ஒன்பான் வடிவாய் - மிகச்சிறந்ததான (பிரமன், திருமால்,உருத்திரர், மகேசர், சதாசிவர், விந்து, நாதம், சத்தி, சிவம் எனும்) ஒன்பது

சொரூபங்களை யுடையதாய்; ஒளி எண்குணக் கடலாய் - ஒளியுடைய (தன்வயம், தூய மேனி, இயற்கை உணர்வு, முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்கள் இன்மை, பேரருள், முடிவிலா ஆற்றல், வரம்பிலா இன்பம் எனும்) எண்குணப் பெருங்கடலாகி; அன்பாய் - அன்புமயம் ஆகி; அக நிலை ஆய் - (ஆன்ம) அகத்து நிலைபேறு ஆகி, (எ-று.)

(வி-ரை.) **"சிவம்சத்தி நாதம் விந்து சதாசிவன் திகழும்ஈசன்**
**உவந்தருள் உருத்தி ரன்தான் மால்அயன் ஒன்றின் ஒன்றாய்**
**பவந்தரும் அருவ நாலிங்(கு) உருவநால் உபயம் ஒன்றா**
**நவந்தரு பேதம் ஏக நாதனே நடிப்பன் என்பர்"**

எனும் சிவஞான சித்தி, இங்கு சிந்திக்கத் தகும். அகநிலை-(உயிரின்) உணர்வு நிலை. (20)

**-இன்பாய்**

21. **அகமாய்ப் புறமாய் அகம்புறமாய் நீங்கும்**
**சகமாய்ச் சகமாயை தானாய்**

(ப-ரை.) இன்பாய் -, அகமாய்-அகச்சமயமாய்; புறமாய் - புறச்சமயமாய்; அகம் புறம் ஆய் - அகப்புறச் சமயம், புறப்புறச் சமயங்களாகி; நீங்கும் சகமாய் - (தோன்றாது) ஒடுங்கும் (தொன்மை) உலகம் ஆகி; சக மாயை தானாய் - (தனிப்பெரும்) பிரகிருதி மாயை தானே ஆகி, (எ-று.)

(வி-ரை.) அகச்சமயங்கள் ஆறு, அகப்புறச் சமயங்கள் ஆறு, புறச்சமயங்கள் ஆறு, புறப்புறச் சமயங்கள் ஆறு ஆக இருபத்தினான்கு; சமயங்கள் இருக்கின்றன. இவைகளின் தரத்திற்குந் தக்கபடி, தூய சொரூபநிலை ஒவ்வொன்றினும் தோய்ந்துளது. காணப்பெறும் உலகம், அதன் அருள் விளையாடலில் ஒன்று. உலகம் பிரகிருதியின் விளைவு எனில், அதுவும் சொரூப விலாசமே என்று அறிவித்தபடி. (21)

**-சகமாயை**

22. **இல்லாதாய் என்றும் இருப்பதாய் யாதொன்றும்**
**கொல்லாதார்க் கின்பங் கொடுப்பதாய்**

(ப-ரை.) சகமாயை இல்லாதாய் - உலகம் ஆகிய பிரகிருதி மாயைக்கு அப்பாற் பட்டதாய்; என்றும் இருப்பதாய் - என்றும் (அதனொடு) இருப்பதாய்; யாது ஒன்றும் கொல்லாதார்க்கு இன்பம் கொடுப்பதாய் - எந்த ஒரு உயிரையும் கொல்லா நோன்பினர்க்கு இன்பத்தைக் கொடுப்பதாய்,

(வி-ரை.) மாய்+ஆ-மாயா; தொலைந்தது போல் தொலையாதது ஆதலின் இப்பெயரை அது எய்தியது; என்றும் இருப்பது; எனினும் கண்கட்குத் தோன்றாதது; அருவம் ஆனது; அழிதல் இல்லாதது; ஏகம் ஆனது; உலகம் தோன்றக் காரணம்

ஆனது; அறிவு இல்லாதது; தனுகரண புவன போகங்களைத் தருவது; வியாபகமானது; இறைவன் வியாபகத்துள் ஒடுங்குவது; மயக்கம் செய்வது; விபரீத உணர்வுகளை விளைவிப்பது; இறைவனுக்கு வைப்புச் சத்தியா யிருப்பது முதலியன இதன் இலக்கணம். அதனுள் ஒன்றியும் ஒன்றாதும் இருப்பது இறையியல்பு. இரக்கம் உடையவர்க்கு இன்பம் தருவது அச்சொரூபச் செய்தி என்னும் பகுதியை, எண்ணுவார் மனத்தில் இன்பம் பிறக்கும். (22)

**-எல்லார்க்கும்**

23. **நண்ணுவதாய் நண்ணாதாய் நல்வினையாய் அல்வினையாய்**
**எண்ணுவதாய் எண்ணின் இயலாதாய்**

(ப-ரை.) எல்லார்க்கும் நண்ணுவதாய் - எவர்க்கும் எய்தற்கு உரியதாய்; நண்ணாதாய் - அடைதற்கு அரியதாய்; நல்வினையாய் அல்வினையாய் - நல்வினை தீவினைக ளாகி; எண்ணுவதாய் - தியானிக்கப்படும் பொருளாய்;எண்ணின் இயலாதாய் - தியானத்திற்கு எட்டாததாய், (எ-று.)

(வி-ரை.) எதிர்மறையும் உடன்பாடும் அருமையாக இதனில் உறவாடுவதை அறிக. (23)

**-எண்ணுகின்ற**

24. **வானாய் நிலனாய் வளியாய் அனலாய்நீர்**
**தானாய் வழிபடுநான் றான்தானாய்**

(ப-ரை.) எண்ணுகின்ற வானாய் நிலனாய் வளியாய் அனலாய் நீர்தானாய் - உணரப் பெறுகிற மண் நீர் நெருப்பு காற்று விண் எனும் ஐம்பெரும் பூதங்களாகி; வழிபடும் நான் தான் தானாய் - வழிபாடு செய்யும் நானே தான் ஆகியும்,

(வி-ரை.) வளி - காற்று. தான் இரண்டில் முன்னது அசை. "தானாகி நானாகித் தனியே நின்றவர்க்குத்-தண்டனிட்டேன் என்று சொல்லடி" என்பது கீர்த்தனைப் பகுதி. (24)

**-வானாதி**

25. **ஒன்றிடத்தும் ஒன்றாதாய் ஒன்றுவதாய் ஆநந்த**
**மன்றிடத்தில் என்றும் வதிவதாய்**

(ப-ரை.) வான் ஆதி ஒன்றிடத்தும் ஒன்றாதாய் ஒன்றுவதாய் - விண் முதலிய (ஐம்பூதங்களில்) ஒன்றினும் சேராதாய்ச் சேர்வதாய்; ஆநந்தம் மன்று இடத்தில் என்றும் வதிவதாய் - சிற் சபையில் என்றும் இன்பம் கொண்டு இருப்பதாய், (எ-று.)

(வி-ரை.) ஒன்றுதல் - பொருந்துதல்; ஒன்றாமை-அழுந்திப் பொருந்தாமை. மன்று-சபை. (25)

**-ஒன்றியதோர்**

26. **ஐந்நிறமாய் அந்நிறத்தினாமொளியாயவ்வொளிக்குள்**
**எந்நிறமும் வேண்டா இயல்நிறமாய்**

(ப-ரை.) ஒன்றியது ஓர் ஐந்நிறம் ஆய் - ஓர்தலுக்குரிய (பொன்னிறம், வெண்ணிறம், செந்நிறம், கருநிறம், பசுமை நிறம் எனும் புனித) ஐந்து நிறங்கள் பொருந்தியதாய்; அந் நிறத்தின் ஆம் ஒளியாய் - அந்த (ஐந்து) நிறங்களில் ஊடுருவிய ஒளியாகி; அவ் ஒளிக்குள் எந்நிறமும் வேண்டா இயல் நிறமாய் - அந்த ஒளிகளுக்குள் எந்த ஒளியையும் விரும்பா இயற்கைப் பேரொளியாகி, (எ-று.)

(வி-ரை.) இவைகள், பிரமனாதிய ஐம்பெரும் தலைவர்களின் நிறங்கள். எந்நிறம் இயல்நிறம் என்பவைகளில், நிறம் - ஒளி எனும் பொருளில் உள. (26)

**-முந்நிறத்திற்**

27. **பூப்பதுவாய்க் காப்பதுவாய்ப் போக்குவதாய்தேக்குவதாய்**
**நீப்பதுவாய்த் தன்னுள் நிறுத்துவதாய்**

(ப-ரை.) முந்நிறத்தில் பூப்பதுவாய் காப்பதுவாய் போக்குவதாய் - (பொன்னிற வெண்ணிற செந்நிறம் எனும் அம்) மூவண்ணத்தில் படைப்பதாய், வளர்ப்பதாய், சங்கரிப்பதான தொழில்களை வைத்ததாய்; தேக்குவதாய் நீப்பதுவாய் தன்னுள் நிறுத்துவதாய் - (பிற இரு நிறங்களில் உயிர்கட்குப்) பாசப் பெருக்கம் படர்விப்பதாய், (பிறகு அவைகளைப்) பெயர்ப்பதாய், தன்னுள் நிறுத்திக் கொள்ளும் அநுக்கிரகதைச் செய்விப்பதாய், (எ-று.)

(வி-ரை.) படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தும், பிரமன் திருமால் உருத்திரர் மகேசர் சதாசிவர் எனும் ஐவர்களால் ஆகின்றன; சொரூப ஜோதி, அவர்களில் அமைத்த அந்த ஐந்து நிறங்களே அவைகளைச் செய்விக்கின்றன என்று அறிவித்தபடி. (27)

**-பூப்பதின்றி**

28. **வாளா திருப்பதுவாய் வாதனா தீதமதாய்**
**நீளாது நீண்ட நிலையினதாய்**

(ப-ரை.) பூப்பது இன்றி- (எதையும்) தோற்றுவிக்கும் தொழிலின்றி; வாளாது இருப்பதுவாய் - சும்மா இருப்பதாய்; வாதன அதீதமாய் - (விஷய) வாசனைகளுக்கு

அப்பாற்பட்டதாய்; நீளாது நீண்ட நிலையினதாய் - நீள வேண்டும் என்னும் நினைவு இன்றியே (எங்கும்) நீண்டிருக்கும் நிறையும் பூரண நிலையினதாய், (எ-று.)

(வி-ரை.) பூப்பு - மலர்விப்பு எனும் படைப்பு நியதி. வாளாது - வாளா; இது சும்மா இருக்கும் நிலை. வாசனை என்பது வாதனை யென நின்றது; பொறி வாசனை, புலவாசனை, குணவாசனை, காலவாசனை, கர்மவாசனை, கருவாசனைகட்கு அகப்படாதது என்பது குறிப்பு. நீளல் - "சூளதாமறைச் சென்னியும் தொடத் தொட நீண்ட நீளன் நீ" என்று பரஞ்சோதியார் கூறுவது போல் நீளும் நினைவின்றியே அப்பால் ஆதல். (28)

**-மீளாப்**

**29. பெரிதாய்ச் சிறிதாய்ப் பெரிதும் சிறிதும்**
**அரிதாய் அரிதில் அரிதாய்த்**

(ப-ரை.) மீளாப் பெரிதாய் - (அடைந்தவரை) மீளவிடாத பெரிய பொருளாய்; சிறிதாய்-(மிகச்) சிறிய அணுவாய்; பெரிதும் சிறிதும் அரிதாய் - பெருமையும் சிறுமையும் இயல்பாகத் (தன்னில்) இல்லாததாய்; அரிதில் அரிதாய் - அரிதான எதனினும் (அறிய) அரியதாகி, (எ-று.)

(வி-ரை.) "இரும்புண்ட நீரில் திரும்பாத வீடு" ஆதலின், 'மீளாப் பெரிதாய்' என்றார். "அனோரணியாம் மகதோ மகதாம்" என்ப ஆதலின், 'பெரிதாய்ச் சிறிதாய்" என்றார். "பெருமையும் சிறுமையும் தான் தர வருமே" என்பது ஆன்ம இயல்பு; பரத்தில் அந்த இரண்டும் இல்லையாதலின், "பெரிதும் சிறிதும் அரிதாய்" என்றார். காண அரியது, கருத அரியது, எண்ண அரியது, ஏத்த அரியதாதலின், 'அரிதில் அரிதாய்' என்றார். (29)

**-துரிய**

**30. வெளியாய்ப் பரவெளியாய்ப் மேவுபர விந்தின்**
**ஒளியாய்ச் சிவானந்த வூற்றாய்**

(ப-ரை.) துரிய வெளியாய் - துரிய பத ஆகாயமாய்; பரவெளியாய் - ஞான ஆகாயமாய்; மேவு பர விந்தின் ஒளியாய் - விரும்பும் பரவிந்துவின் ஜோதியாய்; சிவானந்த ஊற்றாய் - ஊற்றெடுத்துப் பெருகும் சிவாநந்தமாகி, (எ-று.)

(வி-ரை.) சாக்கிர, சொப்பன, சுழுத்தி கடந்த நாலாம் பதம் துரியவெளி. பரவெளி - சிதாகாயம். அபரவிந்து விற்கு அப்பாற்பட்டது பரவிந்து. (30)

**-தெளியாதி**

**31. கற்பமாய்க் காணுஞ்சங் கற்ப விகற்பமாய்**
**நிற்பதா கார நிருவிகற்பாய்**

(ப-ரை.) தெளி ஆதி கற்பமாய் - தெளிவுடைய முதல் கற்ப காலம் ஆகி; காணும் சங்கற்ப விகற்பமாய் - காணப் பெறுகிற நினைவொடு, (அதன்) வேறுபாடு ஆகி; நிற்பது ஆகார நிருவிகற்பாய்-வேறுபாடு இல்லாத சொரூபமாக விளங்குவது ஆகியும். (எ-று.)

(வி-ரை.) உலகம் அழியும்; அதன்பின் ஆரம்பம் ஆவது, ஆதி கற்ப காலம். சங்கற்ப விகற்பம் - நினைப்பு மறப்பு. நிர்விகல்பம் - விகற்பம் இல்லாதது; விகல்பம் - வேறுபடும் நிலைமை. (31)

**-பொற்புடைய**

32. **முச்சுடராய் முச்சுடர்க்கு முன்னொளியாய்ப் பின்னொளியாய்**
**எச்சுடரும் போதா இயற்சுடராய்**

(ப-ரை.) பொற்புடைய முச்சுடர் ஆய் - பொலிவு மிகுந்த (பரிதி மதி கனல் எனும்) மூன்று ஒளிப் பிழம்பாய்; முச்சுடர்க்கும் முன் ஒளியாய் பின் ஒளியாய் - மூன்று சுடர்களும் தோன்றுதற்கு முன்னும் பின்னும் மொய்த்த ஒளி வெள்ளமாகி; எச்சுடரும் போதா இயல் சுடராய் - எந்த ஒளிகளும் ஒப்பாகாதபடி இயற்கைப் பேரொளியாகியும், (எ-று.)

(வி-ரை.) முச்சுடர்களே தடத்த உருவில் முக்கண்கள் என்பர் முன்னோர். முன்னிருந்த ஒளியில் இருந்து முச்சுடர்கள் எழுந்தன. உலக அழிவின் பின் மதி பரிதி கனல் தோன்றா. அவைகளை உருவாக்கப் பின் பின்னொளியாகவும், பிறங்கும் சொரூபஒளி தோற்றுவிப்பார் இன்றியே இயல்பில் தோன்றும் ஒளி எனும் அருமையே அருமை. (32)

**-அச்சில்**

33. **நிறைவாய்க் குறைவாய் நிறைகுறை வில்லாதாய்**
**மறைவாய் வெளியாய் மனுவாய்**

(ப-ரை.) அச்சில் நிறைவாய் குறைவு ஆய் - (உயிர் குடியிருக்கும்) உடல்களில் நிறைவாகியும், (ஏற்றத்தாழ்வான) குறைவாகியும்; நிறை குறைவு இல்லாதாய் - நிறைவோ குறைவோ இரண்டும் இல்லாததாகியும்; மறைவாய் வெளியாய் - (அதி) ரகஸ்யப் பொருளாகியும் வெளிப்படையானது ஆகியும்; மனுவாய் - மந்திர சொரூபம் ஆகியும், (எ-று.)

(வி-ரை.) அச்சு - உடலையும் உயிரையும் உணர்த்திய ஒரு சொல். சாதனைக்குத் தக்கபடி, நிறைவு குறைவு இரண்டும் இல்லாமல், மறைந்தும் வெளிப்பட்டும், மந்திர நாதமாகவும் உள்ளது சொரூப நிலை. (33)

**-மறையாத**

**34. சச்சிதா நந்தமதாய்த் தன்னிகரொன் றில்லாதாய்**
**விச்சையால் எல்லாம் விரிப்பதுவாய்**

(ப-ரை.) மறையாத சச்சிதாநந்தமாய் - மறைந்து போகாத சச்சிதாநந்த சொரூபமாய்; தன் நிகர் ஒன்று இல்லாதாய் - தனக்கு ஒப்பான ஒரு பொருள் இல்லாததாய், விச்சையால் எல்லாம் விரிப்பதுவாய் - ஞானமாக விளங்கி எந்த ரகசியத்தையும் விளம்பரப் படுத்துவதாகி, (எ-று.)

(வி-ரை.) சத் - மெய்; சித்-அறிவு; ஆநந்தம் - இன்பம்; இம் மூன்றுமான சொரூபம் சச்சிதாநந்தம். சமான ரகிதம் எனச் சுருதி கூறுவது போல், தனக்கு ஒப்பானதும் மிக்கானதும் இல்லாதது ஆதலின், 'தன்னிகர் ஒன்று இல்லாதாய்' என்றார். விச்சை-வித்தை; சகரதகரப் போலி; இது விசேட ஞானம் எனும் பண்புப் பெயர். விரித்தல் - விரிவுரை செய்தல். (34)

**-மெச்சுகின்ற**

**35. யோகமாய் யோகியர் யோகத் தெழுந்தசிவ**
**போகமாய்ப் போகியாய்ப் போகமருள்-ஏகமாய்க்**

(ப-ரை.) மெச்சுகின்ற யோகமாய் - சிறக்கப் பாராட்டும் சிவயோகமாகி; யோகியர்கள் யோகத்து எழுந்த சிவ போகமாய் - ஞான யோகிகளின் யோகத்தில் உதயமான சிவபோகமாகி; போகியாய் - சிவபோகி எனும் பெயராகி; போகம் அருள் ஏகமாய் - சிவபோகத்தைப் பரிபாகிகட்கு அருள்கிற ஒரு முதலாகியும், (எ-று.)

(வி-ரை.) யோகம் - சீவன் சிவத்தில் ஒன்றும்நிலை. ஒன்ற ஒன்ற, இருமை கெட்டு ஒன்றாதல் சிவபோகம் எனப்பெறும். "புணர்ப்பது ஒக்க எந்தை என்னை ஆண்டு பூண நோக்கினாய்" என்று திருவாசகம் தெரித்தாங்கு, "போகம் அருள் ஏகம்" என்றார். "யானாகிய என்னை விழுங்கிவெறும், தானாய் நிலைநின்றது தற்பரமே" என்பது கந்தர் அனுபூதி. (35)

**36. கேவலமாய்ச் சுத்த சகலமாய்க் கீழ்ச்சகல**
**கேவலங்கள் சற்றுங் கிடையாதாய்**

(ப-ரை.) கேவலமாய் - கேவலாவஸ்தையாய்; சுத்த-சுத்தாவஸ்தையாய். சகலமாய் - சகலாவஸ்தையாய்; கீழ்-கீழான; சகல கேவலங்கள் சற்றும் கிடையாதாய் - (அந்த) சகல கேவல அவஸ்தைகள் ஒன்றும் இல்லாததாய்.

(வி-ரை.) காரிய அவத்தை ஆகிய கேவலம் சகலம் சுத்தம் எனும் மூன்றற்கும் காரணமாக, கேவல சகல சுத்தம் எனும் மூன்று அவஸ்தைகள் வேறு உள.

இச்சை, அறிவு, செயல் மூன்றும் சிறிதும் தொழிற்படுதல் இன்றி, ஆன்மா தனித்து ஆணவத்துடன் சேர்ந்து நிற்கும் சிறுமை நிலை, கேவல நிலை எனப்பெறும்.

ஆணவத்தொடு சேர்ந்து நின்ற ஆன்மா, பிறகு உடல் கரணம் முதலியவைகளுடன் இறைவன் சேர்ப்பிக்கச் சேர்ந்து, இச்சை அறிவு செயல் ஒரு அளவு விளங்கி நிற்கும் நிலை, சகல நிலை.

அங்ஙனம் உடல் கரணங்களோடு சேர்ந்து நின்ற ஆன்மா, ஆணவம் முதலிய ஐந்து அழுக்குகளும் நீங்கி, பிறவியின்றி, சிவத்தொடு சேர்ந்து, இச்சை செயல் ஞானம் எங்கும் ஆகி வியாபித்து விளங்குவது, சுத்த நிலை.

கேவல நிலையில் உயிர்க்கு உடம்பில்லை; தத்துவங்கள் இல்லை; மனம் முதலிய கருவிகள் இல்லை; இச்சை அறிவு செயல் எதுவும் இல்லை; தனக்கென ஒரு சுதந்தரம் இல்லை. ஆணவம் மட்டும் இருக்கும். (கேவலம்-எதுவும் இன்மை.)

சகல நிலையில் உடம்புண்டு; தத்துவச் சேர்க்கையுண்டு; அறிவு முதலிய குணங்கள் உண்டு; மனம் முதலிய கருவிகள் உண்டு; இச்சை அறிவு செயல்கள் உண்டு; விஷயங்களில் விருப்பம் உண்டு; போக அனுபவத்தில் பிறத்தல் இறத்தல் பெரிது உண்டு. (சகலம்-யாவும் உண்டு.)

சுத்த நிலையில் நல்வினை தீவினை சமமாகி, சிவசத்தி பதிதலால் குருஅருள் கொண்டு, ஞான யோகத்தை ஏற்று, விருப்பு வெறுப்பு எனும் பழைய வாசனை விலகி, சிவஞானத்தைப் பெருக்கிச், சிவனருள் எய்தி யிருக்கும் சிறந்த நிலையாம். மேலும் விரித்தால், இவைகள் கடல்போல் விரியும் ஆதலின், ஓரளவு தொகுத்து உரைக்கப் பெற்றது. சமயம் வாய்க்கும் போது, இவைகளைச் சிறிது சிறிதாகப் பார்ப்பம்.(36)

**-மாவலத்தில்**

**37. காட்சியாய்க் காண்பானாய்க் காணப் படுபொருளாய்ச்**
**சூட்சியாய்ச் சூட்சியால் தோய்வரிதாய்**

(ப-ரை.) மா வலத்தில் காட்சியாய் காண்பானாய் காணப்படு பொருளாய் - மிக்க உரத்தொடு காட்சி காண்பான் காணப்படு பொருள் (எனும் பொருள் ஆராய்வு) ஆகியும்; சூட்சியாய் - அதி தந்திரம் ஆனதாய்; சூட்சியால் தோய்வு அரிதாய் - (அத்) தந்திரத்தால் அடைய அரிதாகியும், (எ-று.)

(வி-ரை.) காட்சியை-ஞானம் என்றும், காண்பானை-ஞாதுரு என்றும், காணப்படு பொருளை ஞேயம் என்றும் கூறுவது வடமொழி மரபு. “இத்தந்திரத்தில் காண்டும் என்று இருந்தோர்க்கு, அத்தந்திரத்தில் அவ்வயின் ஒளித்தும்” என்று திருவாசகம் கூறுவதுபோல், “சூட்சியால் தோய்வரிதாய்” என்றார். (37)

**-மாட்சிபெறச்**

**38. செய்பவனாய்ச் செய்தொழிலாய்ச் செய்பொருளாய் செய்தொழிலால்**
**உய்பவனாய் உய்விக்கும் உத்தமனாய்**

(ப-ரை.) மாட்சி பெற செய்பவனாய் - சிறப்புற (ஒரு செயலைச்) செய்பவன் ஆகியும்; செய்தொழிலாய் - செய்யும் செயலாகியும்; செய்பொருள் ஆய் - செய்யப்படு பொருள் ஆகியும்; செய் தொழிலால் உய்பவன் ஆய் - செயப்பெறும் செயலால் உயிர் வாழ்பவன் ஆகியும்; உய்விக்கும் உத்தமனாய் - (அவ் உயிரை) உய்யச் செய்யும் உத்தமத் தலைவனாகியும், (எ-று.)

(வி-ரை.) செய்பவன், செய்தொழில், செய்யப்படுபொருள், உரிய அப்பொருளால் உய்பவன், உய்விக்கும் அப்புருடோத்தமனாய் எனவரும் யாவும் ஒரு முதலுடைமை என்று உணர்த்தியபடி. (38)

**-மொய்கொள்**

**39. அதுவாய் அவளாய் அவனாய் அவையும்**
**கதுவாது நின்ற கணிப்பாய்**

(ப-ரை.) மொய்கொள் அது ஆய் - அளவிலாது அமைந்த அது ஆகி; அவளாய்-, அவனாய்-, அவையும் கதுவாது நின்ற கணிப்பாய்-(மேல் குறித்த) அவைகளும் படர்ந்து வந்து பற்றாதபடி யிருந்த (உயர்ந்த) மதிப்பிற்கு உரியதாய், (எ-று.)

(வி-ரை.) **"அவன் அவள் அது எனும் அவை**
**மூவினைமையின், தோன்றி திதியே ஒடுங்கி மலத்து**
**உளதாம், அந்தம்ஆதி என்மனாய் புலவர்"**

எனும் சிவஞான போத நுட்பம், இதனில் இணங்கி இருத்தலை அறிக. மொய்-அளவின்மை. கதுவுதல்-கவ்விப் பற்றுதல். கணிப்பு-மதியால் செய்யும் மதிப்பு. (39)

**<u>சான்றோரிற் சார்தல்</u>**

**-கதுவாமல்**

**40. ஐயந் திரிபோ டறியாமை விட்டகற்றிப்**
**பொய்யென்பதொன்றும்பொருந்தாராய்ச்_செய்யென்ற**

**41. ஓர்வினையில் இன்பமுமற் றோர்வினையில் துன்பமுமாம்**
**சார்வினைவிட்டோங்குந்தகையினராய்ப்-பார்வினையில்**

**42. ஓர்பால் வெறுப்புமற்றை யோர்பால் விருப்புமுறும்**
**சார்பால் மயங்காத் தகையினராய்ச்-சார்பாய்**

43. ஓரிடத்தில் தண்மையுமற்றோரிடத்தில் வெஞ்சினமும்
பாரிடத்திற் கொள்ளாப் பரிசினராய்-நீரிடத்தில்

44. தண்மைநிக ராதொன்றும் சாந்தம் பழுத்துயர்ந்த
ஒண்மையுடன் ஒன்றை யுணர்ந்தவராய்-வெண்மையிலா

45. ஒன்றும் அறிவின் உதயாதி யீறளவும்
என்றும் இரண்டென்ப தில்லவராய்-மன்றவொளிர்

46. அம்மூன்றின் உள்ளே அடுக்கிவரும் ஒன்றகன்ற
மும்மூன்றின் மூன்றும் முனிந்தவராய்த்-தம்மூன்றி

47. வீடாது நின்றும் விரிந்தும் விகற்பநடை
நாடாது நான்கும் நசித்தவராய்-ஊடாக

48. எஞ்சாமல் அஞ்சின் இடமாய் நடமாடும்
அஞ்சாதி அஞ்சும் அறுத்தவராய்-எஞ்சாமல்

49. ஈண்டாண் டருளும் இறையோர் தமையாறில்
ஆண்டாண்டு கண்டா றகன்றவராய்-ஈண்டாது

50. வாழியுற்ற வானோரும் வந்து தமக்கிரண்டோ
டேழியற்ற ஏழும் இகந்தவராய்-ஊழியற்றக்

51. கட்டிநின்றுட் சோதியொன்று காணத் தொடங்குகின்றோர்
எட்டுகின்ற எட்டின்மேல் எய்தினராய்க்-கட்டுகின்ற

52. தேன்றோய் கருணைச் சிவங்கலந்து தேக்குகின்ற
சான்றோர்தம் உள்ளம் தணவாதாய்

(ப-ரை.) கதுவாமல் - பற்று இல்லாமல்; ஐயம் திரிபோடு அறியாமை விட்டு அகற்றி-சந்தேகம், மயக்கம், அஞ்ஞானம் (மூன்றையும்) விட்டொழித்து; பொய் என்பது ஒன்றும் பொருந்தாராய்-பொய் எனப் பெறுவது ஒரு சிறிதும் இல்லாதவராய், (எ-று.)

(கு-பு.) ஐயம் - நட்டு வைத்த கட்டையை இரவில் பார்த்து, கட்டையோ கள்ளனோ எனல்; பித்தளையைக் கண்டு பித்தளையோ பொன்னோ எனல்; வெயிலில் தூரத்தில் இருக்கும் கிளிஞ்சலைக் கண்டு வெள்ளியோ கிளிஞ்சலோ எனல்; இவைகள் ஐயத்தின் பாற்படும். திரிபு -இரவில் கயிற்றைக் கண்டு, பாம்புதான் என்று தீர்மானமாக எண்ணிப் பயப்படுதல். பொய்-'உள்ளீடு இல்லாமை' என்பர் பரிமேலழகர். (40)

(ப-ரை.) செய் என்ற ஓர் வினையில் இன்பமும் - செய்தல் எனப் பெறும் ஒரு தொழிலில் இன்பமும்; மற்று ஓர் வினையில் துன்பமும் ஆம்-பிறிது ஒரு தொழிலில்

துன்பமும் ஆகிய; சார்வினை விட்டு ஓங்கும் தகையினராய் - பற்றை விலக்கி (எதையும் சமமாகப் பார்த்து) உயரும் தகுதியையுடையவராய், (எ-று.)

(கு-பு.) ஞானிகட்கு வினையளவாக நன்மையே விளையினும் தீங்கே நேரினும், இன்பம் துன்பம் எய்துவது இல்லை என்றபடி. சார்பு-பற்றுக்கோடு. (41)

(ப-ரை.) பார் வினையில் ஓர் பால் வெறுப்பும்-உலகச் செயல்களில் ஒருபுறமும் வெறுப்பும்; மற்றை ஓர்பால் விருப்பும் உறும் -பிறிது ஒருபுறம் விருப்பும் கொள்ளும்; சார்பால் மயங்காத் தகையினராய் - (அகம் புறம் எனும்) இருசார்பாலும் மயங்காத தக்க கம்பீரமுடையவர்களாய், (எ-று.)

(கு-பு.) பார்-நிலவுலகம். வினை-தொழில். (42)

(ப-ரை.) பார் இடத்தில் - உலகில்; சார்பு ஆய ஓர் இடத்தில் தண்மையும்-பற்றான ஒரு இடத்தில் குளிர்ந்த அருளும்; மற்றும் ஓர் இடத்தில் வெம் சினமும் கொள்ளப் பரிசினராய்-பிறிதொரு இடத்தில் வெம்மைக் கோபமும் கொள்ளாத இயல்பை யுடையவர்களாய், (எ-று.)

(கு-பு.) தண்மை-கருணை, பரிசு-சுபாவம். (43)

(ப-ரை.) நீர் இடத்தில் தண்மை நிகராது என்றும் சாந்தம் பழுத்து-நீரின் இடத்தில் உள்ள குளிர்ச்சியும் நிகரல்ல எனுமாறு எந்நாலும் (முதன்மைச்) சத்துவ குணம் முதிர்ந்து; உயர்ந்த ஒண்மையுடன் ஒன்றை உணர்ந்தவராய்-மிக மேலான ஒளிமய உணர்வுடன் ஒப்பற்ற மெய்ப்பொருளை உணர்ந்தவர்களாய், (எ-று.)

(கு-பு.) நிகராது-ஒப்பாகாத அளவு. ஒண்மை ஒளிமயமான ஞானம். ஒன்று-ஒப்பற்ற பிரமம். (44)

(ப-ரை.) வெண்மை இலா ஒன்றும் அறிவின் உதயாதி ஈறு அளவும் - வெளிற்று அறிவு இல்லாமல் பொருந்தி யிருக்கும் தூய அறிவின் ஆதிமுதல் அந்தம்வரை; என்றும் இரண்டு எனபது இல்லாராய்-(தெய்வம் ஒன்றே;) எந்நாளிலும் இரண்டு என்று எண்ணும் நிலை இல்லாதவராய், (எ-று.)

(கு-பு.) வெண்மை-அறியாமை. ஒன்றும் அறிவு-ஏகமான ஞானம். உதயாதி யீறு-பிறந்த நாள் முதல் இறுதி நாள் வரை. இரண்டு என்பது இல்லார் - ஏகமே அத்விதீயம்' என்றபடி, (பல மூர்த்தி பேதமாகக் காணப் படினும் மெய்ப்பொருள்) இரண்டில்லை ஒன்றேதான் என்று நிச்சயித்த உணர்வினர் என்றபடி. (45)

(ப-ரை.) மன்ற ஒளிர் அம்மூன்றின் உள்ளே -பெரிதும் பிரகாசிக்கும் (கேட்டல், சிந்தித்தல், தெளிதல் எனும்) அம்மூன்றனுள்; அடுக்கி வரும் ஒன்று அகன்ற மும்மூன்றின் (ஒன்றன் பின் ஒன்றாகத்) தொடர்ந்து வரும் (இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தியானம், தாரணை, சமாதியாகிய) எண்வகை யோக

சாதனையில்; மூன்றும் முனிந்தவராய்-(காமம் வெகுளி மயக்கம்) மூன்றையும் முறியடித்தவர்களாய், (எ-று.)

(கு-பு.) மன்ற-நிரம்ப. அம்மூன்றின் உள்ளே-(குரு முகமாகச் சிரவணித்தல், சிரவணித்ததை இடையறாது எண்ணுதல், அதன் வழியே தெளிதல் எனும்) அந்த மூன்று வழியுள். மும்மூன்று-ஒன்பது; ஒன்று அகன்ற எனவே எட்டு என்னும் எண்ணுப் பொருளில் நின்றது. அடுக்கி வரல் -ஒன்றன்பின் ஒன்றாய்த் தொடர்தல். முன் பின்னாக அனுட்டானம் மாறமேல் முரணும்; சாதனை சித்திக்காது என்பது குறிப்பு. மூன்று-ஒன்றை விரும்பலும், அது நிறைவேறாத காலத்து சினத்தலும், அதனிலேயே அறிவு மயங்கலும் ஆதிய முத்தோஷங்கள்.

**அட்டங்க யோகமாவன:-**

1. இயமம்-தீயவைகளில் சிந்தை செல்லாதபடி கட்டிப் படுத்தல்; இயமம் தவறினவரைத் தண்டிக்கவே இயமன் உளன் என்பர்.

“கொல்லான், பொய்கூறான், களவிலான், எண்குணன்,

நல்லான், அடக்கம் உடையான், நடுச்செய்ய

வல்லான், பகுந்துண்பான், மாசிலான், கள்காமம்

இல்லான் இயமத்து இடையில் நின்றானே”

என்பது திருமந்திரம். (எண்குணன் - எண்ணத் தக்க நல்ல குணமுடையவன்.)

2. நியமம்-பரத்தில் இடையறாத விருப்புடன், விதிமுறை வழுவா ஒழுக்க விளைவு.

**“தூய்மை, அருள், ஊண் சுருக்கம், பொறை, செம்மை,**
**வாய்மை நிலைமை வரைதலே மற்றிவை,**
**காமம், களவு, கொலையெனக் காண்பவை**
**நேமிஈ ரைந்தும் நியமத்தன் ஆமே.”**

(நிலைமை வரைதல்-உறுதியுடைமை. நியமித்தல் என்பது, நேமித்தல் என நின்றது. ஈர் ஐந்து - பத்துத் தன்மை.)

3. ஆதனம்-உடம், உள்ளம் முதலியவைகளால் உளதாகும் இராஜஸ குணத்தைத் தடுக்கும்; இது, பத்மாசனம் சுகாசனம் முதலிய 126 வகை.

4. பிராணாயாமம்-இது சுவாசத்தைக் கட்டுப்படுத்தல்.

**“ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்**
**காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாரில்லை**
**காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாளர்க்குக்**
**கூற்றை உதைக்கும் குறியது ஆமே”.**

5. பிரத்தியாகாரம்-பிராணனைத் திருப்புதல்; மதுவைப் பருகும் வண்டு, மணத்தை விரும்புவது இல்லை; அதுபோல் நாத தரிசனத்தில் ஆர்வம் கொண்ட ஆன்மா, மணமுள பொருள்களை, மங்கையரின் ஐம்புல இன்பங்களை ஆவலிக்காமல், அந்தரங்க இடங்களை அறிந்து, அங்கங்கே மனம் லயப்பட சுவாசத்தை நிறுத்தினால், பல நலம் விளைதலைப் பார்க்கலாம்

**“கண்டுகண் டுள்ளே கருத்துற வாங்கிடில்**
**கொண்டு கொண்டுள்ளே குணம்பல காணலாம்”.**

6. தாரணை-தரிக்க வைத்தல்; நிலைபெற நிறுத்துதல். பிராணாயாமம் விதிப்படிப் பன்னிரண்டு செய்தால், பிரத்தியாகாரம் எனும் ஓட்டமற்ற நிலை உளதாகும்; அப்பிரத்தியாகாரம் பன்னிரண்டு செய்தால், தாரணை எனப்பெறும்.

**“கோணா மனத்தைக் குறிக்கொண்டு கீழ்க்கட்டி**
**வீணாத்தண் டூடே வெளியுறத் தானோக்கிக்**
**காணாக்கண், கேளாச் செவியென் றிருப்பார்க்கு,**
**வாணாள் அடைக்கும் வழியது ஆமே”.**

7. தியானம்-தாரணை செயப்பெற்ற இடத்தில், பரத்தை உணர்ந்து இருக்கும் பயனான நிலை.

**“ஒண்ணா நயனத்தில் உற்ற ஒளிதன்னைக்**
**கண்ணாரப் பார்த்துக் கலந்தங் கிருந்திடில்**
**விண்ணாறு வந்து வெளிகண் டிடஓடிப்**
**பண்ணாமல் நின்றது பார்க்கலும் ஆமே”.**

8. சமாதி:-இறையும் உயிரும் இரண்டறக் கலந்து, சங்கற்ப விகற்பங்கள் இல்லாது இருக்கும் உயர் நிலை.

**“சமாதியில் எட்டெட்டுச் சித்தியும் எய்துமே”**

எனவரும் திருமூலர் கருத்துகள், இங்கு எண்ணத் தக்கவை.

(ப-ரை.) தம் ஊன்றி வீடாது நின்றும் - தம்மில் அழுந்திக் கெடாமல் இருந்தும்; விரிந்தும் - (சிவஞான) விருத்தி சித்தித்தும்; விகற்ப நடை நாடாது-மாறுபடும் நடையை

மதிக்காமல்; நான்கும் நசித்தவராய் - (மனம் புத்தி சித்தம் அந்தக் கரணங்கள்) நான்கின் சேட்டையை அடக்கியவர்களாய், (எ-று.)

(கு-பு.) மனம் - ஒன்றை மனனம் செய்யும்; புத்தி-எண்ணியதைச் சிறக்க ஊன்றிச் சிந்திக்கும்; சித்தம் - நினைத்ததே சரி என்று நிச்சயிக்கும்; அகங்காரம்-அகங்கரித்துச் செயலில் ஆழும்; பாழும் இவைகளால் வருகின்ற பழுதுபல. (47)

(ப-ரை.) ஊடாக எஞ்சாமல்-நடுவே பின் வாங்கி நகராமல்; அஞ்சின் இடமாய் நடமாடும்-(மெய் வாய் கண் மூக்கு செவி யெனும் அறிகருவிகள்) ஐந்தின் இடமாக நடந்து; அஞ்சாதி அஞ்சும் அறுத்தவராய்-(சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் எனும்) ஐம்புல(ன்களை முதலாககொண்ட) ஐந்து ஆசைகளையும் அறுத்தவராய், (எ-று.)

(கு-பு.) ஊடு-நடு. எஞ்சாமை-பிற்படாத தன்மை. அஞ்சு மூன்றனுள் முதலைந்து-ஞானேந்திரியங்களையும், அடுத்த ஐந்து ஐம்புலன்களையும், அதை யடுத்த ஐந்து ஆசைகளையும் அறிவித்தன.

**“ஆசை யறுமின்கள் ஆசை யறுமின்கள்**
**ஈசனோ டாயினும் ஆசை யறுமின்கள்”**

என்பது திருமந்திரம். (48)

(ப-ரை.) ஈண்டு எஞ்சாமல் ஆண்டருளும் இறையோர்தமை-இவ்வுலகில் கைவிடாமல் ஆட்கொண்டு அருள்பாலிக்கும் இறை முதல்களை; ஆறில் ஆண்டு ஆண்டு கண்டு ஆறு அகன்றவராய்-ஆறு ஆதாரங்களிலும் அங்கங்கே தரிசித்து, (அந்த) வழி தாண்டி மேல் சென்றவர்களாய், (எ-று.)

(கு-பு.) ஈண்டு-இப்பிரகிருதி உலகில். எஞ்சாமை-தடைபடாமை. இறையோர்-கணபதி, பிரமன், திருமால், உருத்திரர், மகேசர், சதாசிவர் முதலினோர்.

ஆறில் ஆண்டாண்டு கண்டு-மூலாதாரத்தில் கணபதியை, சுவாதிட்டானத்தில் நான்முகரை, மணிபூரகத்தில் திருமாலை, அநாகதத்தில் உருத்திரரை, விசுத்தியில் மகேசரை, ஆக்ஞையில் சதாசிவரை முறையே தரிசித்து.

ஆறு அகன்றவர்-அதற்கு அப்பால் ஆன பிரமரந்திரத்தில் போய்ச் சேர்ந்தவர்; இவைகளை விரித்தால் மிகப் பெருகும்; அனுட்டானத்தர் இரகசியமாய்ப் பேசும் செய்திகள் இவை. (49)

(ப-ரை.) ஈண்டாது-சேய்மையில் இராதபடி; வாழி உற்ற வானவரும் வந்து-வாழும் வளர்ச்சியுற்ற தேவர்களும் அணுகி; தமக்கு இரண்டோடு எழ் இயற்ற-தமக்கு ஒன்பது வகையில் அன்பு செலுத்த; ஏழும் இகந்தவராய்-எழு பிறவிக் கடலைக் கடந்தவராகியும், (எ-று.)

(கு-பு.) எதிர் கொள்ளல், வணங்கல், ஆசனத்து அமர்த்தல், பாதபூஜை செய்தல், திருவடிகளை அர்ச்சித்தல், தூபம் கொடுத்தல், தீபம் காட்டல், புகழ்ந்து போற்றல், திருவமுது உண்பித்தல் ஆதிய ஒன்பது வகையில் தம் அன்பைச் செலுத்துதலை, 'இரண்டோடு ஏழியற்ற' என்றார். ஏழ் இகத்தல்-தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம் எனும் ஏழுவகைப் பிறவிகளைத் தாண்டுதல். (50)

(ப-ரை.) ஊழ் இயற்ற கட்டி நின்று-முறைப்படியமைய (பிராணனைக்) கட்டுப் படுத்தி யிருந்து; உள்சோதி ஒன்று காணத் தொடங்குகின்றோர்-அகமுகமான ஒப்பற்ற பர ஒளியைத் தரிசிக்க ஆரம்பித்தவர்கள்; எட்டுகின்ற எட்டின்மேல் எய்தினராய்-எட்டிப் பிடிக்க இணங்குகின்ற அட்ட மூர்த்தங்கட்கு மேல் நிலையில் எய்தியவர்களாய்,(எ-று.)

(கு-பு.) ஊழ் - (சாதன) விதிமுறை. கட்டுதல்-பிராணாயாமம் புரிதல். எட்டு-மண், நீர், கனல், காற்று, விண், மதி, பரிதி, ஆன்மா எனும் எட்டு இடங்கட்கு அதிதேவர்கள், அட்ட மூர்த்தங்கள் எனப்பெறுவர். (51)

(ப-ரை.) கட்டுகின்ற தேந்தோய் கருணை சிவம் கலந்து தேக்குகின்ற-(ஈக்கள்) தொகுக்கின்ற தேன்போல் இனிக்கும் கருணையையுடைய சிவத்தில் கலந்து, எங்கும் வியாபகமாக இருக்கின்ற; சான்றோர்தம் உள்ளம் தணவாதாய்-பெருமக்களின் மனத்தில் இருந்து பிரியாததாய், (எ-று.)

(கு-பு.) தேக்குதல்-எங்கும் விளங்கி யிருத்தல்; அனுபவித்ததை பிறர் உணர வெளிப்படுத்துதல் எனினுமாம். தணவாமை-விட்டு விலகாத இயல்பு நிலைமை. (52)

## <u>புனித தாண்டவம் புரிதல்</u>

**-மான்றமலத்**

53. **தாக்கொழிந்து தத்துவத்தின் சார்பாந் தனுவொழிந்து**
**வாக்கொழிந்து மாணா மனம் ஒழிந்து-ஏக்கமுற**

54. **வாய்க்கும் சுகமொழிந்து மண்ணொழிந்து விண்ணொழிந்து**
**சாய்க்கும் இராப்பகலுந் தானொழிந்து-நீக்கொழிந்து**

55. **நானுமொழி யாதொழிந்து ஞானமொழியா தொழிந்து**
**தானும் ஒழியாமல் தானொழிந்து-மோனநிலை**

56. **நிற்கும் பிரம நிரதிசயா னந்தமதாய்**
**நிற்கும் பரம நிருத்தனெவன்**

(ப-ரை.) மான்ற மலத் தாக்கு ஒழிந்து-மயக்கை விளைவிக்கின்ற (நியதியற்ற) மும்மலங்களின் தாக்குதல் நீங்கி; தத்துவத்தின் சார்பு ஆம் தனு ஒழிந்து-(முப்பந்தாறு)

தத்துவங்களின் சார்பான சரீரமும் நீங்கி; வாக்கு ஒழிந்து-(ஓயாத) வாக்குகளின் செயல் ஒழிந்து; மாணா மனம் ஒழிந்து-மாண்பு இல்லாத மனமும் விலகி, (எ-று.)

(கு-பு.) மான்றல்-மயங்கல். மலம் -ஆணவ கன்ம மாயா மலங்கள் மூன்றையும் குறித்த பெயர். தாக்குதல் - மோதுதல். தத்துவங்களைக் குறித்த செய்தியைத் திருவடிப் புகழ்ச்சி யுரையில் அறிக. தனு-தேகம். தொடர்ந்து மும்மலம் தொல்லை தரும். தத்துவக் கூட்டான ரூபம், தலை வேதனையை என்றும் தருவது; மனோ வாக்குக் காயம் மூன்றும், என்றும் மற்போரிடும். அவைகளின் தொடர்பு அடியொடு அகன்று என்றபடி. (53)

(ப-ரை.) ஏக்கம் உற வாய்க்கும் சுகம் ஒழிந்து-ஏக்கம் அடையும்படி வாய்ப்பாக இருக்கும் சிறுமை இன்பம் ஒழிந்து; மண் ஒழிந்து விண் ஒழிந்து-(இதைத் தோற்றுவிக்கும்) மண்ணுலகம் ஒழிந்து, (தொன்மை) விண்ணுலகத் தோற்றங்களும் ஒழிந்து; சாய்க்கும் இராப் பகலும் தான் ஒழிந்து-(தலை) சாய வைக்கும் இரவும் பகலும் ஒழிந்து, (எ-று.)

(கு-பு.) ஏக்கம்-ஏங்கித் தவித்தல். சுகம்-சிற்றின்பம். “பேய்கள் மிருகங்களுக்கும் இணக்கவொரு பெண்ணுளதால் என்போலும் பாவிகளார்” என்று தவிக்க வைக்கும் தளர்வு நிலையிது. இராப்பகல் என்பதை மறப்பு நினைப்பு என்றும், கேவல சகலம் என்றும், இறப்பு பிறப்பு என்றும் கூறுவது நூல் வழக்கு. (54)

(ப-ரை.) நீக்கு ஒழிந்து-(நியதி செய்து) பிறித்த இடத்தில் (மிச்சமாக) நின்றது ஒழிந்து; நானும் ஒழியாது ஒழிந்து-நான் எனப்பெறும் காண்பானும் ஒழிவது தெரியாமல் ஒழிந்து; ஞானம் ஒழியாது ஒழிந்து-காட்சி எனும் ஞானம் ஒழிவது புரியாமல் ஒழிந்து; தானும் ஒழியாமல் தான் ஒழிந்து-தான் எனும் காணப்படு பொருளும் ஒழிவது விளங்காமல் ஒழிந்து, (எ-று.)

(கு-பு.) நீக்கு-மிச்சமாக நின்ற நிலை. நான், ஞானம், தான் என்பது, ஞாதுரு ஞானம் ஞேயம் எனும் முந்நிலை. ஒழியாது ஒழிதல் என எதிர்மறையும் உடன்பாடும் தோன்ற உரைக்கும் அருமையை, ஊன்றி உணர மனோலயம் உறும்.

(ப-ரை.) மோன நிலை நிற்கு பிரம நிரதிசயாநந்தம் அது ஆய் நிற்கும்-மவுன நிலையில் விளங்கும் நிரதிசய ஆநந்தப் பொருளாக நிற்கின்ற; பரம நிருத்தன் எவன் - ஞான நாடகன் எவன், (எ-று.)

(வி-ரை.) மோனம் - மவுனம்; இது, மனத்தின் உள் மலரும் நிலை. பிரமம்-பெரிய பொருள். நிர் அதிசயம் - அதிசயங்கட் கெல்லாம் அப்பாற்பட்டநிலை. மும்மலங்கள், தத்துவங்கள் திரிகரணங்கள், சிற்றின்பங்கள், மண், விண், சகல கேவலங்கள், ஞானம் ஞாதுரு ஞேயம், எஞ்சிய அனைத்தும் தோன்றாது, ஒழிந்த இடத்தில் ஒடுக்கம் உதிக்கும்; அந்த மவுன நிலையில், நிரதிசய இன்பப் பரம நாடகம் ஆடுபவன் எவன் தெரிகிறதா? என வினா எழுப்பி, அவனே சொலற்கரிய அருட் ஜோதியான் என, உய்த்துணர் வைப்பாக நம்மை உணர வைக்கிறார் வள்ளலார். “வான நாடரும் அறியொணாத நீ, மறையின் ஈறுமுன் தொடரொணாதநீ, ஏனை நாடரும்

தெரியொணாதநீ, என்னை இன்னிதா ஆண்டு கொண்டவா; வைத்தவா, ஞான நாடகம் ஆடுவித்தவா, நைய வையகத்து உடைய இச்சையே" எனவரும் திருவாசகத்நை இங்கு ஒப்பிட்டு நோக்க, உள்ளம் பாகாய் உருகுகின்றதே!

## திருவருள் வைபவம்

-தற்பரமாய்

57. **நின்றான் எவனன்பர் நேயமனத் தேவிரைந்து**
**சென்றான் எவன்சர்வ தீர்த்தனெவன்**

(ப-ரை.) தத்பரம் ஆய் நின்றான் எவன் -தனக்குத் தானே முதலாகி, (அநாதி காலம் தொட்டு) இருப்பவன் எவன்?; நேயமனத்தே விரைந்து சென்றான் எவன் - அன்புள உள்ளத்தில் உணரும் உருவாக, விரைந்து சென்று தங்குபவன் எவன்?; சர்வ தீர்த்தன் எவன் - திருத்தம் எய்திய எல்லா நீர் நிலையும் ஆனவன் எவன், (எ-று.)

(வி-ரை.) தனக்குத் தானே பரம், தற்பரம் எனப்பெற்றது. "மலர்மிசை ஏகினான்" எனும் திருக்குறட்கு, 'உணர்வார் உள்ளக் கமலத்தில் விரைந்து சேரும் மலரடியான்' எனும் கருத்தில் உரை கூறும் பரிமேலழகர், நம் நினைவில் நிழலிடுகிறார். 'தீர்த்தன்' எனும் பகுதியில், "ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய்" எனும் அப்பர் தேவாரம் நினைவிற்கு வருகிறது. (57)

-வன்தீமை

58. **இல்லான் எவன்யார்க்கும் ஈசன் எவன்யாவும்**
**வல்லான் எவனந்தி வண்ணனெவன்**

(ப-ரை.) வன் தீமை இல்லான் எவன் - வன்மையையுடைய தீங்கு ஒன்றும் இல்லாதவன் யாவன்; யார்க்கும் ஈசன் எவன்-(வானவர் மானவர்) யாவர்க்கும் இறைவன் யாவன்; யாவும் வல்லான் எவன்(எண்ணல் அளவில்) யாதனையும் இயற்றும் ஆற்றலாளன் யாவன்; அந்தி வண்ணன் எவன் - அந்தியில் தோன்றும் செந்நிறமுடையவன் யாவன், (எ-று.)

(வி-ரை.) அமல விமல நிமல நாமன் ஆதலின், 'வன்தீமை இல்லான்' என்றார். ஈசன் -சர்வஐஸ்வர்ய சம்பன்னன்; எனவே, யாவர்க்கும் பிரபு எனும் குறிப்பு இது. "அந்தி வண்ணத் தழகியர்" என்பது தமிழ் மறை. (58)

**-கல்லாலில்**

**59. சுட்டகன்ற ஞான சுகாதீதம் காட்டிமுற்றும்
விட்டகன்ற யோக வினோதனெவன்**

(ப-ரை.) கல்லாலில் கட்டு அகன்ற ஞான சுக அதீதம் காட்டி-கல்லால் நிழலில் இருந்து, பற்று முற்றும் அற்ற ஞான இன்ப முடிவு நிலையை(சின் முத்திரையால்) காண்பித்து; முற்றும் விட்டு அகன்ற யோக வினோதன் எவன் - முற்றும் துறந்த வினோத யோகியாக விளங்குபவன் யாவன், (எ-று.)

(வி-ரை.) கற்கத் தக்கவற்றைக் கற்பிக்க இடமாயிருந்தது பற்றி, அத்தரு ‘கல்லால்’ எனும் பெயரில் கவினுகின்றது. கட்டு-பந்தம். கட்டுள் கட்டுப் பட்டிருப்பது அஞ்ஞானம்; அகன்று இருப்பது மெய்ஞ்ஞானம். ஞானிகள் சுகம் காண்பர் எனவே, பிறர் துன்பிலே தோய்வர் என்பது சொல்லாமலே விளங்குகிறது அல்லவா. சுக+அதீதம்-சுகாதீதம்; இன்பத்தின் உச்சநிலை என்பது பெயர்ப்பொருள்; பிறவாரு பொருள் காண்பது பிழை. முற்றும் விட்ட நிலை ஒன்று; விட்டேம் எனும் நினைவி லிருந்தும் விலகி நிற்றலை, விட்டகன்ற யோக வினோதம் என்னும் அருமையே அருமை.

## எல்லாம் வல்ல சித்தன்

**-மட்டகன்ற**

**60. அண்டங்கள் எல்லாம் அணுவில் அடைத்தருளித்
திண்தங்கு மாறிருத்தும் சித்தனெவன்**

(ப-ரை.) மட்டு அகன்ற அண்டங்கள் எல்லாம் அணுவில் அடைத்தருளி-வரையறை இல்லாத அண்டங்கள் அனைத்தையும் அணுவில் (புகும் வண்ணம்) அடைத்தருளி; திண் தங்குமாறு இருத்தும் சித்தன் எவன்-(அவைகள்) உரம் பெற்று அங்கேயே உறவு கொள்ளும்படி இருத்துகின்ற சித்தன் யாவன், (எ-று.)

(வி-ரை.) திண்மைக்குப் பகுதி திண். இந்த அதிசயங்களை சித்தர்கள் நூல்களில் காணலாம்.

**“அட்ட திக்கும் அண்டவெளி யானஇடமும்,
அடக்கிய குளிகையொடு ஆடி விரைவாய்,
வட்டமிட்டு வலம் வருவம்”**

“மண்டலம் முற்றும் எம்கையால் மறைத்து விடுவோம்” என்று விருது கூறும் சித்தர்கள் சிந்திக்கும் பெருமையது சிவம்; அது செய்யும் செயலனைத்தும் அற்புதமாக இருக்கும் ஆதலின், அதை ஓரளவு அறிவிக்கிறது இப்பகுதி. சித்-ஞானம்; அதன் மயம் ஆனவன் சித்தன்; மற்று, சித்தம் எனும் தத்துவத்திலேயே இருப்பவன் என்றும், அட்டமா சித்திகளின் ஆற்றலாளன் என்பாரும் உளர். (60)

**-பண்தங்கு**

**61. வீயாச் சிறுபெண் விளையாட்டுள் அண்டமெலாம்**
**தேயாது கூட்டுவிக்கும் சித்தனெவன்**

(ப-ரை.) பண் தங்கு வீயா சிறுபெண் விளையாட்டுள்-பண்மயமான மொழிகளைப் பகரும் அழியாச் சிறுபெண் (போல் திருமேனி கொண்ட கிரியா சத்தியின்) திருவிளையாட்டில்; அண்டம் எலாம் தேயாது கூட்டுவிக்கும் சித்தன் எவன் - அண்டங்கள் அனைத்தையும் அழிவுறாதபடி, ஒன்று படுத்தும் சித்தன் யாவன், (எ-று.)

(வி-ரை.) பண்மொழியும், இறவா நலமும், என்றும் இளமையும் உடையவள் கிரியை. வீயாதவளைக் கொண்டு, அண்டங்களைத் தேயாதபடி செய்பவன் இச்சித்தன் என்பது குறிப்பு. (61)

**-யாயாதும்**

**62. வேண்டாமை வேண்டுவது மேவாத சித்தர்தமைத்**
**தீண்டாது தீண்டுகின்ற சித்தனெவன்**

(ப-ரை.) யாயாது வேண்டாமை வேண்டுவது மேவாத சித்தர்தமை-யாதொன்றையும் வெறுத்தலும் விரும்புதலும் கொள்ளாத சித்தர்களை; தீண்டாது தீண்டுகின்ற சித்தன் எவன் - தொடாது தொடுகின்ற சித்தன் யாவன், (எ-று.)

(வி-ரை.) யா-யாது; யாதும்-யாதொரு பொருளையும்; எந்த எந்தப் பொருளையும் என்பது குறிப்பு; அப்பொருள்கள், மண் பெண் பொன் எனும் ஈஷணைத் திரவியம் எனப்பெறும். வேண்டாமை-வெறுத்தல் எனும் குறிப்பு. முதலில் உள்ள சித்தர்-சீவன் முக்தர்களைக் குறித்தது. தீண்டாது தீண்டல்-தீண்ட வேண்டும் எனும் எண்ணம் இன்றியே பரம இயற்கையாகப் பரிசித்தல். (62)

**-ஈண்டோது**

**63. பற்றுருவாய்ப் பற்றாப் பரஅணுவின் உள்விளங்கும்**
**சிற்றுருவாய் உள்ளொளிக்கும் சித்தனெவன்**

(ப-ரை.) ஈண்டு ஓது பற்று உரு ஆய்-இங்குக் கூறப்பெறுகின்ற (பருமை) உருவைப் பற்றியதாய்ப்; பற்றாப் பர அணுவின் உள் விளங்கும் சிறு உருவாய்-புலனாகாத பரமாணுவின் உள் விளங்கும் சிறு அணுவாகி, உள் ஒளிக்கும் சித்தன் எவன் - (அங்கே சிறப்பாகக்) கரந்து இருக்கும் சித்தன் யாவன், (எ-று.)

(வி-ரை.) ஈண்டு-இவ்வுலகில் எனினுமாம். பற்று உரு ஆய் என்பதை, உரு பற்றியதாய் என மாற்றிப் பொருளறிக. உருவம் கொண்டதாயின் கண்கள் காணும்; உருவம் கொள்ளாமையின் 'பற்றா' என்றார். பற்றா-(கண்களின் துணைகொண்டு)

காண முடியாத. பரமாணு-அதிநுட்பம் ஆனது. “சாணிலும் உளன், அணுவினைச் சதகூறு இட்ட கோணிலுமுளன்” என்றான் பிரகலாதன்; இதனி லிருந்து, ஒரு அணுவை நூறு பங்காக்கி, அதனில் ஒரு பங்கிற்குக் கோணில் என்று பெயரிட்ட நாடு இது என்று அறிவம்; இதைப் பரமாணு என்று உணர்வம். அப் பரமாணுவுள் சிற்றுருவாய் ஒளிந்துளது சொரூப ஒளி; இதைக் கருதுவார் கருதும் பொழுது, கைகள் கூம்பி மவுனம் எய்தித் தாமே வணங்கும் தலை. (63)

**-மற்றுருவின்**

**64. வையாது வைத்துலகை மாஇந் திரசாலம்**
**செய்யாது செய்விக்கும் சித்தனெவன்**

(ப-ரை.) மற்று உலகை உருவின் வையாது வைத்து-அகில உலகையும், உருவாக வைக்க வேண்டும் என்ற எண்ணம் இன்றியே வைத்து; மா இந்திர சாலம் செய்யாது செய்விக்கும் சித்தன் எவன் - இந்திர ஜாலவித்தையைச் செய்யாதே செய்கின்ற சித்தன் யாவன்; (எ-று.)

(வி-ரை.) நீர்மேல் ஏராளமான குமிழிகள் எழும்; நீரானது, அவைகளைத் தோற்றுவிக்க வேண்டும் என்று நினைத்ததில்லை; எனினும் குமிழிகள் எழுகின்றன; எழுந்த குமிழிகள் எவ்வளவு நேரம் நிற்கும் என்பதை நீரும் அறியா, அக்குமிழிகளும் உணரா. எனினும் அக் குமிழிகள், பார்ப்பார் கண்கட்குப் பளபளத்து மின்னுகின்றன. என்னமோ தோன்றுகின்றன; அழகா யிருக்கின்றன, உடைகின்றன; அதன்பின் நீரோடு நீராய் விடுகின்றன. அதனோடு முடிவதில்லை அவைகளின் வரலாறு; மறுபடியும் குமிழிகள் எழுவதும் இருப்பதும் உடைவதும், நீருள்ள காலம்வரை நிகழ்ந்து கொண்டே இருக்கும். இச்செய்தி, தோன்றிய உலகில் தோன்றிய பொருள்கள் அனைத்திற்குமாம். “இந்திர சாலம் வல்லோன், யாவரையும் தான்மயக்கும் தந்திரத்தில் சாராது சார்வதுபோல்” என்பது கந்தர் கலிவெண்பா. (64)

**-நையாமல்**

**65. அப்பிடைவைப் பாமுலகில் ஆருயிரை மாயையெனும்**
**செப்பிடைவைத் தாட்டுகின்ற சித்தனெவன்**

(ப-ரை.) நையாமல்-ஒரு சிறிது அயர்வும் இல்லாமல்; அப்பிடை வைப்பாம் உலகில்-எழுகடல் நடுவில் நிறுத்தி வைத்ததான நிலவுலகத்தில்; ஆர் உயிரை-அருமையான ஆன்மாக்கள் அனைத்தையும்; மாயை எனும் செப்பிடை வைத்து ஆட்டுகின்ற சித்தன் எவன் - மாபெரும் மாயை எனும் குடத்தில் வைத்து ஆட்டிப் படைக்கின்ற சித்தன் யாவன், (எ-று.)

(வி-ரை.) "ஆக்கி அளித்துத் துடைக்கும்-தொழில் அத்தனை வைத்தும் எள் அத்தனை யேனும்-தாக்கற நிற்கும் சமர்த்தன்" என்று தாயுமானார் கருதுகின்றபடி, இடையறாது ஐந்தொழில் செய்யும் இறைக்கு, இதனால் சிறிது அயர்வும் இருந்தது இல்லை என்பார், 'நையாமல்' என்றார். அப்பு-நீர். வைப்பு-வைத்தது. செப்பு-செப்புக் குடம்; ஆணவ கன்மங்கட்கு செம்பும், அதனில் உள்ள களிம்பும் உதாரணங்கோடலின், செப்புக் குடம் என்பதுதான் சரியான உதாரணம். செப்பு-சிமிள் எனலாமே எனில், பொருந்து மேல் அப்படியும் கொள்க; மண்குடம் எனினுமாம். அவ்வளவு தான் சொல்ல இயலும். சர்வ சம்மாரத்தின் பின் உயிர்கள் அனைத்தையும், குடத்துள் வைத்துக் காத்து, மீட்டும் உலகுற்பவ காலத்தில் வெளிப்படுத்துகின்றான். இது நிகழும் இடமே கும்பகோணம் என்பது, குடந்தைத் தல வரலாறு. "ஆட்டினால் ஆடாதோ ஆட்டாக்கால் ஆடிடுமோ" என்பர் பாம்பன் அடிகள். (65)

**-ஒப்புறவே**

**66. நில்லாது காற்றை நிலையாக் கடத்தடைத்துச்**
**செல்லாது வைக்கின்ற சித்தனெவன்**

(ப-ரை.) நிலையாக் கடத்து நில்லாது காற்றை ஒப்புற அடைத்து-நிலையில்லாத உடல்களாகிய (மண்) குடத்தில், நிலை பெறாது (ஓடிக் கொண்டே இருக்கும்) பிராணவாயுவை; செல்லாது வைக்கின்ற சித்தன் எவன் - (சிறிது காலம்வரை நில் என்று) நிறுத்தி வைக்கின்ற சித்தன் யாவன், (எ-று.)

(வி-ரை.) நில்லாத காற்று. நிலையிலாத தேகம். ஏ பிராண வாயுவே! இவ்வுடலுள் நீ சிலநாள் இரு என நியமித்த காலம்வரை நிறுத்துபவனை, நிறுத்தி வைத்த அதிசயத்தை, சொல்வதற்கு இவ்வுலகத்தில் சொற்களே இல்லையே! (66)

**-பொல்லாத**

**67. வெம்பாம்பை மேலணிந்தோர் வெம்புற்றின் உள்ளிருந்தே**
**செம்பாம்பை யாட்டுகின்ற சித்தனெவன்**

(ப-ரை.) பொல்லாத வெம் பாம்பை மேல் அணிந்து-கொடிய பயங்கரமான விஷமுள பாம்புகளை அணிகலனாகத் திருமேனியில் அணிந்து; ஓர் வெம் புற்றின் உள் இருந்தே-ஒரு வெப்பமான புற்று எனப் பெறும் உடலுள் இருந்து; செம் பாம்பை ஆட்டுகின்ற சித்தன் எவன் - (மூல நிலத்தில் தலைகீழாய் முகிழ்த்திருக்கும் குண்டலினி சத்தி எனும்) செம்பாம்பை ஆட்டுகின்ற சித்தன் யாவன், (எ-று.)

(வி-ரை.) தாருவனத்தவர் ஏவிய பாம்புகளைத் தான் தரித்தான். அவைகள் வெண்ணிறமானவை. புற்றுப் போல்வது இவ்வுடல். கறையான்கள் புற்றுகளைக் கட்டும்; அதைப் பாம்புகள் தம்மதாகக் கவர்ந்து, அதனில் தாம் சென்று தங்கும். அது போல், மாயை இத்தேகத்தை மலர்வித்தது; பொல்லாத ஆன்மா இதனில் புகுந்து கொண்டது. புற்றின் தோற்றத்தில் யாது யாது உளவோ, அவை அனைத்தும் இவ்வுடலில் உளது. உடலாகிய புற்றின் அடி இடமான மூலாதாரத்தில், குண்டலினி எனும் செம்பாம்பு

குடியுளது. பாம்பாட்டிகளை வெளியில் பார்த்துளம். அவர்கள் போலின்றி, புற்றுக்குள் சித்தன் புகுந்தான். தலைகீழ் வியாபாரம் செய்யாதே! நிமிர்ந்து நில்! என்று, அது எழுமாறு நாதம் எழுப்புகிறான்; அந்நாகத்தை, 'ஆடு பாம்பே! ஆடு பாம்பே' என்று ஆட்டுகின்றான் என்றபடி. "பாம்பும் ஆட்டுவர் பாசூர் அடிகளே"என்பது தமிழ் மறை.(67)

**-தம்பாங்கர்**

68. **ஒண்கையில்தான் ஒன்றின்றி உண்ணின் றுயிர்களையூழ்த்**
**திண்கயிற்றால் ஆட்டுகின்ற சித்தனெவன்**

(ப-ரை.) தம் பாங்கர் ஒள்கையில் தான் ஒன்று இன்றி - தம்பால் உள்ள ஒளியுள திருக்கரத்தால் ஒன்றையும் தொடாதவன் ஆகி; உள் நின்று-உயிர்தொறும் (ஒளிந்து) நின்று; உயிர்களை - (அந்தந்த) ஆன்மாக்களை; ஊழ்திண் கயிற்றால் ஆட்டுகின்ற சித்தன் எவன் - பல பிறவிகளில் செய்த பாவ புண்ணியங்களாகிய கடினமான கயிற்றால் கட்டி ஆட்டுகின்ற சித்தன் யாவன், (எ-று.)

(வி-ரை.) எதுகை நயம் கருதி, கையில் என்பது கயில் என நின்றது. ஒன்று இன்றி - ஒட்டு பற்று ஒன்றும் இல்லாமல். உள் என்பது, உடலுள்; அல்லது உயிருள் எனும் பொருளது. ஊழ், ஆகிய எனும் சொல் உருபு தொக்கது. ஆட்டுகின்றான் நட்டுவன்; ஆடுவது ஆன்மா; இடையிருந்தது பாசம்.

**"காட்ட அனல்போல் உடல்கலந்து உயிரை எல்லாம்**
**ஆட்டும் ஒரு நட்டுவன் எம் அண்ணல்"**

என்றார் கடவுள் மாமுனிவர். (68)

**-வண்கையுடைத்**

69. **தானசைந்தால் மற்றைச் சகமசையும் என்றுமறை**
**தேனசையச் சொல்கின்ற சித்தனெவன்**

(ப-ரை.) வண் கையுடை தான் அசைந்தால் மற்றை சகம் அசையும் என்று- ஈகைத் திருக்கரத்தை யுடைய தான் அசைவான் ஆயின், (அவன் திருவுளப்படி) அகில சராசரமும் அசைந்து இயங்கும் என்று; மறை தேன் அசைய சொல்லுகின்ற சித்தன் எவன் - தேன்போல் இனிக்க மறைகள் கூறுகின்ற சித்தன் யாவன், (எ-று.)

(வி-ரை.) "எல்லா உயிர்க்கும் உயிர் அருணேசர்; இவர் அசைவின் அல்லாது அணுவும் அசையாது என்பது அறிந்தனமே; வில்லாடன் மாரன் இருக்கவும், யோகம் விளைத்த அந்நாள், புல்லாது இருந்தன எல்லா உயிரும் தம் போகத்தையே" என்னும் அருணைக் கலம்பகம் இங்கு நினைவிற்கு வருகிறது அல்லவா. (69)

**-ஊனமின்றிப்**

**70. பேர்த்துயிர்கள் எல்லாமோர் பெண்பிள்ளையின் வசமாய்ச்
சேர்த்து வருவிக்கும் சித்தனெவன்**

(ப-ரை.) ஊனம் இன்றி பேர்த்து-பழுது இலாதபடி (பக்குவமாகப்) பெயர்த்து எடுத்து; உயிர்கள் எல்லாம். ஆன்ம கோடிகள் அனைத்தையும்; ஓர் பெண் பிள்ளையின் வசமாய் சேர்த்து வருவிக்கும் சித்தன் எவன் - ஒப்பற்ற பெண் பிள்ளையாகிய மாயா சக்தியிடம் ஒப்படைத்து, (அயர்வு அகற்றிப், பிறகு உலகில் உருவாக) வரவழைக்கும் சித்தன் யாவன், (எ-று.)

(வி-ரை.) அவரவர் இயற்றிய வினையளவான இன்பதுன்பங்களை அனுபவித்தற்கு, எழுவகைத் தோற்றமான ஆக்கைகளுள் தங்கவைத்து, புண்ணிய பாவங்களைப் புசிக்கும்வரை காத்து, பிராரத்துவம் முடிந்த பின் இருந்த உடலில் இருந்து பிரித்து, மீட்டும் உடல் எடுக்கும் வரைக்கும் மாயை எனும் சக்தியின் மடியில் வைத்து இளைப்பாற்றி, விஷயாதிகளை விரும்பும் பற்று விலகும்வரை, மறுபடியும் பிறிதொரு உடலில் பிறப்பிக்கும் பெருமான் என்பதை நினைக்கும் பொழுதே நெஞ்சு நெகிழ்கிறதே! (70)

**-போர்த்துமிக**

**71. அல்விரவும் காலை யகிலமெலாம் தன்பதத்தோர்
சில்விரலிற் சேர்க்கின்ற சித்தனெவன்**

(ப-ரை.) போர்த்து மிக அல் விரவும் காலை-(ஒரு பொருளும் தோன்றாமல் ஒடுங்கப்) பேரிருள் மிகப் பெருகி மூடும் (முழு அழிவான) அந்நாளில்; அகிலம் எலாம் - அனைத்து உலகங்களையும்; தன் பதத்து ஓர் சில் விரலில் சேர்க்கின்ற சித்தன் எவன் - தன் திருவடியில் உள்ள ஒப்பற்ற சில விரல்களுள் அடக்கி வைக்கும் சித்தன் யாவன், (எ-று.)

(வி-ரை.) அகில சராசரமும் அழிகின்ற அந்நாளில், அதிபயங்கரமான கனஇருள் எங்கும் கவியும். அவ்வமயம், உலகங்கள் அனைத்தையும், தம் திருவடிகளில் உள்ள இரண்டொரு விரல்கட்குள் வைத்துக் காக்கும் வரதசிவம்; இதனி லிருந்து, அதன் தனிப்பெருங் கருணைத் தன்மை தெரிகிறது அல்லவா! (71)

**-பல்வகையாய்க்**

**72. கைகலந்த வண்மைக் கருப்பா சயப்பையுள்
செய்கருவுக் கூட்டுவிக்கும் சித்தனெவன்**

(ப-ரை.) பல்வகையாய் கைகலந்த வண்மைக் கருப்பாசயப் பையுள் - பல்வகையான பண்பமைந்த வளமான கருப்பப் பையினுள்; செய் கருவுக்கு ஊட்டுவிக்கும் சித்தன் எவன் - (இளம்) பயிர் போன்ற கருவிற்கு (உரிய அளவு உணவை) உண்பிக்கும் சித்தன் யாவன், (எ-று.)

(வி-ரை.) கை-உபசர்க்கம்; ஒழுகலாறு எனும் பொருட்டு. வண்மையாவது - இடை யறுபடாமை, உரம் பெறுதன்மை, உதரக் கனலால், பிரசூத வாயுவால், புழு பூச்சிக் கடியால் இடையூறு படாமல் வளம்பெறு சூழ்நிலையில் வாழும் தன்மை. செய் - பயிர்.

**"கண்ணுழையாக் காட்டில் கருங்கல் தவளைக்கும்,**
**உண்ணும் படியறிந்(து) ஊட்டுமவன் - நண்ணும்**
**நமக்கும் படியளப்பான் நாரியோர் பாகர்**
**தமக்குத் தொழில்என்ன தான்"**

என்னும் செய்தி இங்கு எண்ணத் தகும். 'கைகலந்த வன்மை' என்றும் பாடமுளது. (72)

**-உய்கருவை**

**73. மெய்வைத்த வேர்வையினும் வீழ்நிலத்தும் அண்டத்தும்**
**செய்வித்தங் கூட்டுவிக்குஞ் சித்தனெவன்**

(ப-ரை.) மெய் வைத்த வேர்வையினும் - உடலில் இருந்து உண்டாகின்ற வியர்வையிலும்; வீழ் நிலத்தும் - வித்துகள் தங்கிய நிலத்திலும்; அண்டத்தும் - முட்டையிலும்; உய் கருவை செய்வித்து - உய்யுமாறு கருவை உருவாக்கி; அங்கு ஊட்டுவிக்கும் சித்தன் எவன் - அவைகட்கு (அமுது) ஊட்டுவிக்கும் சித்தன் யாவன், (எ-று.)

(வி-ரை.) நிலம், கருப்பை, முட்டை, வியர்வை எனும் நான்கு இடங்களில் இருந்து பிறப்புகள் எழும்; இவைகள் நால்வகைத் தோற்றம் எனப்பெறும்; அண்டசம், சுவேதசம், சராயுசம் உற்பிசம் என்பது வடமொழி மரபு. 'ஊட்டுவிப்பானும்.......ஒருவன் உண்டே தில்லையம்பலத்தே' என்பர் பட்டினத்தடிகள். (73)

**-உய்விக்கும்**

**74. வித்தொன்றும் இன்றி விளைவித் தருளளிக்கும்**
**சித்தென்றும் வல்லவொரு சித்தனெவன்**

(ப-ரை.) உய்விக்கும் வித்து ஒன்றும் இன்றி விளைவித்து - விளையும் எவைகட்கும் (மூலமான) விதை ஒன்றும் இல்லாமல் விளையுமாறு செய்து; அருள் அளிக்கும் சித்து என்றும் வல்ல ஒரு சித்தன் எவன் - (வாழ்விக்கும்) அருளை (உயிர்கட்கு) வழங்குகின்ற சித்து விளையாடலில் என்றும் வல்லாண்மை யுடைய சித்தன் யாவன், (எ-று.)

(வி-ரை.) "விச்சது இன்றியே விளைவு செய்குவாய், விண்ணும் மண்ணகம் முழுதும் யாவையும், வைச்சு வாங்குவாய்" எனும் திருவாசகம் இங்கு எண்ணத் தகும்.

எல்லாம் வல்ல சித்தரான படலம் என்று, பரஞ்சோதியார் திருவிளையாடலிலும் ஒரு பகுதி உளது. (74)

**-சத்துடனே**

**75. உற்பத்தி யாயுலகில் ஒன்பதுவாய்ப் பாவைகள்செய்**
**சிற்பத் தொழில்வல்ல சித்தனெவன்**

(ப-ரை.) சத்துடனே உற்பத்தியாய் - (உள்பொருளான) மெய்ம்மையுடன் உதயமாகி; உலகில் ஒன்பது வாய் பாவைகள் செய் - உலகத்தில் ஒன்பது துவாரங்களை யுடைய பதுமைகளை உருவாக்கும்; சிற்பத் தொழில் வல்ல சித்தன் எவன் - சிற்பத் தொழிலில் வல்லவன் ஆன சித்தன் யாவன்,

(வி-ரை.) சத்து - மெய் எனும் உயிராகிய உள் பொருள். கண் இரண்டு, செவி இரண்டு, நாசித் துளை இரண்டு, வாய் ஒன்று, எருவாய் ஒன்று, கருவாய் ஒன்று ஆக ஒன்பது பெரும் துளைகளையுடைய உடல்களை, 'ஒன்பது வாய்ப் பாவை' என்றார்.

> **"நன்னாரில் பூட்டியசூத்திரப் பாவை, நல்நார் தப்பினால்**
> **தன்னாலும் ஆடிச் சலித்திடுமோ? அந்தத் தன்மையைப் போல்**
> **உன்னால் இங்கு யானும் திரிவதல்லால், மற்றுனைப் பிரிந்து**
> **என்னால் இங்காவ(து)உண்டோ இறைவா கச்சி ஏகம்பனே!"**

என்பர் திருவெண்காடர். அதற்கேற்ப, 'ஒன்பது வாய்ப்பாவைகள் செய்.......சித்தன் என்றார். (75)

**-பற்பலவாம்**

**76. காரா ழிகளைக் கரையின்றி யெல்லையிலாச்**
**சேரூழி நிற்கவைத்த சித்தனெவன்**

(ப-ரை.) பற்பல ஆம் கார் ஆழிகளை கரை இன்றி - மிகப் பலவான நீலக் கடல்களை (வெள்ளம் பெருகி விரையா வண்ணம் தடுக்கும்) கரைகள் இல்லாமல்; எல்லை இலா சேர் ஊழி நிற்க வைத்த சித்தன் எவன் - அளவே இல்லாத (எத்தனையோ) கற்பகாலமாக (த் தன் கட்டளைப்படி) நிற்க வைத்த சித்தன் யாவன், (எ-று.)

(வி-ரை.) ஊழி - பிரளய காலம். "ஆழாழி கரையின்றி நிற்க விலையோ" என்பர் தாயுமானார். (76)

**பேராத**

**77. நீர்மேல் நெருப்பை நிலையுறவைத் தெவ்வுலகும்**
**சீர்மே வுறச்செய்யும் சித்தனெவன்**

(ப-ரை.) பேராத நீர் மேல் நெருப்பை நிலையுற வைத்து - (தன் கட்டளையை) மீறாத கடல்களின் மேல் (வடவைக்) கனலை நிலைபெற வைத்து; எவ் உலகும் சீர் மேவுற செய்யும் சித்தன் எவன் - நிலவுலக முழுதும் (ஆழ் கடல் பெருகி அழிக்காதபடி,) சிறப்புடையதாகச் செய்யும் சித்தன் யாவன், (எ-று.)

(வி-ரை.) பேராத-நிலை பெயர்ந்து வாராத. எவ்வுலகும் என்பது, எழுவகைத் தீவுகளையுடைய நிலவுருண்டை முழுதும் எனும் பொருட்டு. (77)

**-பாராதி**

**78. ஐந்திலைந்து நான்கொருமூன் றாமிரண்டொன்றாய் முறையே**
**சிந்தையுற நின்றருளும் சித்தனெவன்**

(ப-ரை.) பார் ஆதி - மண் முதலாக; ஐந்தில் ஐந்து - இருபத்தைந்து; ஒரு நான்கு-, மூன்று ஆம் இரண்டு - ஆறு; ஒன்று ஆய் - ஒன்று ஆக (முப்பத்தாறு) தத்துவங்களை; முறையே சிந்தைஉற வைக்கும் சித்தன் எவன் -முறைப்படி சிந்திக்கப் பொருந்த வைக்கும் சித்தன் யாவன், (எ-று.)

| | | |
|---|---|---|
| (வி-ரை.) | **மண் முதல் தத்துவம்** | **24;** |
| | **வித்தியா தத்துவங்கள்** | **7** |
| | **சுத்ததத்துவம்** | **5** |
| | **ஆக** | **36 தத்துவங்கள்** |

இவைகளின் விரிவை, திருவடிப் புகழ்ச்சியுரையிற் காண்க. (78)

**-பந்தமுற**

**79. ஆண்பெண்ணாய்ப் பெண்ஆணாய் அண்மைதனை வானிற்**
**சேணபண்ண வல்லவொரு சித்தனெவன்**

(ப-ரை.) பந்தம் உற-(கண்டவர்) கட்டுண்டு காணுமாறு; ஆண் பெண்ணாய் - ஆணைப் பெண் ஆகவும்; பெண் ஆணாய் - பெண்ணை ஆணாகவும்; அண்மைதனை வானின் சேண் பண்ண வல்ல ஒரு சித்தன் எவன் - அருகில் உள்ள இடத்தை, விண் உலகம்போல் நீண்ட தூரத்தில் உள்ளது ஆம்படி மாற்ற வல்ல சித்தன் யாவன்,(எ-று.)

(வி-ரை.) 'மருவாணைப் பெண்ணாக்கி ஒரு கணத்திற் கண் விழித்து வயங்கும்; அப்பெண் உருஆணை உருவாக்கி, இறந்தவரை எழுப்புகின்ற உருவன்" என்பது

திருவருட்பாவின் ஒரு பகுதி. இந்தப் பால்மாற்றம், இன்றும் நிகழ்வது கண்கூடு. அண்மையைச் சேய்மை யாக்குவதும், சேண்மையை அண்மை யாக்குவதும் திருவருட் சித்தில் சேர்ந்த சேர்ந்த செய்திதான். இருந்த இடத்தில் இருந்தபடியே வள்ளலார், அண்மி யிருந்தவர்களை சிதம்பர ஆருத்திரா தரிசனம் ஒரு கணத்தில் செய்யுமாறு செய்வித்த செய்தி, அவர் வரலாற்றில் உளது. இது சேய்மையை அண்மை யாக்கிய செய்தி. வசிட்டர், ஆதியர், போகர், கரூவூரார் முதலினோர், நினைத்த இடத்தை நினைத்த நேரத்தில் சென்று சேர்ந்த வரலாறுகளும் உள. கனவுலகில் ஆன்மா, எண்ணிய ஆயிரம் மைலுக்க் அப்பாலும் சென்று மீளும்; அதை அவர்கள் நனவுலகில் அனுபவித்தனர்; எனவே இது ஆகாத செய்தியன்று; இறைவனே அது செய்கின்றான் எனில், இதனில் குறுக்கும் மறுக்கும் பேச எவருக்கும் உரிமை யில்லை. “ஆண் எனத் தோன்றி, அலியெனப் பெயர்ந்து, வாள்நுதல் பெண் என ஒளித்தும்” என்பது திருவாசகத் திருவண்டகப்பகுதி. (79)

**-மாண்பண்ணாப்**

### 80. பேடாணாய்ப் பெண்ணாயப் பெண்ணாண் பெரும்பேடாய்ச் சேடாகச்செய்யவல்லசித்தனெவன்

(ப-ரை.) மாண்பு அண்ணா பேடு ஆணாய் பெண்ணாய்-சிறப்பில் சேராத பேடியை ஆணாகவும், பெண்ணாகவும்; பெண் ஆண் பெரும் பேடு ஆய் - பெண்ணை ஆணாகவும் பேரலியாகவும்; சேடு ஆக செய்ய வல்ல சித்தன் எவன் - அழகாகச் செய்ய வல்ல சித்தன் யாவன், (எ-று.)

(வி-ரை.) மாண்பு-மாட்சிமை. அண்ணா - அணுகாத. சேடு - அழகின் மிகுதி; சேஷ ௐ என்பதன் திரிபெனக் கொண்டு, கைங்கர்யம் எனக் கோடலுமாம். பேடு - பெண் உறுப்பு மிக்கு, ஆண் உறுப்புக் குறைதல்; (இதற்கு மாறான அலி, ஆண் உறுப்பு மிக்கு பெண் உறுப்புக் குறைதல் என இங்கு வேறு பாடு அறிக.) (80)

**-சேடாய**

### 81. வெண்மை கிழமாய் விருத்தமந்த வெண்மையதாய்த் திண்மை பெறச்செய்யுஞ் சித்தனெவன்

(ப-ரை.) சேடு ஆய வெண்மை கிழம் ஆய் - அழகான இளமை விருத்தாப்பியமாய்; விருத்தம் அந்த வெண்மையதாய் - கிழப்பருவம் அந்த இளம் பருவமாய்; திண்மை பெற செய்யும் சித்தன் எவன் - உறுதி விளைய (மாற்றம்) செய்யும் சித்தன் யாவன், (எ-று.)

(வி-ரை.) வெண்மை-இளமை. விருத்தம் -கிழப்பருவம். யுவனான யயாதி, சுக்கிர சாபத்தால் திடீர் கிழவன் ஆவதும், அந்த வயோதிகத்தைத் தன் மகனுக்குத் தந்து, அவன் இளைமையைத் தான் வாங்கி, அவனுக்குத் தன் வயோதிகத்தை அளித்ததும், சிலகாலம் பொறுத்துத் தான் அதை மாற்றிக் கொண்டதுமான வரலாறு பாரதத்தில்

உளது. இவர்களது சாதக சக்திக்கே இது இயல்வதெனில், எல்லாம் வல்ல இறைக்கு இது லேசு நிலை என்பது கூறாமலே விளங்கும். (81)

**-ஒண்மையிலா**

**82. ஓட்டினைச்செம் பொன்னா யுவர்செம்பொன் ஓடாகச்**
**சேட்டையறச் செய்கின்ற சித்தனெவன்**

(ப-ரை.) ஒண்மை இலா ஒட்டினை செம் பொன்னாய் - ஒளி இல்லாத ஒட்டை, மாற்றுயர்ந்த பொன்னாகவும்; உயர் செம்பொன் ஓடு ஆக-மாற்றுயர்ந்த பொன் (மட்டமான) ஓடாகவும்; சேட்டை அற செய்கின்ற சித்தன் எவன் - சிறப்பைக் காட்டாதே செய்கின்ற சித்தன் யாவன், (எ-று.)

(வி-ரை.) ஒண்மை-ஒளியுடைமை; புகழ் எனினுமாம். சேட்டை-செயல்பாடு. ஞானிகள், "ஓடும் பொன்னையும் ஒக்கவே நோக்குவார்," இறை இயல் அவர்களது மன நிலைக்குத் தெரிகிறதாதலின் என்க. "பள்ளம் மேடாகும் மேடு பள்ளமாகும்" எனும் பழமொழிகள், இக் கண்ணியின் கருத்தே கொண்டுள. (82)

**-காட்டிலுறு**

**83. காஞ்சிரத்தைக் கற்பகமாய்க் கற்பகத்தைக் காஞ்சிரமாய்த்**
**தேஞ்சிவணச் செய்கின்ற சித்தனெவன்**

(ப-ரை.) காட்டில் உறு காஞ்சிரத்தை கற்பகமாய் - காட்டில் இருக்கும் எட்டி மரத்தை (விண்ணுலகக்) கற்பகத் தருவாகவும்; கற்பகத்தை காஞ்சிரமா - கற்பக மரத்தை எட்டி மரமாகவும்; தேம் சிவண செய்கின்ற சித்தன் எவன் - இனிமை யமையச் செய்திறம் வல்ல சித்தன் யாவன், (எ-று.)

(வி-ரை.) காஞ்சி - எட்டிமரம்; "கைத்த கோடரமே காளம் காஞ்சிரை முட்டி எட்டி" என்பது சூடாமணி நிகண்டு. கற்பகம் - கற்பித்ததை, அஃதாவது சங்கற்பித்ததைத் தருவதொரு தெய்வ விருட்சம்; தேம் - இனிமை. சிவண-பொருந்த.(83)

**-வாஞ்சையுற**

**84. நாரணன்சேய் நான்முகனாய் நான்முகன்சேய் நாரணனாய்ச்**
**சீரணவச் செய்யவல்ல சித்தனெவன்**

(ப-ரை.) வாஞ்சை உற-ஆர்வம் அமைய; நாரணன் சேய் நான்முகனாய் - நாரணன் மைந்தன் நான்கு முகமுள பிரமனாகவும்; நான்முகன் சேய் நாரணன் ஆய் - பிரமன் பிள்ளை திருமாலாகவும்; சீர் அண்வச் செய்ய வல்ல சித்தன் எவன் - சிறப்பமைய (மாற்றி) அமைக்க வல்ல சித்தன் யாவன், (எ-று.)

(வி-ரை.) வாஞ்சை-விருப்பம். நாராணன் - நாராயணன் என்பதன் மரூஉ; நீர்மை மயமாகி நின்றவன் என்பது பொருள். அதனால்தான், கடல்நிற வண்ணன் முகில் வண்ணன் என்று, அப்பெருமாற்குப் பெயரிட்டுப் போற்றுகிறது; நாரம் - நீர். நான்முகன் - நான்கு திசைகளை நோக்கிய முகங்களை யுடையவன். அணவ-அண்மி அமைய. நாராயணன் மகன் நான்முகன்; மற்றொரு காலத்தில் நான்முகன் பிள்ளை நாராயணர் ஆன வரலாறுகள் உள. இவைகளைப் படித்து மயங்கப் படாது; நான்காவது பொருளான துரிய ஜோதியின் திருவிளையாடல்களில் இஃது ஒன்று என்று எண்ணுவது தான் கலையுரைக்கும் கருத்து. (84)

**-பேரணவக்**

**85. கொம்மைபெறுங்கோடாகோடியண்ட மெல்லாம் ஓர்**
**செம்மயிர்க்கால் உள்புகுத்துஞ் சித்தனெவன்**

(ப-ரை.) பேர் அணவ-பெருமிதம் பெருக; கொம்மை பெறும் கோடா கோடி அண்டம் எல்லாம் - திரட்சி (உருவம்) பெற்ற கோடா கோடி அண்டங்கள் அனைத்தையும்; ஓர் செம் மயிர்க் கால் உள் புகுத்தும் சித்தன் எவன் - ஒப்பற்ற சிவந்த (திருமேனி) மயிர்க்கால்களுள் புகுத்துகின்ற சித்தன் யாவன், (எ-று.)

(வி-ரை.) பேர் - பெருமை எனும் பண்புப் பெயரின் திரிபு. அணவ-அண்மி இருப்ப. கொம்மை-பருமை. மிகப் பெரிய அண்டங்கள் அனைத்தும், பேன் முட்டைகள் போல் இறை திருமேனி மயிர்க்கால்களில் அடங்கி யிருக்கின்றன. அதைத் தழுவி இங்கு உரைசெயப் பெற்றது. மற்று, அண்டமெலாம், திருமேனியின் ஒரே உரோமத்தில் அடக்கி வைத்துளன் எனும் தொனி இக்கண்ணியில் உளது.

"அண்டங்கள் எல்லாம் அணுவில் அடைத்தருளி" என 60 ஆம் கண்ணியிலும்,

"சிறு பெண் விளையாட்டுள் அண்டமெலாம் தேயாது கூட்டுவிக்கும்" என 61 ஆம் கண்ணியிலும்,

"அகிலமெலாம், தன் பதத்தோர் சில் விரலிற் சேர்க்கின்றா" என 71 ஆம் கண்ணியிலும் அருளிய செய்திகள், அவனது வியாபக விலாச விளக்கங்கள் என்று உணர்வது நலம்; முன்னுக்குப் பின் முரண் என மொழிவது முறையன்று என, விநய பூர்வமாக விண்ணப்பித்துக் கொள்கிறோம். (85)

**-செம்மையிலா**

**86. வெம்புலியை வெண்பால் விளைபசுவாய் அப்பசுவைச்**
**செம்புலியாய்ச் செய்யவல்ல சித்தனெவன்**

(ப-ரை.) செம்மை இலா வெம்புலியை வெண்பால் விளை பசு ஆய் - செம்மைத் தன்மை (யான இரக்கம்) இல்லாத கொடிய புலியை, வெண்ணிறமான பாலைப்

பொழியும் பசுவாகவும்; அப் பசுவை செம்புலியாய் செய்யவல்ல சித்தன் எவன் - அந்தப் பசுவைச் செந்நிறமான புலியகவும் (ஒரே கணத்தில்) மாற்ற வல்ல சித்தன் யாவன், (எ-று.)

(வி-ரை.) செம்மை இலாமையும், உக்கிரத் தன்மையும் உடைமையால், இவ்வளவும் புலிக்கு அடை. செம்மை-இரக்கம்; நீதி எனினுமாம். பசு-எந்த நிறமாயினும் அதன் பால் வெண்ணிறம் ஆதலின், 'வெண்பால்' என்றார். புலியைப் பசுவாக்கினாலும், அதன் குரூரபுத்தி போகவில்லையேல், பசுத்தோல் போர்த்த புலியாவது வேண்டா என, அதை மீட்டும் புலியாக்கிய வரலாறு புராணங்களின் உளது.

**-அம்புலியை**

**87. அங்கதிரொண் செங்கதிராய் அம்புலியைப் பம்புகின்ற
செங்கதிராய்ச் செய்யவல்ல சித்தனெவன்**

(ப-ரை.) அம்புலியை அம் கதிர் ஒண் செம்கதிர் ஆய் - சந்திரனை, அழகிய கிரணங்களையுடைய ஒளிமயமான சிவந்த சூரியன் ஆகவும்; அம்புலியை பம்புகின்ற செங்கதிராய் செய்ய வல்ல சித்தன் எவன் - சந்திரனைப் பெரிய தோற்றம் நிறைந்துள்ள செங்கிரணச் சூரியனாக மாற்றும் வல்லாண்மைச் சித்தன் யாவன், (எ-று.)

(வி-ரை.) அழகு புல்லிய காரணத்தால், சந்திரனுக்கு அம்புலி எனும் ஒரு பெயர் உளது. கதிர் - கிரணம். வெண் கிரணம் உடைமையினை சந்திரனை வெண்கதிர் என்றும் சிவந்த கிரண வுடைமையை நினைந்து, சூரியனைச் செங்கதிர் என்றும் கூறும் வழக்காறுளது. மதியைப் பரிதியாக்கியதும் பரிதியை மதியாக்கியதும் ஆன அற்புதங்களை, முருகன் திருவிளையாடலாகக் காந்தம் கூறியுளது. (87)

**-துங்கமுறா**

**88. ஓரணுவோர் மாமலையாய் ஓர்மா மலையதுவோர்
சீரணுவாய்ச் செய்யவல்ல சித்தனெவன்**

(ப-ரை.) துங்கம் உறா ஓர் அணு ஓர் மா மலையாய் - உயர்வு இலதான ஒரு சிற்றணு ஒரு பெரிய மலையாகவும்; ஓர் மாமலை அது ஓர் சீர் அணு ஆய் செய்ய வல்ல சித்தன் எவன் - ஒரு பெரிய மலையை ஒரு சிறிய அணுவாகச் செய்ய வல்ல சித்தன் யாவன், (எ-று.)

(வி-ரை.) அணுவை மலையாக்குவதும், மலையை அணுவாக்குவதும் அவன் ஆடலுள் ஒன்று. துரும்பைத் தூணாக்குவதும், தூணைத் துரும்பாக்குவதும் எனும் பழமொழியை, இப்படிப் பெருக்கிக் காட்டிய அருமையே அருமை. (88)

**-வீரமுடன்**

**89. முன்னகையா நின்றதொரு முப்புரத்தை அன்றொருகால்**
**சின்னகையால் தீமடுத்த சித்தனெவன்**

(ப-ரை.) வீரமுடன் முன் நகையா நின்றதொரு முப்புரத்தை-வீரத்தொடு முன்னிலையில் நகை செய்திருந்த திரிபுரங்களை; அன்று ஒருகால் -அன்று ஒரு சமயம்; சில் நகையால் தீமடுத்த சித்தன் எவன் - புன்னகையால் பொசுக்கிய சித்தன் யாவன், (எ-று.)

(வி-ரை.) எம்மை அழிக்க எவராலும் இயலா என்னும் முனைப்பு நகையுடன் இருந்தது முப்புரம்; அதையும், அதைச் சார்ந்தாரையும், ஒரு சின்னஞ் சிரிப்பால் தீக்கொளுவி அழித்த திறத்தை அருமைபெற இங்கு அறிவித்தபடி. அவுணர்களுடையது வீரநகை. சிவநகை சிறியதுதான் எனினும், சிறு தீப்பொறி பஞ்சுமலையை அழித்த கதையாய் முடிந்தது என்று கருதியபடி. முன்னகை-முனைப்புடைய சிரிப்பு. சி+நகை-சில்நகை; புன்சிரிப்பு. இதன் வரலாறு, திருவடிப் புகழ்ச்சி உரையிலறிக. (89)

**-முன்னயன்மால்**

**90. மற்றிருந்தவானவரும்வாய்ந்தசைக்கா வண்ணமொரு**
**சிற்றுரும்பை நாட்டிநின்ற சித்தனெவன்**

(ப-ரை.) முன் - முன் ஒரு காலத்தில்; அயன்மால் மற்று இருந்த வானவரும் - பிரமன், திருமால், மற்று (கூடி) இருந்த அமரர் அனைவரும்; வாய்ந்து அசைக்கா வண்ணம் - ஒருசேர முயன்று அசைக்க இயலாதபடி; சில் துரும்பை நாட்டி நின்ற சித்தன் எவன் - அற்பமான (ஒரு) துரும்பை நிலத்தில் நிறுத்தி யிருந்த சித்தன் யாவன், (எ-று.)

(வி-ரை.) ஒரு சமயம் அமரரும் அவுணரும், கடும் போரில் கலந்தனர். துன்பம் கொண்டு, தேவர்கள் தோற்றனர். கண்ணீர் பெருக்கிக் கதறினர். இறைவி திருவுளம் இரக்கம் கொண்டது. இமையவர்க்குப் பெரும! இரக்கம் காட்டுக என்று இறைவி வேண்டினள். அதன் பின் அமலன், விண்ணவர்கட்கு வெற்றி உண்டாகெனத் திருவுளம் பற்றினன்; அதே நேரத்தில், முறுவலிப்பொடு அவுணர்கள் மோதினர். வானவர்கள் தானவருடன் மறுபடியும் கைகலந்தனர். விமலன் அருளால் விண்ணவர் வென்றனர். அவுணர்கள் வலியடங்கி ஒடுங்கினர். இவ்வெற்றி, திருவருள் பலத்தால் சித்தித்தது என்று அறியா இமையவர், இவை, நம் ஆண்மையின் இயற்கை என்று இறுமாந்தனர். மாநாடு கூட்டினர்; தமக்குத் தாமே புகழ்மாலை புனைந்துகொண்டனர்.

மறக்கருணையால் அவர்களைத் திருத்த நினைத்த மாதேவர், இயக்க வடிவுகொண்டு எதிர் வந்தார். ஒரு துரும்பை எடுத்தார். எதிரில் வைத்தார். இதை அசைக்க வல்லவர் எவரோ அவரே தேவர்கள் வெற்றிக்குக் காரணர் என்றார். ஆத்திரம் கொண்ட அமரர் அனைவரும், பெரிது முயன்று, அத்துரும்பை அசைக்க முடியாது அயர்ந்தனர். தோற்ற ஒவ்வொருவரையும் தூக்கி அப்பால் எறிந்து, நகை

செய்து நின்றார் நம்பர். அதன் பின் இயட்சனாக வந்தவர் இறைவர் என அறிந்து, தருக்கழிந்து, வாயாரத் துதித்து வாழ்வு பெற்ற வரலாறு, இங்கு இரத்தினச் சுருக்கமாக இயம்பப் பெற்றது. "அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது எனும் பெரிய ஆப்தர் மொழிஒன்று" எனும் தாயுமானார் பாடல், இங்கு நம் நினைவில் வருகிறது அல்லவா! (90)

**-மற்றவர்போல்**

**91. அல்லா அயனும் அரியும் உருத்திரனும்**
**செல்லா நெறிநின்ற சித்தனெவன்**

(ப-ரை.) மற்றவர்போல் அல்லா-(இந்திரன் முதலிய) பிற தேவர்களைப்போல் அல்லாமல்; அரியும்-, அயனும்-, உருத்திரனும்-, செல்லா நெறிநின்ற சித்தன் எவன் - தொடர்ந்து காண முடியாத(துரிய) வழியில் இருந்த சித்தன் யாவன், (எ-று.)

(வி-ரை.) அல்லா - அல்லாத. அயன் முதலினோர், மிகப்பெரிய முத்தொழில் புரியும் முதல்வர்கள்; அணுபட்சரான அம்மூவரும், செல்ல அறியா வழி துரியவழி; அது சாக்கிர சொப்பன சுழுத்து கடந்த நான்காவது வழி. (91)

**-ஒல்லாத**

**92. கல்லிற் சுவையாய்க் கனியிற் சுவையிலதாய்ச்**
**செல்லப் பணிக்கவல்ல சித்தனெவன்**

(ப-ரை.) கல்லில் ஒவ்வாத சுவையாய் - கல்லில் பொருந்தாச் சுவையைச் காட்டியும்; கனியில் சுவை இலதாய் - கனியில் (எந்தச்) சுவையும் இல்லாதது ஆக்கியும்; செல்லப் பணிக்க வல்ல சித்தன் எவன் - (தன் ஆணை) இயங்கச் செய்யும் பேராண்மையுடைய சித்தன் யாவன், (எ-று.)

(வி-ரை.) கல்லில் கனியின் தன்மையை, கனியில் கல்லின் பண்பைக் காணவைப்பது, அவனால் இலேசில் இயல்கின்ற திறம். "கல்லை மென்கனி ஆக்கும் விச்சை கொண்டு, என்னை நின்கழற்கு அன்பன் ஆக்கினாய்" என்பது திருவாசக திருச்சதகம் 94 ஆம் பாடல். "கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை, வெள்ளத்(து) அழுத்தி வினை கடிந்த வேதியனை" என்பது திருவாசக அம்மானை 5 ஆம் பாடல். (92)

**-அல்லலறப்**

**93. பார்க்கின்ற யாவர்கட்கும் பாவனா தீதனெனச்**
**சீர்க்கின்ற மெய்ஞ்ஞானச் சித்தனெவன்**

(ப-ரை.) அல்லல் அற பார்க்கின்ற யாவர்கட்கும் - அல்லல் (பிறவி) அடியொடு தீர (உள்முக) நாட்டம் உடைய அனைவர்க்கும்; பாவனாதீதன் என-நினைவிற்கு

எட்டாதான் எனுமாறு; சீர்க்கின்ற மெய்ஞ்ஞான சித்தன் எவன் - சிறந்து விளங்குகிற சித்தன் யாவன், (எ-று.)

(வி-ரை.) அல்லல் - (உலகமே) இருளடைந்தது போல் தோன்றும் அளவு உண்டாகும் பெருந்துயரம். பாவனை-சங்கற்பம். அதீதன் - கடந்தவன். மெய்ஞ்ஞானம். உள்ளீடு உடைய ஒளிமயமான பேரறிவு. (93)

**-மார்க்கங்கள்**

**94. ஒன்றென்ற மேலவரை ஒன்றென் றுரைத்தவர்பால்**
**சென்றொன்றி நிற்கின்ற சித்தனெவன்**

(ப-ரை.) மார்க்கங்கள் ஒன்று என்ற மேலவரை ஒன்று என்று உரைத்தவர்பால் சென்று-சமய நெறிகள் (யாவும்) ஒன்றேதான் என்று ஓதுகின்ற ஞானிகளின் உறவு கொண்டு இரு என்று உரைக்கின்றவர்கள் உள்ளத்தில் சென்று; ஒன்றி நிற்கின்ற சித்தன் எவன் - சிறக்கப் பொருந்தி யிருக்கின்ற சித்தன் யாவன், (எ-று.)

(வி-ரை.) மார்க்கங்கள் - (முத்திக்குரிய) வழிகள். மேலவர் - மேதகு ஞானிகள். ஒன்றுதல் - ஊன்றி உறவு கொளல். கடல் நீர் ஆவியாக விண்ணில் சென்று, மழையாகப் பெய்து, பெயர்ந்து வரும் இடத்தாலும், இயங்கும் இடை வழியாலும் பலபெயர் படைத்து, மீட்டும் கடலிலேயே கலக்கும். அது போல்வதுதான் சமய நெறிகள். "கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம், எல்லையின் மறைகளாலும் இயம்பரும் பொருளீ தென்னத், தொல்லையில் ஒன்றே ஆகித் துறைதொறும் பரந்த சூழ்ச்சிப், பல்பெரும் சமயம் சொல்லும் பொருளும்போல் பரந்த தன்றே" என கம்பரது ஆற்றுப் படலம் கூறுமாறு உணர்க. ஞானிகளைச் சார்க என்பவர்கள் மிகமிக நல்லவர்கள்; நல்லவர்கள் உள்ளத்தில் நம்பனுளன் என்பது குறிப்பு. (94)

**-அன்றொருநாள்**

**95. கல்லானை தின்னக் கரும்பளித்துப் பாண்டியன்வீண்**
**செல்லா தளித்தமகா சித்தனெவன்**

(ப-ரை.) அன்று ஒருநாள் - முன்னொரு காலத்தில்; கல்லானை தின்னக் கரும்பு அளித்து-, பாண்டியந், வீண் செல்லாது அளித்த மகா சித்தன் எவன் - வீணே பிறவியில் வீழாதபடி அருளிய மாபெரும் சித்தன் யாவன், (எ-று.)

(வி-ரை.)அபிஷேக பாண்டியர், பாண்டி நாடாண்ட பார்த்திபர்; நல்லவர், தரும சீலர் என்று, உலகம் அவரை உவந்து புகழ்ந்தது. அவர் காலத்தில் இறைவர், அம்மன்னரை ஆட்கொள எண்ணினார். எல்லாம் வல்ல சித்தர் ஆயினார். மதுரையில் கூன் நீக்கினார். குருட்டைப் போக்கினார். ஊமைகளைப் பேச வைத்தார். இச்செய்தி அரசர் செவிவரை சென்றது. அச் சித்தரை அழைத்து வருக என்று, ஏவலர் சிலரை

ஏவினர். அரசனால் எமக்கு ஆக வேண்டுவது ஒன்றும் இல்லை. வரமுடியாது. போய்ச் சொல்க என்று, சித்தர் வந்தவர்களைத் திருப்பி அனுப்பினார்.

விவரம் அறிந்த வேந்தர், உண்மை தான். பண்பு மிக்கவர்களை, நாம்தான் போய்ப் பார்க்க வேண்டும் என்று, வலிந்து தாமே வந்தார். சித்தர் சுந்தரேசர் ஆலயத்தில் இருந்தார். அவரை அணுகிய அரசர், அடியேன் உமது திறத்தை அறிய, இக்கல்யானை, இக்கரும்பைத் தின்னுமாறு செய்யும்; நாம் காண்பம் என்று நகைத்தார்.

கல்யானையைச் சித்தர் கடைக் கண்ணால் பார்த்தார். அப் பொழுதே அது, புனித உயிர் பெற்றுப் புறப்பட்டது. வெடுக் கென்று பிடுங்கிக், கரும்பை மென்று தின்றது. அதனுடன், காவலர் கழுத்தில் இருந்த கண்ட சரத்தையும் பறிமுதல் செய்து, அதையும் அப்பொழுதே விழுங்கியது.

பணியாட்கள், யானையை அடிக்க அணுகினர். சித்தர் கைதூக்க, தூக்கிய அவர்கள் கைகள் தூக்கியபடியே தம்பித்தன. அஞ்சிய அரசர், சித்தரின் அடிபணிந்து, மன்னித்தருளும் என்று வேண்டினர். அவ்வளவில் யானை, விழுங்கிய மாலையை வெளிப்படுத்தியது, பழையபடி மாபெரும் கல் யானையாக மாறியது. மேலும் அஞ்சிய வேந்தர், அவரை விழுந்து வணங்கினார். எழுந்த போது, சித்தர் எதிரில் இல்லை. அதிசயித்தார். உன் ஆடலோ ஐயா இது! என்று பிரார்த்தித்து, பரமன் ஆலயத்தில் பணி பலசெய்து, முதல்வன் திருவருளால் முத்தி பெற்றார் என்பது இதனில் உள்ள வரலாறு. (95)

**-சொல்லாத**

**96. ஒன்றே யிரண்டேமேல் ஒன்றிரண்டே என்பவற்றுள்**
**சென்றே நடுநின்ற சித்தனெவன்**

(ப-ரை.) சொல்லாத ஒன்றே-வாக்கிற்கு அதீதமான பொருள் ஒன்றே எனும் கேவலாத்துவிதம்; இரண்டே-(உயிர்வேறு இறைவேறு ஆதலின், உள்பொருள்) இரண்டே - (உயிர்வேறு இறைவேறு ஆதலின், உள்பொருள்) இரண்டே எனும் துவிதம்; மேல் ஒன்றிரண்டே என்பவற்றுள் - அதன் மேல் (ஒருவாற்றால்) ஒன்றாகியும், (ஒருவாற்றால்) வேறாகியும் உள்ள சுத்தாத்வைதம் என்னும் வழிகள் அனைத்தினும்; சென்றே நடுநின்ற சித்தன் எவன் - சென்று (எல்லாரும் உடன்பட) நடுநாயகமாய் நின்ற சித்தன் யாவன், ()

(வி-ரை.) சொல்லாத-மோனநிலை பெற்ற என்பது குறிப்பு. (96)

**-சென்றேறும்**

**97. அத்திரத்தை மென்மலராய் அம்மலரை அத்திரமாம்**
**சித்திரத்தைப் பேசுவிக்கும் சித்தனெவன்**

(ப-ரை.) சென்று ஏறும் அத்திரத்தை மெல்மலராய் - சென்று பாயுமாறு (அர்ச்சுனன் ஏவிய) அம்புகளை மென்மை மலராகவும்; அம்மலரை அத்திரமாய் - (நான்முகனாதியர் தூண்ட வந்த மன்மதன் ஏவிய) அம்மலர்களை அம்புகளாகவும்; சித்திரத்தைப் பேசுவிக்கும் சித்தன் எவன் - (நாராயணரின் உருவமான) ஓவியத்தை, (சிவனே பரம் பொருள் என்று சிறப்பாகப்) பேசுவித்த சித்தன் யாவன், (எ-று.)

(வி-ரை.) அர்ச்சுனன் அம்புகளை ஏவியது, பாசுபதம் கருதித் தவம் புரிந்த காலம். காமன் மலரேவியது, பார்வதி திருமணம் கருதிய காலம். திருமாலே பரதெய்வம் என்று சிலர் சிவநிந்தை பேசிய காலத்தில், சிவனே யாவர்க்கும் பரன் என அத்திருமால் ஓவியமே பேசியது காசியில் என்க. (97)

**-எத்தலத்துஞ்**

**98. சங்கமதே தாபரமாய்த் தாபரமே சங்கமதாய்ச்**
**செங்கையிடா தாற்றவல்ல சித்தனெவன்**

(ப-ரை.) எத்தலத்தும் சங்கமதே தாபரமாய் - எல்லா நிலத்திலும் இயங்குதிணை உயிர்கள் அனைத்தும், அசர அஃறிணை உயிர்கள் ஆகவும்; தாபரமே சங்கமதாய் - அசர உயிர்களான அஃறிணைகள் யாவும், சர உயிர்களான உயர் திணையாகவும்; செங்கை இடாது ஆற்றவல்ல சித்தன் எவன் - செவ்விய திருக்கரத்தால் இயற்றாமல், சங்கற்பத்தால் உருவாக்க வல்ல சித்தன் யாவன், (எ-று.)

(வி-ரை.) **"தாபர சங்கமங்கள் என்றிரண் டுருவில் நின்று**
**மாபரன் பூசை கொண்டு மன்னுயிர்க்கு அருலை வைப்பன்"**
என்பது சிவஞான சித்தி. இங்கு சொல்லப்பெறும் தாபரம் - அசையாப் பொருள்கள்; சங்கமம் - அசையும் பொருள்கள். மற்று, தாபரம் - சிவலிங்கம்; சங்கமம் - அடியவர் திருவுருவம். இவைகளைத் தன் கைவண்ணம் காட்டாமல், சங்கற்ப மாத்திரத்தால் மாற்றி வைப்பவன் அம் மாதேவன் என்றபடி. சங்கமம் என்பது சங்கம் என விகாரப்பட்டது. (98)

**-தங்குகின்ற**

**99. சத்தெல்லாம் ஆகிச் சயம்புவாய் ஆநந்தச்**
**சித்தெல்லாம் வல்லசிவ சித்தனெவன்**

(ப-ரை.) தங்குகின்ற சத்தெல்லாம் ஆகி - (எங்கும்) தங்கி இருக்கின்ற சத்து அனைத்தும் நிரம்பியும், சயம்புவாய் - (தோற்றுவிப்பார் இன்றித் தானே) முளைத்த முதலாகியும்; ஆநந்த சித்து எல்லாம் வல்ல சிவ சித்தன் எவன் - இன்பச் சித்து அனைத்தும் இயற்றவல்ல சிவ சித்தன் யாவன், (எ-று.)

(வி-ரை.) சத் சித் ஆநந்தம் எனும் தகுதிக்கு ஏற்ப, சத்துப் பொருள் அனைத்தினும் சத்தானான்; சித்து அனைத்தினும் சிறந்தான்; ஆநந்தமே அச்சித்தன் ஆட்சி எனும் அருமையை, உணர்வார் உள்ளம் உருகலுறும். (99)

## உள்ளம்கவர் கள்வன்

**-தத்தெல்லாம்**

**100. நீட்டாது நெஞ்சம் நிலைத்தவர்க்கும் தன்னுண்மை**
**காட்டாது காட்டிநிற்கும் கள்வனெவன்**

(ப-ரை.) தத்து எல்லாம் நீட்டாது - அபாயங்கள் அனைத்தையும் விரட்டி அடித்து; நெஞ்சம் நிலைத்தவர்க்கும்-மனோலயம் அடைந்த மாபெரும் முனிவர்க்கும்; தன் உண்மை காட்டாது காட்டி நிற்கும் கள்வன் எவன் - உள்பொருளாம் தன்மையை (விளம்பரமாகக்) காட்டாமல் காட்டி நிற்கும் கள்வன் யாவன், (எ-று.)

(வி-ரை.) தத்து - ஆபத்து; இது கண்டம் எனப்பெறும். காட்டி நிற்கும் இந்த நிலையில்தான், தொன்மை நூற்களில் துதிகள் தோன்றியுள. (100)

**-பாட்டோடு**

**101. வண்டாலுங் கொன்றை மலரோய் எனமறைகள்**
**கண்டாலுங் காணாத கள்வனெவன்**

(ப-ரை.) பாட்டோடு வண்டு ஆலும் கொன்றை மலரோய் என - வண்டுகள் பாட்டிசைத்து ரீங்கரிக்கின்ற கொன்றை மலர் மாலையனே என்று போற்றி; மறைகள் கண்டாலும் காணாத கள்வன் எவன் - (முதன்மை) மறைகள் முன்னின்று தரிசித்தாலும், காட்சிக்கு அப்பாற் பட்டவனாய் நின்ற கள்வன் யாவன், (எ-று.)

(வி-ரை.) ஆலுதல் - ஒலித்தல். கண்டாலும் காணாத என்பது முரண்தொடை. வேதங்கட்கு மறைகள் என்று பெயருளது; அம் மறைகட்கும் அகப்படாது மறைந்தவன் எனவே, சொற்பிரபஞ்சங்கட்கு எட்டாத ஜோதிமயன் பரன் என்றபடி. (101)

**-தொண்டாக**

**102. அள்ளஞ் செறியார்க்கே அன்றி அறிவார்க்குக்**
**கள்ளம் செறியாத கள்வனெவன்**

(ப-ரை.) தொண்டாக அள்ளு அஞ்சு எறியார்க்கே அன்றி -அடிமைகளாக்கி (த் தம்மை) அள்ளிச் செல்லும் ஐம்புலச் சேட்டைகளை விரட்டி அடிக்காதவர்க்கு (த் தம்மை மறைத்து நிற்பது) அல்லாமல்; அறிவார்க்கு - (அச்செயலை) அறிந்து வெல்லும் மேலோர்க்கு; கள்ளம் செறியாத கள்வன் எவன் - கள்ளத் தனமில்லாமல் (தம்மைத்) தரிசிக்க வைக்கும் கள்வன் யாவன், (எ-று.)

(வி-ரை.) அள் - பகுதி மாத்திரமாய் நின்றது. அஞ்சு - சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் விஷயங்கள். புலச்சேட்டைப் யற்றவர்க்குப் புலன் ஆகுபவன் என்பது குறிப்பு. கள்ளம் - மறைப்பு. கள்ளம் ஆகாத கள்வன் என்பது முரண். (102)

**-எள்ளலறக்**

**103. கொண்டவெலாந் தன்பாற் கொடுக்குமவர் தம்மிடத்தில்**
**கண்டவெலாங் கொள்ளைகொளுங் கள்வனெவன்**

(ப-ரை.) எள்ளல் அற கொண்ட எலாம் - இகழ்ச்சி இல்லா தொழிய, (தமக்கே) உரியன எனக் கொண்டவை அனைத்தையும்; தன்பால் கொடுக்கும் அவர்தம் இடத்தில் - தம் இடத்தில் அர்ப்பணிக்கும் அடியவர்கள் இடத்தில்; கண்ட எலாம் கொள்ளை கொளும் கள்வன் எவன் - காணப்படும் (உடல் பொருள் உயிர்) அனைத்தையும் கொள்ளையடிக்கும் கள்வன் யாவன், (எ-று.)

(வி-ரை.) "வீட்டுக்கு ஆசைப் பட்டவரை-வீட்டை விட்டுத் துரத்தியே, வேட்டாண்டி யாயுலகில் - ஓட்டாண்டி ஆக்கு வார்க்குத், தண்டனிட்டேன் என்று சொல்லடி" எனும் கீர்த்தனைப் பகுதியையும்; "அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும், குன்றே அனையாய்! என்னை ஆட்கொண்ட போதே கொண்டிலையோ" எனும் திருவாசகத்தையும் இங்கு எண்ணுதல் நலம். (103)

**-கொண்டுளத்தில்**

**104. தன்னையொளிக் கின்றோர்க டம்முளொளித் துள்ளஎலாம்**
**கன்னமிடக் கைவந்த கள்வனெவன்**

(ப-ரை.) தன்னை உளத்தில் கொண்டு - தன்னை உளத்தில் தங்கவைத்து; ஒளிக்கின்றோர்கள் தம் - (தன் முனைப்பை ஓடி) ஒளியுமாறு செய்கின்ற ஞானிணூஉடைய; உள் ஒளித்து - உள்ளத்திலேயே ஒளிந்து இருந்து; உள்ள எலாம் - (அவரிடத்து) உள்ள பொருள்கள் அனைத்தையும்; கன்னம் இடக் கைவந்த கள்வன் எவன் - கன்னமிட்டுத் திருடுவதில் கைதேர்ந்த திருடன் யாவன்; (எ-று.)

(வி-ரை.) ஒளியச் செய்தவர் உள்ளத்தில் ஒளிப்பவன் என்பதில், அவனது அகடித கடனா சாமர்த்தியம் புலனாகும். கன்னமிடக் கைவருதல் - ஆத்மாவை அபகரிப்பதில் கை தேர்ந்தவன் என்பது இங்குள நுட்பம். (104)

**-மன்னுலகை**

**105. சற்பனைசெய் கின்றதிரோ தானமெனுஞ் சத்தியினால்**
**கற்பனைசெய் தேமயக்குங் கள்வனெவன்**

(ப-ரை.) மன் உலகை சற்பனை செய்கின்ற திரோதானம் எனும் சக்தியினால் - தொன்று தொட்டு உள்ள உலகின் உயிர்கள், தம்மை உணராதபடி வஞ்சிக்கின்ற மறைப்புச் சத்தியால்; கற்பனை செய்தே மயக்கும் கள்வன் எவன் (உளது போல் விளங்கி இன்மை ஆக்குகின்ற) கற்பனையைக் காட்டிக் கண் மயங்கச் செய்யும் கள்ளன் யாவன், (எ-று.)

(வி-ரை.) "நான் யார்? என் உள்ளம் ஆர்? என் ஞானங்கள் யார்? என்னை யார் அறிவார்" என்று ஏதும் அறியாதபடி ஏமாற்றுவது திரோதானம்; அந்த சத்தியின் மூலம் பயனற்ற கற்பனைகளை வளர்த்து, விபரீதமாக மயங்க வைப்பவன் மாதேவன் என்றபடி. சற்பனை-வஞ்சகம். (105)

**-முற்படுமித்**

**106. தொண்டுலகி லுள்ளவுயிர் தோறுமொளித் தாற்றலெலாம்**
**கண்டுலவு கின்றதொரு கள்வனெவன்**

(ப-ரை.) முற்படும் இத் தொண்டு உலகில் உள்ள - அநாதி நித்தியமாய் அமைந்த உலகத்தில் உள்ள; உயிர் தோறும் ஒளித்து-, ஆற்றல் எலாம் கண்டு-(ஆன்ம) ஆற்றல் முழுதும் அறிந்து; உலவுகின்றது ஒரு கள்வன் எவன் -(உள்ளத்தில்) பவனி வருகின்ற ஒப்பற்ற திருடன் யாவன், ()

(வி-ரை.) முற்படுதல் -தொன்று தொட்டுத் தோன்றுதல். ஆற்றல் -சிவ புண்ணிய பலம். (106)

**-விண்டகலா**

**107. மண்மயக்கும் பொன்மயக்கும் மாதர் மயக்குமெனும்**
**கண்மயக்கும் காட்டிநிற்கும் கள்வனெவன்**

(ப-ரை.) விண்டு அகலா மண் மயக்கும் - (ஆன்மாக்களை) விட்டு நீங்காத மண்ணில் விளையும் மயக்கமும்; பொன் மயக்கும்-பொன்னில் உளதாகும் வேட்கையும்; மாதர் மயக்கும் எனும்-பெண்ணாசை யெனும்; கண் மயக்கும் காட்டி நிற்கும் கள்வன் எவன் - கண் மயக்கம் காண்பித்து (தன்னைக் காட்டாது அவ்வுயிர்களுள்) ஒளித்திருக்கும் களவினன் யாவன், (எ-று.)

(வி-ரை.) "மண்ணாசைப் பட்டேனை மண்ணுண்டு போட்டதடா, பெண்ணாசை பொன்னாசை போகேனே என்குதே" எனப்பட்டினத்து அடிகளும், "பற்று நினைந்தெழும் இப்பாவி மனத் தீமை யெல்லாம்,உற்று நினைக்கிலெனக் கூடுருவிப் போகுதடா" என்று வள்ளலாரும் அருளுவது இங்குக் கருதத் தகும். மண் பொன் பெண் மூன்றும் கண்ணை மயக்கும் என்பது கருத்து. (107)

**-உண்மயக்கும்**

**108. மாசு பறிக்கும் மதியுடையோர் தம்முடைய
காசு பறிக்கின்ற கள்வனெவன்**

(ப-ரை.) உள் மயக்கும் மாசு பறிக்கும் மதியுடையோர் தம்முடைய-உள்ளத்தை வஞ்சிக்கின்ற (காம வெகுளி மயக்கம் எனப்பெறும்) மூன்று குற்றங்கள் ஆகியகளைகளைக்) களையும் ஞானிகளுடைய; காசு பறிக்கின்ற கள்வன் எவன் - செல்வம் முதலியவைகளை (அவ்ர்கள் அறியாதபடிக்) கவரும் கள்வன் யாவன், (எ-று.)

(வி-ரை.) உள்ளத்தைப் பறிக்கிறது மாசு; மாசைப் பறிக்கிறது மதி; மதிஞர் காசைப் பறிக்கின்றவன் கள்வன் என்றபடி. மாசு உள்ளவரை காசில் காமம்; மாசு போனால் காசில் உள்ள காமம் காததூரம் ஓடி விடும்; செல்வத்தில் உள்ள அலட்சியத்தை, காசு என லேசுபடக் கூறியபடி. (108)

**-ஆசகன்ற**

**109. பெண்ணால் எவையும் பிறப்பித்து மற்றைநுதல்
கண்ணால் அழிக்கின்ற கள்வனெவன்**

(ப-ரை.) ஆசு அகன்ற பெண்ணால் எவையும் பிறப்பித்து - (இயல்பிலேயே) களங்கம் இல்லாத இறைவியால் எல்லாவற்றையும் தோற்றுவித்தருளி; மற்றை நுதல் கண்ணால் அழிக்கின்ற கள்வன் எவன் - (அவை அனைத்தையும்) நெற்றிக் கண்ணால் (எரித்து) அழிக்கின்ற கள்வன் யாவன், (எ-று.)

(வி-ரை.) ஆசு - தோஷம். பேண் என்பது முதற் குறைந்து பெண் என்று ஆயது; பேணுதல் - காத்தல். இப் பெயர், அருள் இறைவியை அறிவித்தது. தோற்றுவிப்பவள் இறைவி; சர்வ சம்மாரப் பெயரால் தொலைப்பவன் பரன் என்றபடி. "சுற்றுநெடு நேமிச் சுவர்க்கிசைய எட்டுச் சுவர்க்கால் நிறுத்தி, மேருத் தூண் ஒன்று நடுநட்டு வெளி முகடு மூடி, இரு சுடர்விள(க்கு) இட்டு, முற்ற எற்று புனலிற் கழுவு புவனப் பழங்கலம் எடுத்தடுக்கிப், புதுக்கூழ் இன்னமுதம் சமைத்திட்டு அன்னைநீ பன்முறை இழைத்திட, அழித்தழித்தோர் முற்ற வெளியில் திரியும் மத்தப் பெரும் பித்தன் முன்னின்று தொந்தமிடவும் முனியாது வைகலும் எடுத்தடுக்கிப் பழைய மூதண்ட கூடம் முடும், சிற்றில் விளையாடும் ஒரு பச்சைப் பசும்பிள்ளை செங்கீரை ஆடியருளே! தென்னர்க்கும் அம்பொன்மலை மன்னர்க்கும் ஒரு செல்வி செங்கீரை யாடியருளே!" எனும் குமர குருபரரை இங்கெண்ணுவது நலம். (109)

## 4. சதுரன்

**-எண்ணாது**

**110. நானென்று நிற்கின் நடுவேயந் நானாணத்
தானென்று நிற்கும் சதுரனெவன்**

(ப-ரை.) எண்ணாது - சிந்தனை செய்யாமல்; நான் என்று நிற்கில்-நான்(பிரமம்) என்று இறுமாந்து) இருந்தால்; அந் நான் நாண-அந்த நான் எனும் ஆணவம் நாணம் அடைய; தான் என்று நிற்கும் சதுரன் எவன் - (பிரமம்) தான் என்று முன்னிற்கும் மேம்பாடு மேவியவன் யாவன், (எ-று.)

(வி-ரை.) நான் என்பது, ஆணவத் தடிப்புடைய ஆன்மக் குரல். தான் என்பது - நம்பனது தெய்வ நாமம். 'நிற்கின்' எனும் சொற்போக்கால்; ஒரு சிலர் தவிர அங்ஙனம் பலர் நிற்பதில்லை என்று உணர்த்தியபடி.

**"நாம் பிரமம் நமையன்றி ஆம்பிரமம் வேறில்லை,**
**நன்மைதீ மைகளும் இல்லை;**
**நவில்கின்ற ஆகி, ஆம்இரண் டினும்ஒன்ற**
**நடுநின்ற தென்று, வீணாள்**
**போம்பிரமம் நீதிகேட் போர்,பிரமை யாகவே**
**போதிப்பர் சாதிப்பர்தாம்;**
**புன்மைநெறி கைவிடார்; தாம்பிரமம் வினைஒன்று**
**போந்திடில் போக விடுவார்**
**சாம்பிரமம் ஆமிவர்கள் தாம்பிரமம் எனும் அறிவு**
**தாம்புபாம் பெனும் அறிவுகாண்"**

எனும் தெய்வமணி மாலையை இங்கெண்ணுதல் நலம். (110)

**-மானென்ற**

111. **மாயைதனைக் காட்டி மறைப்பித்தம் மாயையிற்றன்**
**சாயைதனைக் காட்டும் சதுரனெவன்**

(ப-ரை.) மான் என்ற மாயைதனை காட்டி மறைப்பித்து - மான் என்ற பேருடைய அசுத்த மாயையை, (தேகம், கரணம், புவனம் போகம் ஆகுமாறு) தோன்ற வைத்து, (அந்த மாயையால் மகத்தான தன்னை அறியாதபடி) மறைப்பித்து; அம் மாயையில் தன் சாயைதனைக் காட்டும் சதுரன் எவன் - அந்த அசுத்த மாயையில் தன் அருளைப் புலனாக்கும் சதுரன் யாவன், (எ-று.)

(வி-ரை.) தலையான மாயை மூன்று; அவைகளுள் முதலது சுத்த மாயை; இறுதியது பிரகிருதி மாயை; இடையில் இருப்பது அசுத்த மாயை; இடை மாயையில் இருந்து பிரகிருதி எழும்; பிரகிருதியிலிருந்து பிரபஞ்சம்; உதித்த இடத்தில் அவை முறையே ஒடுங்கும்; இவ்வளவும் செய்யும் இறைவனை, ஆன்ம வர்க்கம் அறிந்தது இல்லை; ஆயினும் பெருமான், ஒவ்வொன்றிலும் கருணையொடு தன்னிழலைக் காட்டுகின்றான் என்பது கருத்து. அந்நிழல் வரிசையில் ஒன்றுதான் திருவருட்பா என்று, எண்ணினர் இதயத்தில் இறை இருக்கும் திண்ணம். (111)

**-நேயமுடன்**

**112. நான்மறையும் நான்முகனும் நாரணனும்நாடுதொறும்
தான்மறையும் மேன்மைச் சதுரனெவன்**

(ப-ரை.) நான்மறையும்-, நான்முகனும்-, நாரணனும்-, நேயமுடன் நாடுதொறும் - (அறிவால் முயன்று) ஆர்வம் கொண்டு ஆராயுந்தோறும்; தான் மறையும் மேன்மை சதுரன் எவன் - தான் (காண முடியாதபடி) கரந்திருக்கும் மேதகு தன்மையுள்ள மேலோன் யாவன், (எ-று.)

(வி-ரை.) நான்மறை-இருக்கு, யசுர், சாமம், அதர்வணம்; இது வியாசர் வகுத்த முறை; அவர்க்குமுன் அவைகள், தைத்திரியம், பௌஷ்யம், தலவகாரம், சாமம் எனும் பெயர் கொண்டு இருந்தன. தம்முள் இருக்கும் பொருளை, சொற்கள் தாம் அறிந்தது இல்லை; வேதம் சொற்பிரபஞ்சம்; பொருளாய் அதனுள் பொதிந்துளன் பான். தம்முள் கரந்துள இறைவனை, மறைகள் தாம் அறிந்தது இல்லை. ஓசை மாத்திரமாகி, குரல் எழுப்பிப், பெருமானை அவைகள் என்றும் கூப்பிட்டுக் கொண்டே இருக்கின்றன. அவ்வேதங்கள் வரலாறே அஃதெனில், நான்கு வாயாலும், ஓயாது அவைகளை ஓதும் வேதன் மட்டும் உணர இயலுமோ? நான்முகனை உந்தியில் இருந்து நல்கிய நாரணர் செய்தியும் அஃதேதான். இவர்கள் அணுபட்ச அதிகாரிகள். சம்புபட்சம் ஆகும் சதாசிவம், இவர்கட்கு எங்கும் கரந்து இருக்கிறது என்றபடி. (112)

**-வான்மறையா**

**113. முன்னை மறைக்கு முடிப்பொருளென் றாய்பவர்க்கும்
தன்னை மறைக்கும் சதுரனெவன்**

(ப-ரை.) வான் மறையா முன்னை மறைக்கும் முடிப்பொருள் என்று ஆய்பவர்க்கும்-மகிமைத் தன்மை மறையாத அநாதி நித்தியமான (அருமை) மறைகளின் சிரமேல் உள்ள செல்வம் (இது) என்று ஆய்வு அறிவால் அறிபவர்க்கும்; தன்னை மறைக்கும் சதுரன் எவன் - தன் சொரூபத்தைக் காட்டாத தனிப்பெரும் தகுதியன் யாவன், (எ-று.)

(வி-ரை.) வான் - பெருமை எனினும், தெய்வீகம் எனினும் பொருந்தும். வான் மறையா-(கோடி குறை எவர் கூறினாலும் மறைகளின் தெய்வீகம் என்றும் மங்குவது இல்லை என்பது குறிப்பு. அநாதி நித்தியன் அருளியது ஆதலின், 'முன்னை' எனும் அடை முன்னிற்கின்றது. முடிப்பொருள்-தலைமேல் கொண்ட தனிப்பொருள்; வேதசிரப்பொருள்; சிரமேல் உள்ள வஸ்துவை, சிரமே அறிய இயலாதே; சிரப்பொருள் என்று அறிந்து ஆய்வார்க்கு மட்டும் எப்படி அகப்படும் என்பது கருத்து, (113)

**-உன்னுகின்றோர்**

**114. சித்தத்தில் சுத்த சிதாகாச மென்றொருசிற்
சத்தத்திற் காட்டும் சதுரனெவன்**

(ப-ரை.) உன்னுகின்றோர் சித்தத்தில் - ஊன்றித் தியானிக்கும் ஞானிகளின் உள்ளத்தில்; சுத்த சிதாகாசம் என்று-(தனது சொருபம்) தூய ஞான ஆகாயம் என்று; ஒரு சித் சத்தத்தில் காட்டும் சதுரன் எவன் - ஒப்பற்ற ஞான நாதத்தால் உணர்த்தி அருளும் ஒண்மையன் யாவன், (எ-று.)

(வி-ரை.) உன்னுதல் - அழுந்தித் தியானித்தல். சித்தத்தில் உள்ளது சிதாகாசம்; அதை ஒப்பற்ற சித் சத்தத்தில் உணர்த்தும் சிவம் என்றபடி "சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி, சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டி" என்பது விநாயகர் அகவல். (114)

## தேவதேவத் தன்மை

**-முத்தரென**

**115. யாவர் இருந்தார் அமர்காண வீற்றிருக்கும்
தேவர் புகழ்தலைமைத் தெவனெவன்**

(ப-ரை.) முத்தர் என யாவர் இருந்தார்-ஜீவன் முத்தரென இருந்தவர் எவரோ; அவர் காண வீற்று இருக்கும்-அவர்கள் தரிசிக்க (ஏதமற்ற பீடத்தில்) எழுந்தருளி யிருக்கும்; தேவர் புகழ் தலைமை தேவன் எவன் - தேவப் பெருமக்கள் (தகவொடு) புகழ்ந்து போற்றும் தலையாய தேவன் யாவன், (எ-று.)

(வி-ரை.) முத்தர் - (விரையப் படுத்தும் பந்தத்தில் இருந்து) விடுதலை யடைந்தவர்கள். (வீறு+இருத்தல்-வீற்றிருத்தல்; வீறு-பிறிது ஒருவர்க்கும் இல்லாத சிறப்பு. தேவர்-திவ் எனும் பகுதியின் அடியாகப் பிறந்த பெயர்; திவ்-ஒளி; எனவே, ஒளிமயமான உடலினர் தேவர் எனப்பெறுவர். தேவர் புகழ் தலைமைத் தேவன், வித்தக முத்தர் தரிசிக்க வீறு தோன்ற விளங்குகின்றான் என்றபடி. (115)

**-யாவர்களும்**

**116. இவ்வணத்தன் இவ்விடத்தன் இவ்இயலன் என்றறியாச்
செவ்வணத்த னாம்தலைமைத் தேவனெவன்**

(ப-ரை.) இவ்வணத்தன் - இந்த நிறமுடையவன்; இவ் இடத்தன் - இன்ன இடத்தில் இருப்பவன்; இவ் இயலன் என்று-இந்த இயல்பை யுடையவன் என்று; யாவர்களும் அறியா செவ்வணத்தன் ஆம் தலைமைத் தேவன் எவன் - எத்தகையோராலும் அறிய இயலாத செம்மையை யுடையவனான தலைமைத் தெய்வன் ஆனோன் யாவன், (எ-று.)

(வி-ரை.) வணம் - வண்ணம்; நிறம். இயல் -இயல்பு. "இப்படியன் இந்நிறத்தன் இவ்வணத்தன் இவன் இறைவன் என்று எழுதிக் காட்டொணாதே" என்பது தமிழ் மறை. (116)

**-மெய்வணத்தோர்**

117. **தாம்வாழ அண்ட சராசரங்கள் தாம்வாழ
நாம்வாழத் தன்னுரையாம் நான்மறைகள்**

**-தாம்வாழச்**

118. **சாருருவின் நல்லருளே சத்தியாய் மெய்யறிவின்
சீருருவே ஓருருவாம் தேவனெவன்**

(ப-ரை.) மெய் வணத்தோர் தாம் வாழ-(மெய்ஞ்ஞானமுள மேலோர் வாழவும்; அண்ட சர அசரங்கள் தாம் வாழ-அண்டங்களில் உள்ள இயங்குதிணை, அஃறிணை உயிர்கள் வாழவும்; நாம் வாழ-(இப்படிப் பாடிப் பரவும்) நாம் அனைவரும் வாழவும்; தன் உரையாம் நான் மறைகள் தாம் வாழ-தன் வாக்கான நான்கு மறைகளும் வாழவும்; சார் உருவின் நல் அருளே சத்தியாய்-(தான்) சார்ந்த திருவுருவைத் தந்த திருவருளே சத்தியாக; மெய் அறிவின் சீர் உருவே ஓர் உரு ஆம் தேவன் எவன் - மெய்ஞ்ஞானமான திருமேனியே (தன்) ஒப்பற்ற திருவுருவமான தேவன் யாவன்,(எ-று.)

(வி-ரை.) மெய்ம்மையின் வண்ணம், மெய்வணம் எனப்பெற்றது. வண்ணம்-சொருப நிறம். இந்நிறம் எய்திய மேலோர், 'மெய்வணத்தோர்' எனப்பெற்றனர். தாம் என்பவைகள் தேற்றப் பொருளின் நின்றன. 'நிறுத்திடும் நினைந்த மேனி நின்மலன் அருளினாலே' எனும் சிவஞான சித்தியாரின் செய்தி, 'சார் உருவின் நல்லருளே சத்தியாய்' என்பதில் வெளியாயது. மெய்ஞ்ஞானப் பண்பு அனைத்தும் உருண்டு திரண்டு உருவானது எனும் மேனியான் எம்மான் என்பது, இறுதிவரியில் உள்ள செய்தி. (117-18)

**-ஈருருவும்**

119. **ஒன்றென் றுணர உணர்த்தி அடியருளம்
சென்றங் கமர்ந்தருளுந் தேவனெவன்**

(ப-ரை.) ஈர் உருவும் ஒன்று என்று உணர உணர்த்தி-(ஆன்மா, பரமான்மா எனும்) இரு முதல்களும், (ஒன்றை விட்டு ஒன்று நீங்காது) ஒன்றியது என்று உணருமாறு உணர்த்தி; அடியர் உளம் சென்று அங்கு அமர்ந்து அருளும் தேவன் எவன் - அடியவர்களது இதய ஆலயத்தில் புகுந்து அங்கேயே (குருவாக) அமர்ந்து அருளும் தெய்வம் ஆனவன் யாவன், (எ-று.)

(வி-ரை.) ஈர் உருவம் ஒன்று என்று உணர்த்தல் - பண்ணும் இசையும்; பரிதி ஒளியும் பகற்கால மதி ஒளியும்; எள்ளும் நெய்யும்; தீயும் (அதன் மயமாய்க் காய்ந்திருக்கும்) இரும்பும்; தண்ணீரும் உப்பும்; விண்ணும் காற்றும்; உடலும் உயிரும்; நீரும் நிழலும்; பகற்காலப் பரிதியொளியும் பளிங்கின் ஒளியும்; பரிதி ஒளியும் பகற்கால விளக்கொளியும்; பாலும் நீரும்; கண்ணொளியும் கதிரொளியும்; ஆன்ம அறிவும் அந்த அறிவால் பொருள்களை அறியும் கண்ணொளியும் போல், சிவமும் சீவனும் அத்துவிதக்

கலப்பினது எனலை உணர்த்தி யருளி, அதன்பின் அன்பர்களது உள்ளத்தில் உறவு கொண்டு உறைபவன் என்பது கருத்து. (119)

**-என்றென்றும்**

**120. தற்சகசம் என்றெ சமயம் சமரசமாம்
சிற்சபையில் வாழ்கின்ற தேவனெவன்**

(ப-ரை.) என்றென்றும் தன் சகசம் என்றே-எந்த நாளிலும் தனக்கு இயல்பான நிலை என்று; சமயம் சமரசம் ஆம் - சமய நெறிக்கும், சமரச வழிக்கும் பொதுவான; சித் சபையில் வாழ்கின்ற தேவன் எவன் - ஞானசபையில் வாழ்கின்ற தெய்வம் ஆனவன் யாவன், (எ-று.)

(வி-ரை.) சகஜம் -உடன் பிறந்தது. (120)

**-பிற்படுமோர்**

**121. பொய்விட்டு மெய்ந்நெறியைப் போற்றித்தற் போதத்தைக்
கைவிட் டுணர்வே கடைப்பிடித்து**

(ப-ரை.) பிற்படும் ஓர் பொய் விட்டு - கீழ்த்தரமாகும் பொய் ஒழுக்க சமய நெறியைப் புறம் ஒதுக்கி; மெய் நெறியை போற்றி - மெய்ம்மைச் சமய வழியையே மேற்கொண்டு; தற்போதத்தை கைவிட்டு-(எல்லாம் என்னால் ஆகும் எனும்) முனைப்பைக் கை கழுவி; உணர்வே கடைப்பிடித்து-மெய்யுணர்வு ஒன்றையே பேருறுதியாகப் பிடித்து, (எ-று.)

(வி-ரை.) 129ஆம் கண்ணிவரை ஒரே தொடர்ச்சி. பொய்யைப் புறக்கணித்தால், வித்தக மெய்விலாசம் விளங்கும்; மெய்யை மேற்கொண்டால், பண்புடையோர் பாராட்டு பரவிவரும்; பாராட்டு வளர வளர, முனைப்பு நட்பாடி முறுவலிக்கும்; முனைப்பை முறியடித்தால், மெய்யுணர்வு மேவும் என்னும் இவைகளை எண்ணும் போதே, இப்பேறு என்று நமக்கு எய்துமோ என்று, கண்ணும் மனமும் கலங்குகின்றனவே. (121)

**-நெய்விட்ட**

**122. தீப்போல் கனலும் செருக்கறவே செங்கமலப்
பூப்போலும் தன்தாள் புணைபற்றி**

(ப-ரை.) நெய் விட்ட தீப்போல் கனலும் செருக்கு அறவே-நெய்யிட்ட நெருப்பைப்போல், அனல் மயமாகும் அகங்காரம் அடியொடு அழிய; செங்கமலப் பூப்போலும் தன் தாள் புணைபற்றி - செந்தாமரை மலர்போலும் தன்னுடைய திருவடிகளாகிய மரக்கலங்களை (ப்பாதுகாப்பு ஆகப்) பற்றி, (எ-று.)

(வி-ரை.) புணை-மரக்கலம். “மனமெனும் தோணிபற்றி மதியெனும் கோலை யூன்றி, சினமெனும் சரக்கை ஏற்றிச் செறிகடல் ஓடும் போது, மதனெனும் பாறை தாக்க மறியும்போ துணர ஒண்ணா; உனைஉனும் உணர்வு நல்காய்; ஒற்றியூர் உடைய கோவே!” எனும் நம்பியாரூரர் பிரார்த்தனையும், “அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லாற், பிற ஆழி நீந்த லரிது” எனும் குறளும், இங்கு நினைவில் பெரிதும் நிழலிடுகின்றதே! (122)

**-காப்பாய**

123. **வெண்ணீ றணிந்து விதிர்விதிர்த்து மெய்பொடிப்பக்**
**கண்ணீர் அருவி கலந்தாடி**

(ப-ரை.) காப்பு ஆய வெண்ணீறு அணிந்து-பாதுகாப்பான திருவெண்ணீறு தரித்து; விதிர் விதிர்த்து மெய் பொடிப்ப-நடுநடுங்கி, மேனியில் உரோமங்கள் புளகிதம் அடைய; கண்ணீர் அருவி கலந்து ஆடி-ஆநந்தக் கண்ணீர் (ஆகிய) அருவியில் முழுகித் தோய்ந்து, (எ-று.)

(வி-ரை.) விதிர் விதித்தல் - உடலாடல். (123)

**-உண்ணீர்மை**

124. **என்புருகி உள்ளுருகி யின்பார் உயிருருகி**
**அன்புருகி அன்புருவ மாகிப்பின் -வன்பகன்று**

(ப-ரை.) உள் நீர்மை என்பு உருகி - உள்ளத்தின் நீர்மைக்கு உரியபடி (உடலின்) என்புகள் உருகி; உள் உருகி-மனம் உருகி; இன்பு ஆர் உயிர் உருகி-இன்ப நிறைவின் உயிர் உருகி; அன்பு உருகி அன்பு உருவம் ஆகி-அன்பு எனும் பண்பு தைல தாரையாகி, (அந்த) அன்பே திருமேனியாகி; பின் வன்பு அகன்று-பிறகு கடினத்தன்மையே கால் வாங்கிப் போய், (எ-று.)

(வி-ரை.) 120 லிருந்து, இதுவரை வியன்மிகு மெய்ப்பாட்டின் விளைவு. “அன்பு பிழம்பாய்த் திரிவார் அவர் கருத்தின் அளவினரோ” என்பர் சேக்கிழார். (124)

125. **புண்ணியா திங்கள் புரிசடையாய் பொன்இதழிக்**
**கண்ணியா எங்கள் களைகண்ணே**

(ப-ரை.) புண்ணியா-புண்ணிய முதலே; திங்கள் புரிசடையாய் - மதி விளங்கும் சடையாளா; பொன் இதழி கண்ணியா-பொன்னிற இதழ்களையுடைய (மாபெரும்)

கொன்றை மாலையனே; எங்கள் களை கண்ணே-எம்மனோர்க்குப் பற்றுக் கோடுஆன பரா, (எ-று.)

(வி-ரை.) திங்கள் புரிசடை-பிறைக்கண்ணி மாலை எனினுமாம். கண்ணி-கண்கள்போல் தோன்றக் கட்டியமாலை. களைகண்-ஆதாரம். (125)

**-எண்ணியாங்(கு)**

**126. அன்பர்க் கருளும் அரசே அமுதேபேர்**
**இன்பக் கடலே எமதுறவே**

(ப-ரை.) எண்ணி யாங்கு அன்பர்க்கு அருளும் அரசே-அன்பர்க்கு நினைத்தவைகளை (அவ்வப்போது) அருளும் மன்னா; அமுதே-, பேர் இன்பக் கடலே-, எமது உறவே-, (எ-று.)

(வி-ரை.) "அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே" எனும் அருட்பா இங்கு எண்ணத் தகும். (126)

**-மன்பெற்று**

**127. மாற்றுரையாப் பொன்னே மணியேஎம் கண்மணியே**
**ஏற்றுவந்த மெய்ப்பொருளே என்றுநிதம் போற்றிநின்றால்**

(ப-ரை.) மன் பெற்று மாற்று உரையா பொன்னே-மதிப்பில் உயர்ந்து மாற்று கூற முடியாத (பசும்) பொன்னே! மணியே-, என் கண்மணியே-, ஏறு உவந்த மெய்ப் பொருளே என்று-(மேதகு) தரும விடையை உகந்த மெய்ப் பொருளே என்று; நிதம் போற்றி நின்றால்-நாள்தோறும் துதித்து இருந்தால், (எ-று.)

(வி-ரை.) மன் - நிறைவு. ஏறு-தன்னொற்று இரட்டியது. (127)

**128. உள்ளூறி உள்ளத் துணர்வூறி அவ்வுணர்வின்**
**அள்ளூறி அண்ணித் தமுதூறித்-தெள்ளூறும்**
**வான்போல் பரவி மதிபோல் குளிர்ந்துயர்கோல்**
**தேன்போல் மதுரிக்கும் தேவனெவன்**

(ப-ரை.) உள் ஊறி-(அக்கணமே) உள்ளத்தில் ஊற்று உண்டாகி; உள்ளத்து உணர்வு ஊறி-(அவ்) உள்ளத்தில் உணர்வு உற்றெடுத்து; அவ் உணர்வின் அள் ஊறி-அந்த உணர்வின் நடு இடம் ஊற்றுச் சுரந்து; அண்ணித்து அமுது ஊறி-இனிக்கும் அமுது பெருகி; தெள் ஊறும் வான்போல் பரவி-தெளிநீர் சுரக்கும் (பயனான) மேகங்கள் போல் பரவி; மதிபோல் குளிர்ந்து-திங்கள்போல் குளிர்ந்து; உயர் கோல்தேன்போல் மதுரிக்கும் தேவன் எவன் - உயர்ந்த கொம்புத்தேன் போல் தித்திக்க இருந்த தெய்வம் ஆனவன் யாவன், (எ-று.)

(வி-ரை.) அள் - (இளகிய உணர்வின்) நடு இடம். அண்ணித்தல்-இனித்தல்; "அண்ணிக்கும் காண்மினோ" என்பது தேவாரம். தெள்-தெளிவு. வான் -ஆகு பெயராய் மேகங்களை அறிவித்த பெயர். கோல்தேன் -கொம்புத்தேன். மதுரித்தல் -சுவையின் சொரூபம் ஆதல். இவ்வளவும் பக்தியில் உருவாகும் மெய்ப்பாடுகள். (129-9)

**-வான்போனார்**

**130. மாண்கொடுக்கும் தெய்வ மடந்தையர்க்கு மங்கலப்பொன்**
**நாண்கொடுக்க நஞ்சுவந்த நாதனெவன்**

(ப-ரை.) வான்போனார் மாண் கொடுக்கும் - இறந்து போனவர்க்கு (உயிரொடு எழும்) சிறப்பைத் தருகின்ற; தெய்வ மடந்தையர்க்கு-தேவ மகளிர்க்கு; மங்கலப்பொன் நாண் கொடுக்க நஞ்சு உவந்த நாதன் எவன் - மாங்கல்ய நாணை நல்க, நஞ்சை அமுதா உகந்த நாதன் யாவன், (எ-று.)

(வி-ரை.) "அத்திமான் கலைமான் ஐந்தரு நிழல்மான் அயில்விழிக்கு அஞ்சனம் அமைத்த புத்திமான் என்றே கடு அடையாளம் பொறித்த கந்தரம் உள்ள பெம்மான்" என்ற ஆன்றோர் அறிவிப்பை இங்கு அறிதல் தகும். பொன் நாண் - மாங்கல்யம்.(130)

## முதலாளி

**-நாண்மலர்பெய்**

**131. தார்த்தியாய்த் தேவர் அரகரவென் றேத்தஅட்ட**
**மூர்த்தியாய் நின்ற முதல்வனெவன்**

(ப-ரை.) தேவர் ஆர்த்தி ஆய் நாள்மலர் பெய்து அரஅர என்று ஏத்த-அமரர்கள், நிறைதரும் அன்புடன், அன்றலர்ந்த மலர் தூவி அரஅர என்று துதிக்க; அட்டமூர்த்தி ஆய் நின்ற முதல்வன் எவன் - எண்திசை முதலாளிகளாகி இருக்கின்றான் யாவன், (எ-று.)

(வி-ரை.) நாள் மலர்-புதுமலர். ஆர்த்தி-பெருகிய பக்தி. அட்ட மூர்த்திகளை, திருவடிப் புகழ்ச்சி உரையிற் காண்க. (131)

## கணேச கருணை

**-சீர்த்திபெற**

**132. ஈண்டற் புதவடிவாய் எத்தேவ ரேனுநின்று**
**காண்டற் கரிதாம் கணேசனெவன்**

(ப-ரை.) சீர்த்தி பெற-(வியனார்) சிறப்பு வெளிப்பட; ஈண்டு அற்புத வடிவாய் - இவ்வுலகில் அற்புத சொரூபன் ஆகி; எத்தேவரேனும் நின்று காண்டற்கு அரிதாம் கணேசன் எவன் - எத்தகைய தேவர் ஆயினும், திருமுன் நின்று காண்பதற்கு அரிய முதலான கணேசன் யாவன், (எ-று.)

(வி-ரை.) ஈண்டு-இவ்வுலகு எனும் - சுட்டல் அளவாய் நின்றது. அற்புதம்-கருதிக் கனிதற்கு உரியது. (அதிசயம்-கண்டு மகிழற்கு உரியது என வேறுபாடு காண்க.) ஏனும்-எனினும். கண+ஈசன் - கணேசன்; (அ முன் ஈவரின் ஏ ஆகும் என்பது புணரியல் விதி.) தேவகணம், பூதகணம், மனிதகணம், விலங்கு கணம் முதலிய எல்லாக் கணங்கட்கும் அதிபன் ஆதலின், கணேசன் என்றார். (132)

**-வேண்டுற்றுப்**

**133. பூமியெங்கும் வாழ்த்திப் புகழ்வார் விரும்புமிட்ட**
**காமியங்கள் ஈயும் கணேசனெவன்**

(ப-ரை.) பூமி எங்கும் வேண்டுற்று வாழ்த்தி புகழ்வார் விரும்பும் - நிலவுலகு முழுதும் (அருட்கொடை) வேட்டு, (விநயமுடன்) புகழ்ந்து துதிப்பவர் விரும்புகின்ற; இட்ட காமியங்கள் ஈயும் கணேசன் எவன் - இஷ்ட காம்யார்த்தங்களைக் கைவல்யம் ஆக்கும் கணேசன் யாவன், ()

(வி-ரை.) வேண்டுதல் - பிரார்த்தனை செய்து கொள்ளல். இஷ்ட காமிய அர்த்தம் -சுய நலமாக இச்சித்த பேறுகள். “சித்திதரும் புத்திதரும் செந்திருவைச் சேர்ப்பிக்கும்; பத்திதரும் மெய்ஞ்ஞானம் பாலிக்கும் - முத்திதரும்” ஆதலின், ‘இட்டகாமியங்கள் ஈயும்” என்றார். (133)

**-நாமியங்க**

**134. ஏண வருமிடையூ றெல்லாம் அகற்றியருள்**
**காணஎமக் கீயும் கணேசனெவன்**

(ப-ரை.) ஏண வரும் இடையூறு எல்லாம் அகற்றி-எதிர்கொண்டு வந்து மோதும் விக்கினங்கள் அனைத்தையும் விலக்கி; நாம் இயங்க-(உலகில்) நாம் உலவ; அருள் காண எமக்கு ஈயும் கணேசன் எவன் - தன்னருளைத் தரிசிக்குமாறு தயை செய்யும் கணேசன் யாவன், (எ-று.)

(வி-ரை.) இடை+ஊறு-இடையூறு; ஊறு-பழுது. இடையிடை வாழ்க்கையில் இடர்ப்பாடுகள் வருவது, இயற்கையின் விளையாட்டு; அதைத் தவிர்க்க உரியவர் ஆனைமுகர். விக்கினம் தவிர்த்தலின், அவர் விக்கிநேஸ்வரர் எனும் பெயரினர். இடையூறு அகற்றல் முதல் நிலை. “நாதமும் கடந்து நிறைந்து, நின்மயமே நானென அறிந்து, நான் தானாம் பேதமும் கடந்த மௌன ராச்சியத்தைப், பேதையேன் பெறுவது எந்நாளோ?” என்ற பிரார்த்தனைக்கு இரங்கி, அருள் காண அருளல் அடுத்த நிலை எனும் இக் கண்ணியில், இம்மை வீடு இரண்டும் அருள்பவர் கணேசர் என்பது

பெறுதும். மேலும் இது குறித்து, எமது விநாயகர் அகவல் உரையில் விரிவு காணலாம். (134)

## முருகனருள்

**-மாணவரும்**

**135. முந்த மறையின் முழுப்பொருளை நான்முகற்குத்
தந்த அருட்கடலாம் சாமியெவன்**

(ப-ரை.) மாண வரும் முந்து அ மறையின் முழுப் பொருளை -வித்தகமாக வெளிப்படும் முதன்மையும் அநாதியுமான வேத முழுமையாம் ஓம் பொருளை; நான்முகற்குத் தந்த-பிரமனுக்கு உபதேசித்த; அருள் கடலாம் சாமி எவன் - கருணைக் கடலான திருவாளன் யாவன், (எ-று.)

(வி-ரை.) மாணவரும் முந்த-மாண்புடைய சிவபிரானும்(சீட பாவனையில்) முன் நின்று வினவ எனப்பொருள் கொள்ளவும் பொருந்தும்; இப் பொருட்கு, மாண் அவரும் எனப் பிரித்துப் பொருள் உணர்க. மறையின் முழுப்பொருள் பிரணவப் பொருள்; அவ் வொன்றே உலகாய் விரிந்தது; வேதங்கள் பலவாகி விளங்கியது; ஆதலின், 'முழுப்பொருள்' என்றார். முழுப்பொருள்-திரண்ட பொருள். மெய்ப்பொருள் இறைவனை, வேதம் ஸ்வாமி என்னும்; ஸ்வாமி-சம்பத்து. (135)

## இதய குகையினன்

**-தந்தமக்காம்**

**136. வாதகற்றி உண்மை மரபளித்து வஞ்சமலக்
கோதகற்றும் நெஞ்சக் குகேசனெவன்**

(ப-ரை.) தம் தமக்கு ஆம் வாது அகற்றி - தங்களுக்குள் உளதாம் வாதங்களைத் தவிர்த்து; உண்மை மரபு அளித்து-உண்மை (ஞான) மரபை உபதேசித்து; வஞ்சமல கோது அகற்றும்-வஞ்சகமான (மும்) மலக் குறைகளை (அடியொடு) நீக்கும்; நெஞ்சக் குகேசன் எவன் - இதய குகாலய இறைவன் யாவன், (எ-று.)

(வி-ரை.) அடியவர் பலதிறப்படுவர். வழிமுறையில், ஒவ்வொருவர்க்கு ஒவ்வொரு கொள்கைஉளது. சிலசமயம், வாதம் அதனால் வளர்வது உண்டு. உத்தமர்களான அடியவர்களை உய்விக்க, அவ்வவர்தம் இதய குகைகளில் இருந்து, இனிதே எம்மான் எதிர்ப்படுகின்றான். அவர்களது சேறும் நீருமான செய்தி தவிர்த்திட, உண்மை மரபை உணர்த்துகின்றான்; தன் வழியே ஆணவக் களிம்பை அகற்றி, அவர்களை ஆளாக்கிக் கொள்கின்றான் என்னும் இக் கண்ணியின் அருமையை, ஊன்றி எவரும் உணர்வது உத்தமம்.

**“அடியார் ஆனீர் எல்லீரும், அகல விடுமின் விளையாட்டை!**
**கடிசேர் அடியே வந்தடைந்து, கடைக்கொண் டிருமின் திருக்குறிப்பை”**

“விடுமின் வெகுளி வெட்கைநோய், மிகஓர் காலம் இனி இல்லை; உடையான் அடிக்கீழ் பெருஞ்சாத்தோடு, உடன் போவதற்கே ஒருப்படுமின்; அடைவோம் நாம்போய் சிவபுரத்துள் அணியார் கதவது அடையாமே; புடைப்பட்(டு) உருகிப் போற்றுவோம். புயங்கன் ஆள்வான் புகழ்களையே.” “நிற்பீர் எல்லாம் தாழாதே, நிற்கும் பரிசே ஒருப்படுமின்! பிற்பால் நின்று பேழ் கணித்தால், பெறுதற்(கு) அரியன் பெருமானே”. “சேரக் கருதிச் சிந்தனையைத் திருந்த வைத்துச் சிந்திமின்”. “மருள்வீர் பின்னை மதிப்பார்யார்? மதியுள் கலங்கி மயங்குவீர்; அருள்ஆர் பெறுவார் அகலிடத்தே, அந்தோ அந்தோ அந்தோவே” எனவரும் திருவாசகப் பாசுரங்கள், இங்கு எண்ணற்கு உரியன.

“இதய பங்கய குகரமே குகை என்பது ஆரிய பாஷையில், அதனுள் ஆய சிதம்பரத்துளி, அமலஞான விண்மெய்யனாச், சத்தமும் சுக நடனமேபுரி தம்பிரானை, ஓர் குகன் எனாக் கதறும் மாமறை; அவனை யன்றி ஒரு கடவுள் நாம் அறியேமரோ” என்பது தகராலய ரகசியம்; இது கொண்டு குகேசநாமப் பெயரறிக; பொருளறிக; செயலறிக என்பர் மேலோர். (136)

<u>பலமுகநாமப் பரன்</u>

**-தீதகற்றித்**

**137. தங்குமுல கங்கள் சாயாமல் செஞ்சடைமேல்**
**கங்கைதனைச் சேர்த்த கடவுளெவன்**

(ப-ரை.) தங்கும் உலகங்கள் சாயாமல் தீது அகற்றி-இயல்பாக இருக்கும் உலகங்கள் இடர் அடையாமல், (தாவி வந்த) தீமையைத் தவிர்த்து; செஞ்சடைமேல் கங்கைதனை சேர்த்த கடவுள் எவன் - சிவந்த சடைமேல் கங்கையைச் சேரவைத்த இறைவன் யாவன், (எ-று.)

(வி-ரை.) கங்கா எனும் வடசொற்கு, வேகம் என்பது பொருள்; அதற்கு ஏற்ப அக் கங்கை, பகீரதன் வேண்டலுக்கு இரங்கி, விண்ணில் இருந்து எழுந்து கீழ் நோக்கி இறங்கியது. நிலவுலகம் இன்றொடு அழியும் என்று எவரும் அஞ்சும் அளவு, அதன் வேகம் அதி பயங்கரமாக இருந்தது. அது கண்ட அமலர் வெளிப்பட்டார். விரித்த நெடுஞ் சடையாட நின்றார். பிரமாத கங்கைநீர் முழுதும், அவரது ஒரு சடை நுனியளவாக ஒடுங்கியது. உய்ந்தது அதனால் உலகம். அதன் “வேகம் கெடுத்தாண்ட வேந்தன்” பெருமான் என்று, வேத தேவதைகள் ஏத்திப் போற்றி இறைஞ்சின. இயல்பாகப் பிரகிருதித் தொடர்பில்லாத ஞான கங்கை ஏந்தியுள எம்மான், இடைவந்த கங்கையைக் கர்வம் அடக்கியபின், இந் நிலத்தில் இயங்க விட்டான் எனும் வரலாறு இதனில் உளது. (137)

**-எங்குறினும்**

**138.	கூம்பா நிலைமைக் குணத்தோர் தொழுகின்ற பாம்பா பரணப் பரமனெவன்**

(ப-ரை.) எங்கு உறினும் கூம்பா நிலைமை குணத்தோர் தொழுகின்ற-எந்த இடத்தில் இருந்தாலும், மனம் சுருங்கா குணநலமுள மாதவர் வணங்கி வழிபடுகின்ற; பாம்பு ஆபரணப் பரமன் எவன் - அரவுகளை அணிகலனாக உடைய மேலோன் யாவன், (எ-று.)

(வி-ரை.) கூம்புதல் - சுருங்குதல். பாம்புருவான பரிக்ரக சக்திகளை இயல்பில் அணிந்தவன் இறைவன்; அதனுடன், தாருவனத்தவர் ஏவிய பாம்புகளையும் அணிகலனாக அணிந்த செய்திகள் இங்கு எண்ணத் தகும். "இருப்பினும் நிற்கும் போதும் இரவுகண் துயிலும் போதும், திருக்களா வுடைய நம்பா! சிந்தைஉன் பால தாமே" என்று இருப்பவர், 'கூம்பா நிலைமைக் குணத்தோர்' என அறிக.

**-கூம்பாது**

**139.	போற்றுரைத்து நிற்கும் புனிதன்மேல் வந்தகொடும் கூற்றுதைத்த செந்தாள் குழகனெவன்**

(ப-ரை.) கூம்பாது போற்று உரைத்து நிற்கும் புனிதன் மேல் வந்த -குறையாத அன்புடன் துதிபல செய்து பூசித்த (மாபெரும்)தூய மார்க்கண்டேயர் மேல் (ஏறிட்டு) வந்த; கொடும் கூற்று உதைத்த செம்தாள் குழகன் எவன் - கொடிய கூற்றனை உதைத்த சிவந்த திருவடிகளையுடைய இளம்பிரான் யாவன், (எ-று.)

(வி-ரை.) கூம்புதல் - சுருங்குதல்; கூம்பாமை-எதிர்மறை. போற்று உரைத்து - போற்றுதல் கூறி; குற்றியலுகரப்புணரியல். "மழவும் குழவும் இளமைப் பொருள" என்பது தொல்காப்பியம். (139)

**-ஆற்றலுறு**

**140.	வையம் துதிக்கும் மகாலிங்க மூர்த்திமுதல் ஐயைந்து மூர்த்தியெனும் ஐயனெவன்**

(ப-ரை.) வையம் துதிக்கும் ஆற்றல் உறு மகாலிங்க மூர்த்தி முதல் - உயர்ந்தோர் ஏத்துகின்ற அளவிலா ஆற்றலுடைய மகாலிங்க மூர்த்தி முதலாக; ஐ ஐந்து மூர்த்தி எனும் ஐயன் எவன் - இருபத்தைந்து மூர்த்தம் எனப்பெறும் பதிப்பொருள் ஆனோன் யாவன், (எ-று.)

(வி-ரை.) ஆற்றல் - (இறைவனது) எண் குணங்களுள் ஒன்று. வையம் - (எப்பொருளையும்) வைக்கும் இடம் எனும் பொருளில், பூமியைக் குறித்த காரணப் பெயர்.

1. மகாலிங்க மூர்த்தி. 2. (பிறையணி திருமுடிப் பெருமானார் எனும்) சந்திர சேகர மூர்த்தி. 3. (இறைவியுடன் இணைந்தோன் எனும்) அர்த்த நாரீச மூர்த்தி. 4. நடராஜமூர்த்தி. 5. கலியாண சுந்தர மூர்த்தி. 6. பிட்சாடனமூர்த்தி. 7. (விடையூரும் பெருமான் எனும்) ரிஷபவாகன மூர்த்தி. 8. மன்மத தகன மூர்த்தி. 9. (இயமனை அடர்த்தோன் எனும்) காலாந்தக மூர்த்தி. 10. (முப்புரம் எரித்தோன் எனும்) திரிபுராந்தக மூர்த்தி. 11. (கங்கையை முடியில் வைத்தோன் எனும்) கங்காதர மூர்த்தி. 12. (யானைத் தோலை உரித்துப் போர்த்தோன் எனும் கஜவக்தர மூர்த்தி. 13. தட்சயாக கண்டன மூர்த்தி. 14. (திருமாலைத் திருமேனியிற் கொண்டோன் எனும்) கேசவார்த்த மூர்த்தி. 15. (வேடுவ உருவன் எனும்) கிராத மூர்த்தி. 16. (எலும்பு மலையன் எனும்) கங்காள மூர்த்தி. 17. சண்டேஸ்வர அனுக்ரக மூர்த்தி. 18. திருநீலகண்ட மூர்த்தி. 19. ஆழியைத் திருமாலுக்கு அளித்தவர் எனும்) சக்கரதான சொரூப மூர்த்தி. 20. (இறைவியும் தாமும், இடையில் முருகனும் எனும்) சோமாஸ்கந்த மூர்த்தி. 21. கணேச அனுக்கிரகமூர்த்தி. 22. (ஒற்றைக் காலர் எனும்) ஏகபாத மூர்த்தி. 23. சுக ஆசன மூர்த்தி. 24. தட்சிணாமூர்த்தி. 25. (உமைமணாளர் எனும்) உமேச மூர்த்தி; இந்த மகேச மூர்த்தங்கள் இருபத்தைந்து; இம்மூர்த்தங்கள், ஒவ்வொரு காலத்தில் வெளிப்பட்டு ஆன்ம வர்க்கங்கட்கு அருள் பாலிப்பவை. விரிவு ஆகமங்களில் பெருகியுள. (140)

**-ஐயம்தீர்**

**141. வல்லார்சொல் வண்ணமெந்த வண்ணமந்த வண்ணங்கள்**
**எல்லா முடைய இதத்தனெவன்**

(ப-ரை.) ஐயம் தீர் வல்லார் சொல் வண்ணம் எந்த வண்ணம் - ஐயம் (திரிபு அறியாமை யாவும்) நீங்கிய வல்லாண்மை யுடைய ஞானிகள் கூறும் சொரூபங்கள் எவைகளோ; அந்த வண்ணங்கள் எல்லாம் உடைய இதத்தன் எவன் - அந்த ரூபங்கள் அனைத்தும் ஆன இன்ப வடிவன் யாவன், (எ-று.)

(வி-ரை.) வண்ணம் - நிறமுமாம். மேல் உரைத்தது, இருபத்தைந்து மகேசுர பேதங்கள். அவைகள் மட்டும் அன்று; இன்னும் அனுபூதிமான்கள் அறிவித்த அளவிறந்த திருமேனிகளும் ஆனவன் இறைவன் என்றபடி. (141)

**-எல்லார்க்கும்**

**142. தாந்தலைவ ராகத்தம் தாடொழுமெத் தேவர்க்கும்**
**ஆந்தலைமை ஈந்தபர மார்த்தனெவன்**

(ப-ரை.) எல்லார்க்கும் தாம் தலைவர் ஆக-அனைவர்க்கும் தாமே தலைவர் ஆகுமாறு; தம் தாள் தொழும் எத்தேவர்க்கும் ஆம் தலைமை யீந்த-தம் திருவடிகளை வணங்கி வழிபடும் எந்தத் தேவர்கட்கும் உயர்ந்த தலைமையை உதவியருளும்; பரம அர்த்தன் எவன் - மெய்ப்பொருள் ஆனோன் யாவன், (எ-று.)

(வி-ரை.) “வாழ்த்துவதும் வானவர்கள், தாம் வாழ்வான்; மனநின்பால் தாழ்த்துவதும், தாமுயர்ந்து தம்மை எல்லாம் தொழ வேண்டி” என்பது திருவாசகம். தாம் வாழ வழிபடும்வரை, அவர்கள் எண்ணியபடியே ஏற்றம் தருபவன் என்பது குறிப்பு. (142)

**-போந்துயிர்கள்**

**143. எங்கெங் கிருந்துமனத் தியாது விழைந்தாலும்**
**அங்கங் கிருந்தளிக்கும் அண்ணலெவன்**

(ப-ரை.) உயிர்கள் போந்து -உயிர்கள் புறப்பட்டு; எங்கு எங்கு இருந்து-எந்த எந்த உலகத்தில் இருந்து; மனத்து யாது விழைந்தாலும் - மனத்தில் எதை யெதை விரும்பினாலும்; அங்கு அங்கு இருந்து அளிக்கும் அண்ணல் எவன் - (அவர்கள் இருக்கும்) அந்தந்த இடங்களில் வெளிப்பட்டுப் பரம அருளைப் பாலிக்கும் பரமன் யாவன், (எ-று.)

(வி-ரை.) முற்பிறப்பில் செய்த வினைகளை அனுபவிக்க, எந்த எந்தத் தேகத்தில், எவ்வெவ் உலகில் இருந்து, எதனை எதனை அனுபவிக்க எண்ணினாலும், அதை அதை அங்கங்கே இருந்து அருள்பவன் எனப் பரன் வியாபக அருள் விலாசம் படித்தபடி. (143)

**-புங்கமிகும்**

**144. அண்ணல் திருமலர்க்கை ஆழிபெறக் கண்ணிடந்த**
**கண்ணற் கருளியமுக் கண்ணனெவன்**

(ப-ரை.) புங்கம் மிகும் அண்ணல் திருமலர்க்கை ஆழிபெற-தூய்மை மிகுந்த, பெருமையில் சிறந்த, தாமரைத் திருக்கரத்தில் இருந்த சக்கரப் படையைப் பெறுதற் பொருட்டு; கண் இடந்த கண்ணற்கு அருளிய முக்கண்ணன் எவன் (திருவீழிமிழலைப் பதியில் தம்) கண்ணைப் பெயர்த்து (திருவடியில்) இட்ட கண்ணனான திருமாற்கு (அதை) அருளிய முக்கண் முதல்வன் யாவன், (எ-று.)

(வி-ரை.)அண்ணல் கரத்தில் இருந்தது அழி. அதைப் பெறுதற்பொருட்டு, கண்ணன் திருவீழி மிழலையில் முக்கண் முதல்வரை ஆயிரம் தாமரை கொண்டு அர்ச்சித்தார். நாள்தோறும் இதே நிலை. ஒருநாள் ஒரு மலர் குறைய, எனக்குத் தாமரைக் கண்ணன் எனும் பெயருளது. இது மெய்யாமேல், எனதுகண் அர்ச்சனைக்குப் பயன்படுவதாக என்று, ஒரு கண்ணைப் பெயர்த்து திருவடியில் இட்டு அருச்சித்தார். அது கண்டு திருவுளம் இறங்கிய அத்தர், உடனே அருளொடு வெளிப்பட்டு ஆழியை அருளினர் என்பது இதனில் உள்ள வரலாறு. கண்ணற்கு மூன்று கண்ணர் அருளிய முதன்மைப் பேறு இது என்க. (144)

**-மண்ணிடத்தில்**

**145. ஓயாது சூல்முதிர்ந்த ஓர்பெண் தனக்காகத்**
**தாயாகி வந்த தயாளனெவன்**

(ப-ரை.) மண் இடத்தில்-நிலவுலகில்; ஓயாது சூல் முதிர்ந்த ஓர் பெண் தனக்காக-கருப்பம் முதிர்ந்து அளவிறந்து வேதனைப்படும் ஒரு வணிக மகட்காக; தாய் ஆகி வந்த தயாளன் எவன் - (அவளது) தாயுருக் கொண்டு வந்து பிரசவம் பார்த்த அருளாளன் யாவன், (எ-று.)

(வி-ரை.) திரிசிரபுரம். அப்பதியில், சிவபத்தியிற் சிறந்தவள் ஒரு வணிக மகள் பிரசவ காலம். விவரம் உணர்ந்து விரைந்து வந்த தாயை, காவிரி வெள்ளம் தடைப்படுத்தி விட, அக்கரையில் நின்று, மகள் நிலை யாதாகுமோ என்று அவள் மறுகி யிருந்தாள். இங்கே கண்ணீர் பெருக்கிக் கலங்கிய மகள், இறைவனை எண்ணி இறைஞ்சுதல் செய்ய, தற்பரன் தாயானான். மகளும் கருவுயிர்த்தான். வெள்ளம் தணிந்தது. பெற்றவள் வந்தாள். உற்றதை உணர்ந்தாள். தாயும் மகளும், காலத்தில் தாயாகிக் காத்த தயாளனை, தாயுமான பரா என்று, போற்றி மகிழ்ந்து புளகிதம் எய்தினர் என்பது, இங்குள வரலாறு. (145)

**-சேயாக**

**146. வேல்பிடித்த கண்ணப்பன் மேவுமெச்சில் வேண்டும் இதத்**
**தால்பொசித்து நேர்ந்த தயாளனெவன்**

(ப-ரை.) சேய் ஆக வேல் பிடித்த கண்ணப்பன் மேவும் எச்சில் - முருகபிரான்போல் வேல் ஏந்திய கண்ணப்பநாயனார் விரும்பிய எச்சில் இறைச்சியை; வேண்டும் இதத்தால் பொசித்து நேர்ந்த தயாளன் எவன் - வேண்டிக் கொண்ட இதமான மொழிகளால் உண்டு உடன்படுத்திக் கொண்ட அருளாளன் யாவன், (எ-று.)

(வி-ரை.) மகவு எச்சில் படுத்திய உணவை, தானே தந்தை வாய்க்குத் தருமெனில், மறுக்காது பிதா மகிழ்ந்து உண்பார். இது உலகியல் அனுபவம். இதுபோல் கண்ணப்ப நாயனார், இறைச்சியைத் தீயில் வதக்கி, வாயிலிட்டு, அதுக்கிப் பார்த்து, சுவை யுடையனவற்றை மட்டும் தொன்னையில் வைத்து, 'பழகிய இனிமை பார்த்துப் படைத்த இவ்விறைச்சி, சால அழகிது!; "தேனுமுடன் கலந்தது, இது தித்திக்கும்!" "நாயன்! நீரே அமுது செய்தருளும் என்று பரமன் முன், கொஞ்சி வேண்டும் குரலிற்கு இரங்கி, இறைவர் அதனை என்றனர் ஆதலின், 'வேண்டும் இதத்தால் பொசித்து' என்றார்.

இதம்-பிரியம் பெரிது விளையும் இனியமொழி. நேர்ந்த என்பது, தன்னில் இணைத்துக் கொண்ட எனும் பொருளது. கண்ணப்பிய பொழுது, "நில்லு கண்ணப்ப நில்லு கண்ணப்ப! என் அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப" என்று விளித்து, திண்ணப்பரைக் கண்ணப்பர் ஆக்கியது, இறைவரது தயாமூல தர்மம். (146)

**-பால்குடத்தைத்**

**147. தான்தந்தை என்றெறிந்தோன் தாளெறிந்த தண்டிக்குத்
தான்தந்தை யான தயாளனெவன்**

(ப-ரை.) பால் குடத்தை எறிந்தோன் தந்தைதா என்று-(உதைத்துப்) பால்குடத்தை உருட்டியவன் தன் தந்தையேதான் என்று(அறிந்தும்); தாள் எறிந்த தண்டிக்கு-(அவனுடைய) கால்களை வெட்டிய விசாரசர்மர்க்கு; தான் தந்தை ஆன தயாளன் எவன் - தானே இயற்கைத் தந்தையான அருளாளன் யாவன், (எ-று.)

(வி-ரை.) திருச்செய்ஞலூரில், உத்தம அந்தணரில் உதித்தார். விசாரசர்மர் எனும் பெயரில் விளங்கினார். பசுவை ஒரு இடையன் அடிப்பதைப் பார்த்தார். அவனைத் தடுத்தார். அருமை தெரியாதவன்; கனிவொடு பசுக்களை, நானே காப்பன் என்று உறுதி உரைத்து, ஊர்ப் பசுக்களைத் தாமே மேய்த்தார். நல்ல இடத்தில் புல்லைக் காட்டி, தூய நீரில் குளிப்பாட்டி, கண்ணெனக் காத்த அவரை, பசுக்கள் தம் கன்றெனக் கருதி, பாலைப் பெருக்கின. வீணே சிந்தும் பாலை, பரமன் அபிஷேகத்திற்குப் பயன்படுத்த நினைத்தார். குடங்களில் கொண்டார். மணலைக் குவித்தார். இலிங்கம் ஆக்கினார். அபிஷேகித்தார். அர்ச்சித்தார். ஆராதித்தார். கண்ட இடையன், ஊரில் கலகம் மூட்டினான். ஊரவர், விவரத்தை அவருடைய தந்தையிடம் அறிவித்தனர். எச்சதத்தன் எனும் தந்தை, மைந்தர் செயலை மறைந்து இருந்து கண் காணித்தான். விரைந்து வந்தான். ஆத்திரத்தால் மைந்தரை அடித்தான். வழிபாட்டில் மனம் லயித்த மைந்தர், அடி விழுவதை அறிந்திலர். அதன்பின் எச்சதத்தன், பால் குடத்தைக் காலால் இடறினன். பால் சிந்தக் கண்ட பாலர், அநியாயம் செய்தான் தந்தை என்று அறிந்தார். யாரா யிருந்தால் என்ன! இது சிவாபராதம் என்று எண்ணினார். அண்மையில் ஒரு கோல். அதை மழுவாகப் பாவித்தார். எடுத்தார். வீசினார். தந்தையின் கால்களைத் தள்ளினார். அதே நேரத்தில், பெருமான் உவந்து பிரசன்னம் ஆயினன். தானே அவர்க்குத் தந்தை யாயினன். விசாரசர்மரை, அடியவர்க்குத் தலைவர் ஆக்கினன். அரசியற்ற ஒரு அண்டத்தை அருளினன். தனது நிவேதனங்களையும், மாலைகளையும், அவர்க்கு உரிமை யாக்கினன். தன் ஆலயத்தில் அவர்க்கு ஒரு தனிக் கோயிலும் அருளினன் என்பது, இறைவர் காட்டிய தயாள நிலை. (147)

**-தான்கொண்டு**

**148. சம்பு நறுங்கனியின் தன்விதையைத் தாள்பணிந்த
சம்பு முனிக்கீயும் தயாளனெவன்**

(ப-ரை.) நறும் சம்பு கனியின் தன் விதையை தான் கொண்டு-நன்மணம் கமழும் நாவல் பழத்தின் விதையை உட்கொண்டு; தாள் பணிந்த சம்பு முனிக்கு ஈயும் தயாளன் எவன் -(புனித) திருவடிகளில் அடைக்கலம் புகுந்த சம்பு முனிவர்க்கு(த் தன்னையே) தந்த அருளாளன் யாவன், (எ-று.)

(வி-ரை.) நறு-நன் மணம்; இது சம்புவிற்கு அடை. தன் -ஆறனுருபுப் பொருளது; அசை நிலையுமாம். தயையை ஆள்பவன் தயாளன். சம்பு -வடசொற் பெயர்; இது, தமிழில் நாவல் என்று பெயர்பெறும். திருவானைக்கா என்று ஒரு தலம்.

அங்கு நாவல் மரத்தோப்பு ஒன்று; அங்குத் தவஞ் செய்த முனிவர் ஒருவர். சம்பு முனிவர் என்பது அவர் திருப்பெயர். இஃது, இருந்த இடம் பற்றிவந்த பெயர். அம்முனிவர் உணர்வில், கயிலை ஒருநாள் காட்சியாயது. உடனே எழுந்தார். வெறும் கையாகப் போவது எப்படி என்று எண்ணினார். ஒரு தொன்னை தைத்தார். அதனில் நாவல் பழங்களை இட்டார். புறப்பட்டார். விரைந்தார். வடகயிலைக்கு வந்தார். இறைவனை அன்புடன் இறைஞ்சினார். கொணர்ந்த பழத் தொன்னையைத் திருமுன் வைத்தார்.

அன்பொடு நிவேதித்த அவைகளுள் ஒன்றை, இறைவர் எடுத்தார். திருவாயில் இட்டார். சுவைத்தார். கொட்டையைத் துப்பினார். இறைவர் எச்சிற் பட்டது; பிரசாதம் இது; எவர்க்கும் கிட்டாதது என்று, முனிவர் அக்கொட்டையை எடுத்து விழுங்கினார். பரம நித்தியர் பார்வைபட்ட, கைப்பட்ட, வாய்ப்பட்ட அக்கொட்டையும், அழியாச் சிரஞ்ஜீவி ஆயது. முனிவர் வயிற்றுள் சென்ற அது, ஜீரணம் ஆகாமல் முளைத்தது. அவரையும் சிரஞ்ஜீவிகளில் ஒருவரென ஆக்கியது. ஆரம்பத்தில் சிறு செடி. வர வர மரமாக வளர்ந்தது. பிரமரந்திரத்தைப் பிளந்து வெளிப்பட்டு, விண்ணளாவி, பரம நிழலை எங்கும் பரப்பியது. அடியில் இருப்பவர் முனிவர் என அறியாமல், கிளைகளில் கூடு கட்டிப் பரவைகள் குடியிருந்தன.

சம்பு முனிவர், சம்போ! இப்படியும் ஒரு ஆடலா ஐயா என்று, துதித்தபடி நின்று தொழுதார். சம்பு! புறப்படு! திருவானைக்காவில், என்றும் சிரஞ்ஜீவியாய்த் தவம் செய்து இரு என்று ஏவினர். முனிவர் மரந்தூக்கிக் கோலத்தில் நடந்தார். தற்பரர் குறித்த திருவானைக்காத் தலத்தில் தங்கினார். அரிய பெரிய தவத்தில் ஆழ்ந்தார். எம்மான் அடி நிழலில், அனுபூதிமான்கள் இருப்பது இயல்பு. சம்பு முனிவர் நிழலிலோ, இறைவர் இலிங்க உருவாகி இன்றும் இருக்கின்றார். பாட்டை இப்பொழுது படித்துப் பாருங்கள். ஆ! என்ன அருமையான செய்தி இது என்பது தெரியவரும்; ஆம். அவன் அருளாண்மைக்கு வரையறையே இல்லையே!

**-அம்புவியில்**

### 149. ஆண்டவனென் றேத்தப்பொன் அம்பலத்தில் ஆநந்தத் தாண்டவஞ்செய் கின்ற தயாளனெவன்

(ப-ரை.) அம்புவியில் - அழகிய இடமகன்ற நிலவுலகில்; ஆண்டவன் என்று ஏத்த-(அகில உலகையும் எம்மையும்) ஆட் கொண்டவனே என்று துதித்து எவரும் தொழுமாறு; பொன் அம்பலத்தில்-(சிதம்பரப்) பொற்சபையில்; ஆநந்த தாண்டவம் செய்கின்ற தயாளன் எவன் - இன்பத் திருக்கூத்தை இயற்றுகின்ற அருளாளன் யாவன், ()

(வி-ரை.) ஆநந்தத் தாண்டவம் - பஞ்ச கிருத்திய ஆடலுள் ஒன்று; இது அனுக்கிரக நிலை எனப்பெறும். (149)

**-காண்தகைய**

**150. முத்துச் சிவிகையின்மேல் முன்காழி ஓங்குமுழு முத்தைத் தனிவைத்த முத்தனெவன்**

(ப-ரை.) முன் காழி ஓங்கும் முழுமுத்தை; முதன்மைச் சீகாழியில் திருவவதரித்த திருஞான சம்பந்தர் எனும் முழுமுத்தை; காண் தகைய முத்துச் சிவிகையின் மேல் - (எவரும்) தரிசிக்கும் தகுதியாக, முத்துப் பல்லக்கின் மேல்; தனி வைத்த முதல்வன் எவன் - ஒப்பிலாதபடி (ஏற்றி) வைத்த முதன்மையன் யாவன், (எ-று.)

(வி-ரை.) காளி வழிபட்ட தலம் காழி என்று ஈறு திரிந்தது; இது, பிரமன் ஊர், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை, காழி கொச்சைவயம், கழுமலம் எனும் 12 பதிகளைத் தன்னுள் கொண்ட அற்புதமான தலம்; ஒவ்வொன்றிலும் எத்தனையோ அற்புதங்களும் நிகழ்ந்துள. அத்னால் ‘முன்காழி’ என்றார். தலங்களுள் முன்னத் தக்க தலம்; முன்னுதல் - ஊன்றித் தியானித்து உணர்தல்.

முதன்மைக் காழியில் ஒரு முத்து உதித்தது; அது எக்குறையும் இல்லாத முழுமுத்து. இப்பி முதலியவைகளில் இருந்து விடுபட்டுத் தோன்றலின், நவரத்தினங்களுள் ஒன்றற்கு முக்தம் என்று பெயர்; முக்திக்கும் இஃதேபொருள். வெப்பத்திற்குரிய பிறவியில் இருந்து விடுதலை தருதலின், வீடு பேறும் முக்தி எனப்பெறும் இச்செயல் செய்த, செய்கின்ற செய்யும் ஆளுடைய பிள்ளையாரை, ‘முழுமுத்தம்’ என்றார். அம் முத்தை முத்துச் சிவிகையில், ஏற்றிய முத்தர் இறைவர் என்பது, அருமையான பிராசம் என்னும் சொல்லணி. (150)

**-பத்திபெறு**

**151. நாவொன் றரசர்க்கு நாம்தருவேம் நல்லூரில் வாஎன்று வாய்மலர்ந்த வள்ளலெவன்**

(ப-ரை.) பத்தி பெறு நா ஒன்று அரசர்க்கு-(பேறான) அன்பைப் பெற்ற ஒருமை உணர்வுள திருநாவுக்கரசர்க்கு; நாம் தருவேம் - நாம் (நின் எண்ணத்தை) நிறைவேற்றி வைப்பம்; நல்லூர்க்கு வா என்று வாய் மலர்ந்த வள்ளல் எவன் - திருநல்லூர்க்கு வா என்று திருவாய் மலர்ந்த வண்மையுளன் யாவன், (எ-று.)

(வி-ரை.) நல் அன்பு ஒன்றிய நாவினர் அப்பர். அவர் அன்பு கண்டே திருநாவுக்கரசு எனும் திருப்பெயர் வைத்தார் தேவதேவர். “நாமார்க்கு குடியல்லோம் நமனை யஞ்சோம் பணிவோம் அல்லோம், அஞ்சுவது யாதொன்றும் இல்லை, அஞ்ச வருவதும் இல்லை” என்று பாடி, பூவரசர் எதிர்ப்பைப் புறங்கண்டவர் திருநாவுக்கரசர்.

“சித்தி முற்றி யோகம் செழும் பொழிலிற் பூவை செயும் சத்தி முற்றம்” எனும் தலம் சார்ந்தார். அங்கு, சதாசிவமே! அயனெழுதிய தலைஎழுத்து அழிய, “பூவார் அடிச்சுவடு என்மேல் பொறித்துவை, தேவா! என்று அலறிப் பிரார்த்தித்து அழுதார். இரக்கம் கொண்ட எம்பிரான், திருநாவுக்கரசு! திருநல்லூர்க்கு வா! அது நடைபெறும் என்று அசரீரியாக அருளினர். வருக என்று வாய் மலர்ந்ததே வண்மை; வந்தார்க்கு

அப்பேற்றை, வாக்களித்தபடி தந்த அந்த வண்மையை, நினைக்கும் போதே நெஞ்சம் பெரிதும் நெகிழ்கிறதே! வள்ளல்-வரையறையின்றி வழங்குபவன். “எல்லூரும் மணிமாட நல்லூரின் அப்பர்முடி இடைவைகி அருள் மென்பதம்” என்பது திருவடிப்புகழ்ச்சி.(151)

**-பூவொன்று**

**152. நன்றொண்டர் சுந்தரரை நாம்தடுக்க வந்தமையால்
வன்றொண்டன் நீயென்ற வள்ளலெவன்**

(ப-ரை.) பூ ஒன்று நல் தொண்டர் சுந்தரரை-(திருக்கயிலையில் இருந்து) நிலவுலகில் திருவவதரித்த நலம் சிறந்த தொண்டரான நம்பியாரூரரை; நாம் தடுக்க வந்தமையால் - நாம் தடுத்து ஆட்கொள்ள வந்த காரணத்தால்; நீ வன் தொண்டன் என்ற வள்ளல் எவன் - நீ(எமக்கு) வன் தொண்டன் என்று திருவாய் மலர்ந்தருளிய வண்மையாளன் யாவன், (எ-று.)

(வி-ரை.) பரவை, சங்கிலிகளை மணந்து கொள்! பர்யங்கி சாதனையை, தமிழகத்தில் பரவச் செய் என்பது, கயிலையில் பரமர் கட்டளை. அதை மறந்த நம்பியாரூரர் புதுமணம் புணரப் புகுந்த அமயம், நீ என் அடிமை என்றார், வயோதிக உருவில் வந்த இறைவர். பித்தனோ மறையோன் என்றார் சுந்தரர். பித்தனோ பேயனோ! இன்னம் எத்தனை சொன்னாலும் நாணேம்! எம்மை யாரென்று உணர்ந்திலை! வித்தகம் பேசாதே! எம் ஏவலைச் செய் என்று கூறியும் கேளாரை, நீதி மன்றத்தில் நிறுத்தி, வாதிட்டு வலிந்தாண்ட வரலாறு, பெரிய புராணத்தில் பேசப் பெறும். மறுத்தும், பிடித்துத் தள்ளியும், வைதும், ஒப்பந்த சாசனத்தைப் பிடுங்கிக் கிழித்தும் முரணினாரை, விடாது முயன்று அடிமை கொண்டமையின், ‘வன் தொண்டர் என்றார்.’ (152)

**-நந்தொண்டிற்**

**153. காணிக்கை யாகக் கருத்தளித்தார் தம்மொழியை
மாணிக்கம் என்றுரைத்த வள்ளலெவன்**

(ப-ரை.) நல் தொண்டின் காணிக்கை ஆக கருத்து அளித்தார் தம் மொழியை- நன்மையை யுடைய திருப்பணியின் காணிக்கை ஆக தம் கருத்தை அர்ப்பணித்த திருவாத வூரடிகளின் திருவாசகத்தை; மாணிக்க வாசகம் என்று வாய்மலர்ந்த வள்ளல் எவன்-, (எ-று.)

(வி-ரை.) அழியும் பொருளை, காணிக்கையாக அளித்தார் பலருளர்;

**“சிந்தனைநின் றனக்காக்கி, நாயினேன்தன்**
**கண்இணை நின் திருப்பாதப் போதுக்கு ஆக்கி,.**
**வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி, வாக்கு உன்**
**மணிவார்த்தைக்கு ஆக்கி, ஐம்புலன்கள் ஆர**
**வந்தனை! ஆட்கொண்டு, உள்ளே புகுந்த, விச்சை**

**மாலமுதப் பெருங்கடலே! மலையே! உன்னைத்**
**தந்தனை! செந் தாமரைக்காடு அனைய மேனித்**
**தனிச்சுடரே! இரண்டும்இல் இத்தமிய னேற்கே!"**

என்றும்,

"அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும், குன்றே அனையாய் என்னை ஆட்கொண்ட போதே கொண்டிலையோ? இன்றோர் இடையூறு எமக்குண்டோ? எண்தோள் முக்கண் எம்மானே! நன்றே செய்வாய், பிழைசெய்வாய், நானோ இதற்கு நாயகமே!" என்று தம் கருத்தையும் காயத்தையும், அம்மானுக்கே அர்ப்பணித்த அவர் வாக்கு வளத்தைச் சுவைத்த வரதன், "தித்திக்கும் மணிவார்த்தை" என்று பலபடப் பாராட்டிய அருமைகளை, அவர் வரலாற்று நூற்களைக் கொண்டு அறியத் தகும். "ஏதவூர் தங்காத வாதவூர் எங்கோவின் இன்சொல்மணி அணியும் பதம்" என்பது திருவடிப் புகழ்ச்சி.

**-தாணிற்கும்**

154. **தன்னன்பர் தாம்வருந்தில் சற்றும் தரியாது**
**மன்னன்பர் உள்ளளிக்கும் வள்ளலெவன்**

(ப-ரை.) தாள் நிற்கும் தன் அன்பர் தாம் வருந்தில் சற்றும் தரியாது - திருவடி (நிழலை) உடைய (உறுதியொடு) இருக்கும் தனது அன்பர்கள் உள்ளம் வருந்தினால், ஒரு சிறிதும் பொறாது; மன் அன்பர் உள் அளிக்கும் வள்ளல் எவன் - நிலைபேறான (அந்த) அன்பர்கள் கருதியதை நிறைவேற்றுவிக்கும் வண்மையன் யாவன், (எ-று.)

(வி-ரை.) தாள் நிற்றல் -(தவப் பேற்று) முயல்வில், தளராது இருக்கும் எனினுமாம். உள்-உள்கியது; சிந்தித்தது என்றபடி. (154)

**-முன்னன்பிற்**

155. **சால்புடையநல்லோர்க்குத் தண்ணருடந்தாட்கொள ஓர்**
**மால்விடைமேல் வந்தருளும் வள்ளலெவன்**

(ப-ரை.) முன் அன்பில் சால்புடைய நல்லோர்க்கு தண் அருள் தந்து ஆள் கொள-(அன்பொடு) தியானிக்கும் அறவோர்க்கு, தண்மை அருளைத் தந்து ஆட்கொளல் பொருட்டு; ஓர் மால் விடை மேல் வந்து அருளும் வள்ளல் எவன் - ஒப்பற்ற மால் விடை மேல் அமர்ந்து வந்து அருள் வழங்கும் வண்மையன் யாவன், (எ-று.)

(வி-ரை.) முன் - முன்னுதல்; தியானித்தல்; தல்லீற்று விகுதி புணர்ந்து கெட்டது.

“இடமெல்லாம் கொள்ளாத் தகைத்தே, இடம் இல்லாக் காலும், இரவு ஒல்லாச் சால்பு.” (உண்டிக்கு இடமின்றி, வறுமை அளவு மீறிய நாளினும், அயலவர் இடத்தில் இரத்தலை உடன்படாத அமைதி, இவ்வுலகங்களுள் அடங்காத பெருமையது) எனப் பொருள்தரும் குறளில், சால்பு-அமைதி எனும் பொருட்டாதல் அறிக.

**“ஊனைக் குறித்த உயிரெல்லாம் நாண் என்னும்**
**நன்மை குறித்தது சால்பு”.**

(உயிர்கள் அனைத்தும், உடலை நிலைக்களனாக் கொண்டு அதனை விடா; அதுபோல், சால்பு நாணொடு செர்ந்தல்லது பயன் எய்தா) எனும் இக் குறளில், உயிர் உடலால் பயனெய்தும்; சால்பு நாணால் பயனெய்தும் எனும் இடத்து சால்பின் அருமை கருதப்பெறும்.

**“அன்பு நாண் ஒப்புறவு கண்ணோட்டம் வாய்மையொடு**
**ஐந்து, சால்பு ஊன்றிய தூண்”**

(சால்பு எனப் பெறும் பாரத்தைத் தாங்கிய ஐந்து தூண்கள் உள; (1) உறவினர் மேலன்றி அயலவர் இடத்தினும் உளதாய அன்பு; (2) பாவம் பழிகளில் நாணல்; (3) உபகாரியாதல்; (4) பழையவர் மேல் பரிவு; (5) வாய்மையை வளர்த்தல் எனும் இவைகளே அத்தூண்கள் எனும் இக்குறளினும்) சால்பின் சால்பு உணரத்தகும். இவர்களைவிட நல்லார் உலகில் எவர் உளர்? அவர்கட்கு அருளல் பொருட்டு, தரும விடை மேல் வரில் நேரமாகும் என, மால் விடையில் விரைந்து வரும் விமலன் எனும் அருமை மறக்க முடிவது இல்லையே! (155)

**-மான்முதலோர்**

**156. தாமலையா வண்ணம் தகையருளி ஓங்குவெள்ளி**
**மாமலைவாழ் கின்றஅருள் வள்ளலெவன்**

(ப-ரை.) மால் முதலோர் தாம் அலையா வண்ணம் தகை அருளி-திருமால் முதலிய தெய்வ மேலோர் அலைமோதாதபடி தகுதியுடைய பரம திருவருளைப் பாலித்து; ஓங்கு வெள்ளி மாமலை வாழ்கின்ற அருள் வள்ளல் எவன் - (வானில்) உயர்ந்து ஓங்கிய வெள்ளி மலையில் சீகண்ட ருத்திரராக வாழ்வின் சொரூபம் தோன்ற இருக்கும் வள்ளல் யாவன், (எ-று.)

(வி-ரை.) தாம் மலையா வண்ணம் தகையருளி என்பதில், தாம் - அசைநிலை. மலைப்பு அடையாதபடி எளிதில் சேவை எய்த அருளி எனினுமாம். (மலைப்பு-விபரீத ஞானம்.) “ஊழிதோ றோங்கும் உயர் பொன் நொடித்தான் மலை” என்று ஆளுடை நம்பிகள் அருளியபடி, ‘ஓங்கு’ என உபசரிக்கப் பெற்றது; அம்மலை அருளின் எடுப்பான தோற்றம் என்பதை, ‘மா’ எனும் அடை நினைவுறுத்துகின்றது.

## <u>தெய்வமதே தெய்வம்</u>

**-ஆமவனே**

**157. நம்மைப் பணிகொண்டு நாரணனும் நாடரிதாம்**
**செம்மைக் கதியருள்நம் தெய்வங்காண்**

(ப-ரை.) ஆம் அவனே நம்மை பணி கொண்டு-(வள்ளல்) ஆன அப்பெருமானே நம்மை அடிமை கொண்டு; நாரணனும் நாட அரிது ஆம் - திருமாலும் ஆவலித்து அடைய இயலாத; செம்மை கதி அருள் நம் தெய்வம் காண் - சிவகதி அருளும் நம் தெய்வம் ஆவதை அறிந்து கொள், (எ-று.)

(வி-ரை.) நம்மைப் பணிகொண்டருள் நம் தெய்வம் எனக் கூட்டிப் பொருள் கொளப் பெற்றது. செம்மை கதி - செம்மையை யுடைய கதி; செம்மை-சிவமாம் தன்மை; கதி - அடைக்கல நிலயம். தெய்வம் - பால் பகா அஃறிணை. காண்-முன்னிலை அசையுமாம். (157)

**-எம்மையினும்**

**158. நாடக் கிடைத்தல் நமக்கன்றி நான்முகற்கும்**
**தேடக் கிடையாநம் தெய்வங்காண்**

(ப-ரை.) எம்மையினும் நாட கிடைத்தல் நமக்கு அன்றி - எப்பிறப்பினும் ஆர்வமுடன் அறிய அகப்படுதல் நமக்கே அல்லாமல்; நான்முகற்கும் தேடக்கிடையா நம் தெய்வம் காண் - பிரமதேவனுக்கும் தேடிக் கிட்டுவதற்கு அரியது நம் தெய்வம் (எ-று.)

(வி-ரை.) படைப்புக் கடவுட்கும் அகப்படாப் பரன், எந்த இடத்திலும் நம்முன் எளிதில் எய்துகின்றதே என்றபடி.

**-நீடச்சீர்**

**159. நல்வந் தனைசெய்யும் நம்போல்வார்க் கோர்ஞானச்**
**செல்வம் தருநமது தெய்வங்காண்**

(ப-ரை.) நீட சீர் நல் வந்தனை செய்யும் நம்போல் வார்க்கு -சிறப்பு மிகு விநய வணக்கம் செய்யும் நம்போன்ற (எளிய) அன்பர்கட்கு; ஓர் ஞான செல்வம் தரும் நமது தெய்வம் காண் - ஒப்பற்ற ஞானச் செல்வத்தை நல்கும் நமது தெய்வம் ஆயிற்றே, (எ-று.)

(வி-ரை.) நீடு அ சீர் எனப் பிரித்து, பண்டு தொட்டுப் படரும் அம்மேதகமை எனினுமாம். நல் வந்தனை-முனைப்பகன்ற நமற்காரம். முகமினிக்கும் போலி வணக்கம் அன்று; தொன்று தொட்டு எளிமையைத் தோற்றுவிக்கும் தூய வணக்கத்தர் நாம். அஃது அறிந்தே, ஞானத் திருவை நமக்கு அருள்கின்றான்; அவன் நம் பெருமான் என்று உரிமை கொண்டாடியபடி. (159)

**-சொல்வந்த**

**160. எண்மைபெறு நாமுலகில் என்றும் பிறந்திறவாத்
திண்மை யளித்தருள்நம் தெய்வங்காண்**

(ப-ரை.) சொல் வந்த எண்மை பெறும் நாம் - எளிமையர் என்று (உலகரால்) ஏசப் பெறும் நாம்; என்றும் பிறந்து இறவா திண்மை அளித்தருள் நம் தெய்வம் காண் - எக்காலத்தும் பிறத்தல் இறத்தல் இல்லாதபடி, திடத்தை அளித்தருளும் (அவனே) நம் தெய்வம்; கண்டு கொள் நீ, (எ-று.)

(வி-ரை.)இயற்கையில் எளிமையர் அல்லர் நாம்; வெறும் உலகம், வெறும் சொற்களால் செல்வமிலி, உலக அனுபவ அறிவிலி, வாழும் வகையிலி என்று சொல்லிச் சொல்லி, அச்சொற்களால் எளிமை தோற்றுவதன்றி, உண்மையில் பிறவா இறவாப் பெரும் திடத்தைப் பெற்றவர் நாம் என்பது கருத்து. எண்மை-எளிமை. திண்மை(கலங்காத்) திடவுடமை. (160)

**<u>தெய்வதேசிகன்</u>**

**-வண்மையுற**

**161. முப்பாழ் கடந்த முழுப்பாழுக் கப்பாலைச்
செப்பாது செப்புறுநந் தேசிகன்காண்**

(ப-ரை.) முப்பாழ் கடந்த முழுப் பாழுக்கு அப்பாலை-(விந்து, மோகினி, மான் எனும்) மூன்று பாழ்கட்கும் அப்பாற்பட்ட முழுப்பாழ் எனப்பெறும் மூலப் பிரகிருதிக்கு அப்பாற்பட்ட சிதாகாயத்தை; வண்மையுற செப்பாது செப்புறும் நம் தேசிகன் காண் - உரைக்காமல் வளம்பெற உரைக்கும் (அவனே) நமது பரமாசாரியன் தெரிகிறதா, (எ-று.)

(வி-ரை.) வண்மையுறாச் செப்புறும் என இயைக்க. பாழ்-சூனியம்; “வெறும்பாழ் விளைந்த சுகம் சொல்லின்” எனவரும் ஒழிவி லொடுக்கம் சத்தினிபாதம் - 24 ஆம் செய்யுளை இங்கு எண்ணுதல் நலம். முப்பாழ் - அசுத்த மாயைப் பாழ், சுத்த மாயைப் பாழ், மகாமாயைப் பாழ்; இம் மூன்றிற்கும் அப்பால் இருப்பதுதான் ஞான ஆகாயம்;

**"எந்தவூர் என்றீர் இருந்தவூர் நீர்கேளீர்!
அந்தவூர் செய்தி அறியீரோ-அந்தவூர்
முப்பாழும் பாழாய் முடிவிலொரு சூனியமாய்
அப்பாலும் பாழென் றறி"-என்றார் திருவள்ளுவர்.**

"மத்தமாம் புலன் மாறிய இடத்தே மன்னுயிர் வெளிப்படும்; அதுபோய்ப் பெத்தமாம் உயிர் மாறிய இடத்தே பெரும்பரம் வெளிப்படும்; அதுபோய் அத்தமாம் பரம்மாறிய இடத்தே அமலமாம் சிவம் வெளிப்படும்; அது போய்ச், சுத்தமாம் சிவம் மாறிய இடத்தே தோன்றிடும் சுயம்பிர காசம்" என்பது போத ரத்தினாகரம்.

**"முப்பாழுக் கப்பால் முதற்பாழ் மனையகத்தே
தப்பாமல் என்னைத் தனியே அழைத்தருளி
ஒப்பாம் அமளியிலே ஒன்றுபடச் சேர்வதொன்றோ
செப்பாய் புகழ்ச்சென்னை சென்னமல்லி யீச்சுரனே"**

என்பது, சிவஞான முனிவர் திருவிருத்தம்.

இதுகாறும் குறிப்பிட்ட எடுத்துக் காட்டுக்களால், அழிதலும் ஆதலும் ஆனது மாயா; (மாய் - மறைதல்; ஆ.ஆதல்.) மூன்று மாயைகளும் முப்பாழ் எனப்பெறும்; அம்மூன்றின் இறுதியில், தன் உணர்ச்சியும் அற்ற இடமே அப்பால் என்று அறிவிக்கப் பெற்றது.

ஐம்புலச் சேட்டை அடங்கினால், சுவாசத்தின் சொரூபம் தெரியும்; சுவாசம் கும்பகம் ஆனால், பரவஸ்து தரிசனம் ஆகும்; அது மறையும் போது, சிவம் விளங்கும்; சிவதரிசனத்தில், சுயம் பிரகாசம் அனுபவம் ஆகும். இந்த அனுபவத்தை, பாழ் எனும் சொற்கொண்டு படிப்பது பழைய மரபு.

**"முப்பாழுக்கு அப்பால் முதற்பாழ் முழுமுதலாய்
இப்போது வந்தான் எனை விழுங்கிக்கொண்டாண்டி"**

எனப் பட்டினத்தடிகளும், "முப்பாழும் பாழாய், முதற்பாழும் சூனியமாய், அப்பாழும் பாழாய் அன்புசெய்வ தெக்காலம்" என்று பத்திரிகிரியாரும் இது குறித்து எண்ணிய அருமைகளை, இங்கு ஓரளவு எண்ணினம். சொல் ஜாலங்களைக் கண்டு என்னமோ ஏதோ என்று மயங்குவது மரபன்று; சாதகர்களாகிச் சால்புறுவதுதான் தர்மம். சொல்லுருவில் மேலும் விவரித்தால், இதுவே ஒரு நூலாக விரியும். இந்த அளவு இப்போதைக்குப் போதும்.

செப்பாது செப்புதல் - சமிக்ஞையால் அறிவித்தல். தேசிகன் - தேசுமயம் ஆனவன்; சிவப்பிரகாசம் ஆகிச் சிறப்பவன் என்பது குறிப்பு. (161)

-தப்பாது

162. தீரா இடும்பைத் திரிபென்ப தியாத்தொன்றும்
சேரா நெறியருள்நம் தேசிகன்காண்

(ப-ரை.) தப்பாது தீரா இடும்பை திரிபு என்பது தப்பி விடாதபடி தீராத துன்ப மயமான வேறுபாடு; யாது ஒன்றும் சேரா நெறி அருள் நம் தேசிகன் காண் - எது ஒன்றும் சேராத (ஞான) நெறியை உபதேசிக்கும் பரம ஆசாரியன் அவனேதான், (விளங்குகிறதா), (எ-று.)

(வி-ரை.) இடும்பை - (முரட்டுத் தனமாக மோதும்) துன்பச் சூழ் நிலைகள். திரிபு - மாறுபாடு. நெறி - (முத்தி) நெறி எனினுமாம். (162)

-ஆராது

163. நித்தம் தெரியா நிலைமே வியநமது
சித்தம் தெளிவிக்கும் தேசிகன்காண

(ப-ரை.) ஆராது நித்தம் தெரியா நிலை மேவிய-ஒவ்வொரு நாளும் நிறைவு விளங்கா நிலையில் இருந்த; நமது சித்த தெளிவிக்கும் தேசிகன் காண் - நம்முடைய சித்தத்தை தெளியச் செய்விக்கும் பரமாசாரியன் (அவனே), ()

(வி-ரை.) பதிநிலை இது; ஆன்ம சொரூபம் இது; பாச இயல்பு இது என்று அறிந்து, நிறைவு பெறாது, தினமும் சீர் குலைந்து இருந்தது நமது சித்தம்; முப்பொருள் நிச்சயத்தை சித்தத்தில் இருந்து தெளிவித்தவன் சிவாசாரியன் என்றபடி. ஆர்தல் - முழுமை யுறுதல்; ஆராமை-கலங்கியிருந்த நிலைமை. நித்தம் - நாள்தோறும். (163)

-பித்தரென

163. யாதொன்றுந் தேரா திருந்தநமக் கிவ்வுலகம்
தீதென் றறிவித்த தேசிகன்காண்

(ப-ரை.) பித்தர் என யாது ஒன்றும் தேராது இருந்த நமக்கு-பித்தர்கள் போல் (அறிவு குழம்பி) எது ஒரு பொருளையும் தெளிவக உணராதிருந்த நமக்கு; இவ் உலகம் தீது என்று அறிவித்த தேசிகன் காண் - இந்த உலக சாதனை தீமை என்று தெரிவித்த பரமாசாரியன் அவன் காண், (எ-று.)

(வி-ரை.) தேராமை-தெளிவு இல்லாமை. உண்ணல், நடமாடல், உறங்கல்; விழிப்பில் இருந்தால் ஊர் பேச்சு; உண்மையில் ஒன்றையும் தேராமல் திகைத்து இருப்பதுதான் வாழ்க்கை. உன் மார்க்கம் தீது; என்மார்க்கம் சன்மார்க்கம்; இதுகேள் என்றறிவித்தார் இறைவர் என்றபடி.

எண் சாண் உடம்பிற்கு எவ்வளவு நிலம் வேண்டும்? 6 அடி நீளம்; 3 அடி அகலம்; 3 அடி ஆழம்; இறுதி நாளில் இதுபோதும்; உயிரொடு உளபொழுது இது தெரிவது இல்லையே. இருப்பது ஒரு ஜாண் வயிறு; அடடா! இந்த நினைவு இல்லாமல், ஒவ்வொரு நாளும், பணம் பணம் பணம்! அட பாவமே! இதற்கு எவ்வளவு சூழ்ச்சி! எவ்வளவு முயற்சி! எவ்வளவு வேகம்! இடை நடுவில் சையோக சிந்தனையில், பாழும் மனத்தின் படபடப்பை எவரிடம் சொல்ல் ஆறுவது? அன்னவிசாரம்; சொன்ன விசாரம்; போக விசாரம்; பாவமனம், என்றும் விசார சொரூபமாகி, அடிபட்ட உடல்போல் விழுந்து அயர்ந்து விழித்து, இறுதி யாத்திரையை அதி விரைவில் அழைக்கும் ஆரவாரமின்றி வேறு யாது விளைவு? இது கண்டு, “இவ்வுலகம் தீது என்று போதிக்க, மனமே! பெருமான் ஆசாரியனாகி அறிவிக்கும் கோலத்தான்! எண்ணிப்பார்! அவனை ஏத்தி நில் என்றபடி. (164)

<u>**ஒப்பிலியப்பன்**</u>

**-கோதின்**

**164. ஓசைபெறு கடல்சூ ழுற்ற உலகினம்மை**
**ஆசை யுடனீன்ற அப்பன்காண்**

(ப-ரை.) ஓசை பெறு கடல் சூழ் உற்ற உலகில் - (ஆரவார) ஓசை பெற்ற கடல் சூழ்ந்த நிலவுலகில்; கோது இன்றி - குற்றம் ஒன்றும் இல்லாமல்; நம்மை ஆசையுடன் ஈன்ற அப்பன் காண் - ஆர்வமுடன் நம்மைப் பெற்ற அப்பன் (அவன்;) (புனித இதை முதலில்) புரிந்துகொள், (எ-று.)

(வி-ரை.) அப்பன் - நீர்மைச் சத்தாய் (உடலில்) நிறைந்து நிற்பவன்; (அப்பு - நீர்; நீர்ச்சத்தன் அத்தன்; நிறையும் நிலச்சத்தள் அன்னை என்பது பழமொழி.) ஓசையுடையது உலகம்; அதிக ஆசையுடையவன் அப்பன். ஆன்மா வாழ வேண்டும் என்பது அவனுடைய ஆசை. அந்த ஆசை காரணமாகவே, நமக்கு ஆக்கை அளித்தான்; ஆக்கை தந்தானை நோக்கியிரு என்பது குறிப்பு. (165)

**-மாசுறவே**

**165. வன்பாய் வளர்க்கின்ற மற்றையர்போல் அல்லாமல்**
**அன்பாய் நமைவளர்க்கும் அப்பன்காண்**

(ப-ரை.) மாசு உறவே-(பொல்லாக்) களங்கங்கள் பொருந்துமாறு; வன்பாய் வளர்க்கின்ற மற்றையர்போல் அல்லாமல் - முரட்டுத் தனமாக வளர்க்கின்ற (உலகியல்) தந்தையர்போல் அல்லாமல்; அன்பாய் நமை வளர்க்கும் அத்தன் காண் - அன்பாக (வாழுமாறு) நம்மை வளர்க்கின்ற அப்பன்காண் அவன், (எ-று.)

(வி-ரை.) தன்னுடைய இச்சைகளை, நம்மில் தங்க வைப்பவன் உலகியல் தந்தை; அதனால்தான் ‘மாசுறவே வளர்க்கின்ற’ என்றார். அன்பிற்கு மாறான

வன்பையும் கலப்பித்து வளர்த்தவன் அவன். களங்கத்தைக் களைந்து விடு! அன்புகொள்! இன்புறுவை என்று, வாழும் வழிகாட்டி வளர்ப்பவன் இயற்கைத் தந்தையான இறைவன்; எண்ணிப் பார்! இது தெரியும் என்றபடி. (166)

**-இன்பாக**

**167. இப்பாரிற் சேயார் இதய மலர்ந்தம்மை**
**அப்பா எனுநங்கள் அப்பன்காண்**

(ப-ரை.) இன்பு ஆக-இன்பம் விளைய; இப்பாரில் சேயார் இதயம் மலர்ந்து - இந்தக் குவலயத்தின் (உயிர்களாகிய) குழந்தைகள், (மகிழும்) உள்ளம் மலர்ந்து; அம்மை அப்பா எனும் நங்கள் அப்பன் காண் - அம்மையப்பா என்று விளிக்கின்ற நம்முடைய அப்பன் (அவன்) காண், (எ-று.)

(வி-ரை.) ஈன்றவளை அம்மை என்பம்; தந்தவனைத் தந்தை என்பம்; இருவுருவையும் இணைத்து, அம்மையப்பா! என்று, அகில உலக குழந்தைகளும், இதய பூர்வமாக அழைக்கும் ஒரே தந்தை இறைவன்; எண்ணிப் பார்! அவனையே ஏத்தியிரு என்பது, இசையெச்சமாக இருக்கிறது. (167)

**-செப்பாமல்**

**168. எள்ளித் திரிந்தாலும் இந்தாவென் றின்னமுதம்**
**அள்ளிக் கொடுக்குநம தப்பன்காண்**

(ப-ரை.) செப்பாமல் எள்ளித் திரிந்தாலும் - (புனித அவன் புகழைப்) போற்றாமல், ஏளனம் பேசி (எங்கெங்கோ) சுற்றிக் கொண்டு இருந்தாலும், (அது கருதி ஒளியாமல்); இந்தா என்று-இங்கேவா என்று (அருளொடு) அழைத்து; இன் அமுதம் அள்ளிக் கொடுக்கும் நம் அப்பன் காண் - இனிய (தன் அருள்) அமுதை அள்ளி (உண்ண) அருளும் நம் பரமபிதா (அவன்), (எ-று.)

(வி-ரை.) செப்பு - திசைச்சொல்; தந்தையின் பேரும் புகழும் பெருகச் செய்பவன் பிள்ளை; அதற்கு மாறாக, வந்தனையின்றி, நிந்தனை செய்து, அங்கும் இங்கும் அலைந்து திரிவது அவன் செய் பாவம். ஆயினும் இரக்கம் கொண்டு, தேடிப் பிடித்து, கனிமனம் காட்டி, நயவுரை கூட்டி, உரிய இனிய உணவினை யூட்டி, பரம அருளை உண்ண உதவும் பரமபிதா அவன்; மறவாதே மனமே! துதித்தல் செய்! அவனைத் தொழுது நில் என்று உணர்த்தியபடி. (168)

**-உள்ளிக்கொண்(டு)**

**169. இன்றே அருள்வாய் எனத்துதிக்கில் ஆங்குநமக்கு**
**அன்றே அருளுநம தப்பன்காண்**

(ப-ரை.) உள்ளிக் கொண்டு இன்றே அருள்வாய் என துதிக்கில் -(எதை எதையோ) எண்ணிக் கொண்டு, (அவைகளை) இன்றே தந்தருள் என்று துதித்தாலும்; ஆங்கு நமக்கு அன்றே அருளும் நமது அப்பன் காண் - அன்றைய தினமே, அப்பொழுதே அதை நமக்கு அளிக்கும் நமது (தெய்வத்) தந்தை (அவன்) தெரிகிறதா, (எ-று.)

(வி-ரை.) உள்ளல் - (இடையறாது) அழுந்த நினைதல். ஆங்கு-(எண்ணிய) அந்த இடத்தில். (169)

**-நன்றேமுன்**

**170. காதரவு செய்துநலம் கற்பித்துப் பின்பெரிய**
**ஆதரவு செய்யுநங்கள் அப்பன்காண்**

(ப-ரை.) நன்றே முன் காதரவு செய்து நலம் கற்பித்து-(வித்தக) நலம் விளைய, ஆரம்பத்தில் அச்சுறுத்தி உத்தம (சத்) மார்க்கத்தை உபதேசித்து; பின் பெரிய ஆதரவு செய்யும் நங்கள் அப்பன் காண்-பிறகு அருள்மிகும் அன்பை விளைவிக்கும் நமது அத்தன் காண் (அவன்), (எ-று.)

(வி-ரை.) நல்லது விளைய வேண்டுமேல், ஆரம்பத்தில் அச்சம் அமைய வேண்டும்; தொடர்ந்து அன்பு தோன்ற வேண்டும்; விஸ்வாசம் இறுதியில் விளையவேண்டும். இம் முறையை முதலில் 'நன்றே' என்றார். காதரம் - அச்சம்; நலம் கற்பித்தல் - பக்தியில் பயிற்றுதல். பெரிய ஆதரவு-விஸ்வாசம். அரிய இம் மூன்றையும் அருள் பவன் நம் அப்பன் என்று அருளியபடி. ஆதரவு-உடன்பாடு; இஃது அறக்கருணை. காதரம்-எதிர்மறை; இது மறக்கருணை.

**-கோதுறுமா**

**171. வஞ்சமலத் தால்வருந்தி வாடுகின்ற நந்தமையே**
**அஞ்சலஞ்சல் என்றருளும் அப்பன்காண்**

(ப-ரை.) கோதுறும் மா வஞ்ச மலத்தால் வருந்தி வாடுகின்ற நம் தமையே-(பொல்லாக்) குற்றங்கள் பொருந்தியதும், (வாழ்விற்குரிய) ஆன்மாக்களை வஞ்சிப்பதும் ஆன (ஆணவ மாயா கன்ம) அழுக்குகளால் வருந்தி மெலிகின்ற நம்மை; அஞ்சல் அஞ்சல் என்று அருளும் அப்பன் காண்-அஞ்சாதே! (ஒரு சிறிதும்) அஞ்ச வேண்டா என்று அருளுகின்ற அப்பன் (அவன்) காண், (எ-று.)

(வி-ரை.) கோதுறு, மா, வஞ்சமலம் என்பவைகளில், கோது - ஆணவத்தையும், மா-மாயையையும், வஞ்சம்-கன்மங்களையும் அறிவிக்கப் போந்த அடைகள். இம் மூன்றுள் ஆணவம் அநாதி; சகஜம் எனப்பெறும்; அதைத் தவிர்க்க இடை வந்த மாயா கன்மங்கள், ஆகந்துகம் என அறிவிக்கப் பெறும். இம் மூன்றனும் முறைதுறை மறக்கும் மூவகை உயிர்கள். 'வருந்துதல்' முதல் நிலை; வாடுதல் - தொன்று தொட்டுப்

பிறவிதோறும் தொடரும் மெலிவுச் செய்தி. அஞ்சலஞ்சல் என்பது, அபய ஹஸ்த அனுபவம். அபயகரம் காட்டும் அவனே நம் அப்பன் என்று அறிவித்தபடி. (171)

**-துஞ்சலெனும்**

**172. நச்சென்ற வாதனையை நாளுமெண்ணி நாமஞ்சும்**
**அச்சங் கெடுத்தாண்ட அப்பான்காண்**

(ப-ரை.) துஞ்சல் எனும் நச்சு என்ற வாதனையை நாளும் எண்ணி-மரணம் எனப்பெறும் விஷ சாதன வேதனையை நாள்தோறும் உணர்ந்து; நாம் அஞ்சும் அச்சம் கெடுத்து ஆண்ட அப்பன்காண்-நாம் அஞ்சும் அச்சத்தைத் தவிர்த்து நம்மை (த் தன்) ஆளாக்கிக் கொண்ட அப்பன் (அவனே) காண், (எ-று.)

(வி-ரை.) துஞ்சல் - (மீளவும் எழுந்திரா இறுதி) நித்திரை. நச்சு-நஞ்சு; அதன் கொடுமை கருதி, மெலித்தல் வலித்தல் பெற்றது. வாதிக்கும் நோக்காடு வாதனை எனப்பெறும். "வஞ்ச நமன் வாதனைக்கும், வன் பிறவி வேதனைக்கும், அஞ்சி உனை யடைந்தேன் ஐயா பராபரமே" என வரும் இடத்தும் இதனை உணர்க. ஆண்ட அப்பன்காண் என்பதில், அவனுக்கு ஆளானபின் அச்சமே! இல்லை என்பது குறிப்பு. "அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்ச வருவதும் இல்லை" என்பது அப்பர் அருள்மொழி.

**-நிச்சலுமிங்**

**173. கேயிரவும் எல்லும் எளியேம் பிழைத்தபிழை**
**ஆயிரமும் தான்பொறுக்கும் அப்பன்காண்**

(ப-ரை.) நிச்சலும் இங்கே இரவும் எல்லும் எளியேம். நாள்தோறும் இவ்வுலகில் இரவிலும் பகலிலும் எளியர்களாகிய நாம் தவறிச் செய்த தவறுகள்; ஆயிரமும் தான் பொறுக்கும் அப்பன்காண்-ஆயிரக்கணக்கான அவைகள் அனைத்தையும் சகித்து(அவ்வப்போதே) மன்னித்து அருளும் அப்பன் (அவனே) காண், (எ-று.)

(வி-ரை.) நிச்சல் - நித்தம்; ஒவ்வொரு தினமும். எல் - பகல்; எளிய மனமாதலின், எளியேம் என்றார். (173)

**-சேயிரங்கா**

**174. முன்னம் எடுத்தணைத்து முத்தமிட்டுப் பாலருத்தும்**
**அன்னையினும் அன்புடைய அப்பான்காண்**

(ப-ரை.) சேய் இரங்கா முன்னம் எடுத்து அணைத்து முத்தம் இட்டு பால் அருத்தும்-(பசியால்) சேய் (அயர்ந்து) வருந்தி அழுமுன்னர் கைகளால் எடுத்து (மார்பில்) அணைத்து, முத்தம் தந்து முலைப்பால் ஊட்டுகின்ற; அன்னையினும் அன்பு

உடைய அப்பன் காண்-தாயினும் அன்புடைய தகப்பன் அவன்; இதை (முதலில்) அறிந்து கொள்.

(வி-ரை.) பிறந்து சில நாள்வரை எந்தக் குழந்தையும் சிவப்பாய் இருக்குமாதலின், அது 'சேய்' எனும் பெயர் பெறும். (சேய்-செந்நிறச் சிசு.) எனவே சேய் என்பது, மிக இளஞ் சிசு எனும் பொருட்டு. அழுதாலும் தன் வேலைகள் முடிந்த பின்னரே பால் கொடுப்பவள் அதமத் தாய்; அழுத உடனே பால் தருபவள் மத்திமத் தாய்; அழுமுன் குறிப்பறிந்து எடுத்து ஊட்டுபவள் உத்தமத்தாய். எடுப்பதும், அணைப்பதும், முத்தம் தருதலும், அதன்பின் பால் தருதலும் அன்பின் பண்பில் விளையும் செயற்பாடுகள். இதனால் அன்னைக்கே சேயினிடம் அன்பதிகம் என்பது உலகியல் வழக்கு; உண்மை எது எனில், பாசத்தால் பல்லிளித்து உடல் ஓம்பச் செயல்படுவது தாய்நிலை; எண்பத்தீராயிரம் நாடி நரம்புகளிலும் அருமை அன்பைக் கொண்டு, புறத்தவர்க்கு அதைப் புலனாக்காமல், திருந்திய அறிவொடு சேய் திகழ வேண்டுமெனும் உணர்வுடன் செயல்படும் தந்தையின் அன்பு, தாயினும் பன்மடங்கு அதிகமானது.

**"நேசரைக் காணா இடத்து நெஞ்சார வேபுகழ்தல்**
**ஆசானை எவ்விடத்தும் அப்படியே-வாச**
**மனையாளைப் பஞ்சணையில் மைந்தர்தமை நெஞ்சில்**
**வினையாள வேலைமுடி வில்"**

எனும் பாடல், எவரை எந்த எந்த இடத்தில் எந்த எந்த நேரத்தில் பாராட்ட வேண்டும் என்று தெரிவிக்கிறது. இந்த வகையில், காலம் நேரம் தெரியாமல், வாயால் பாராட்டை சதா வழங்குபவள் அன்னை; அங்ஙனம் செய்வதால், தனயன் அறிவில் தடிப்பேறும்; பாராட்டுதலை அகத்தில் கொள்வதன்றி, புறத்தில் தந்தை புகழ்வது இல்லை; அதனால்தான், 'அன்னையினும் அன்புடைய அப்பான்காண்'என்றார்.

"அழுத பிள்ளைக்கே பாலுண அளிப்பள் அன்னை என்பார்கள், அழவலி இல்லாக் கொழுது நேர்சிறு குழவிக்கும் கொடுப்பள்; குற்றம் அன்று அது மற்றவள் செயலே" எனவும்,

"தாயினும் தகவுடையாய்" என வரும் அருட்பாவுடனும் ஒத்திடுபோது, இதன் உள்ளுரை விளங்கும். (174)

<u>தாயுமானவன்</u>

**-மன்னுலகில்**

175. **வன்மை யறப்பத்து மாதம் சுமந்துநமை**
**நன்மை தரப்பெற்ற நற்றாய்காண்**

(ப-ரை.) மன் உலகில் வன்மை அற பத்து மாதம் சுமந்து-(நீடித்துப்) பொருந்திய நிலவுலகில், (தன்) பலம் தளருமாறு, பத்துத் திங்கள் (பாரமாச்) சுமந்து;

நன்மை தர-நலம் தோன்ற; நமைப் பெற்ற நல் தாய்காண்-நம்மையீன்ற தகவுடைய தாயே ஆனவன் காண், (எ-று.)

(வி-ரை.) தயை மயம் ஆனவட்குத் 'தாய்' என்று பெயர். மற்று, பத்து மாதம் தாங்கியவள், சுமந்தவள் எனினுமாம்; இப்பொருளில் தா-பகுதி; ய்-எழுத்துப்பேறு. இருந்த சக்தியைப் பிரசவத்தில் இழக்கின்றாள் ஆதலின், "வன்மையறப் பெற்ற" என்றார். அத்தனே தாயுருவம் ஆயினன் என்பது குறிப்பு.

"ஈன்றாளுமாய், எனக்கு எந்தையுமாய், உடன் தோன்றினராய்" எனும் அப்பர் தேவாரம் இங்கு அறியத்தகும்.

**-இம்மைதனில்**

**176. அன்றொருநாள் நம்பசிகண் டந்தோ தரியாது
நன்றிரவிற் சோறளித்த நற்றாய்காண்**

(ப-ரை.) இம்மை தனில் - இவ்வுலகியல் வாழ்வியல்; அன்றொருநாள்-, நம் பசி கண்டு அந்தோ தரியாது-முன்னொரு தினத்தில் பசித்திருந்த நம்மைப் பார்த்து, ஐயோ! (தம்) திருவுளம் பொறாமல்; நன்று இரவில் சோறு அளித்த நல்தாய் காண்-நலம் சிறந்த (அந்த) இரவு நேரத்தில் உணவு கொணர்ந்து உண்பித்த கருணைத்தாய் (அவனே) காண், (எ-று.)

(வி-ரை.) திருவொற்றியூர். வெள்ளிக்கிழமை. சுவாமி தரிசனம் செய்தாயிற்று. அருகில் வசந்த மண்டபம். அங்கு வள்ளலார் அமர்ந்தார். ஒருமை கொண்டார். நிஷ்டையில் இருந்தார். நெடுநேரம் இந்நிலை. கண் விழித்தார். நள்ளிரவு. கடும்பசி காதடைத்தது. அதே நேரத்தில், குருக்கள் ஒருவர் எதிர்வந்தார். பிரசாதம் தந்தார். உண்டு வள்ளலார் பசியாறினார். எதிரில் இருந்தவர், திருவுருக் கரந்தார். தீராப்பசி தீர்க்க வந்தவர், தியாகர் என்பதை அறிந்தார். மற்றவர்க்கும் அறிவித்தார். இன்ப அறக்கருணை, இங்கு எண்ணப் பெற்றது. (176)

**-என்றுமருள்**

**177. செம்மை யிலாச்சிறிய தேவர்கள்பால் சேர்க்காது
நம்மை வளர்க்கின்ற நற்றாய்காண்**

(ப-ரை.) என்றும் மருள் - என்றும் மருளை எய்தினராய்; செம்மை இலா-சிறந்த அருள் நோக்கம் இல்லாத; சிறிய தேவர்கள் பால் சேர்க்காது - இழிந்த உம்பர்கள் இடத்தில் ஒப்படைக்காமல்; நம்மை வளர்க்கின்ற நல் தாய்காண்-நம்மை (சன்மார்க்கத்தில்) வளர்க்கின்ற வாய்மைத் தாய் (அவன்); அறிந்து கொள், (எ-று.)

(வி-ரை.) மருள் உணர்வும், செம்மை யின்மையும், சிறுமையும் உடையவர்கள் தேவர்கள். பசு புண்ணியம் செய்தவர்களே அத்தேவ பதவியை அடைகின்றனர்.

அவர்கள்போல் ஆகி அவதி அடையாமல், தயவொடு வளர்க்கின்றான் தாயான பரன் என்பதை, உணர்பொழுது எல்லாம் உவகை உதிக்கும். (177)

**-சும்மையென**

**178. மூளும் பெருங்குற்றம் முன்னிமேன் மேற்செயினும்**
**நாளும் பொறுத்தருளும் நற்றாய்காண்**

(ப-ரை.) சும்மை என மூளும் பெருங் குற்றம் முன்னிமேல் மேல் செயினும் - பாரம் ஆனதென முதிர்கின்ற பெரும் பிழைகளைச் சிந்தித்து, (நாம்) மேலும் மேலும் (பொல்லா அவைகளைப்) புரிந்த பொழுதும்; நாளும் பொறுத்து அருளும் நல் தாய்காண்-(ஒவ்வொரு) நாளும் மன்னித்து அருள்கின்ற தகவுள்ள தாயே ஆயினான் காண்.

(வி-ரை.) சும்மை-சுமை; பளு. முன்னி-தான் (நெஞ்சார) நினைந்து எனினுமாம். மேல் மேல் எனும் அடுக்கு, தொடர்ந்து செய்தலை நினைவூட்டியது. பொறுத்தற்குக் காரணம் பெருங் கருணை. (178)

**-மூளுகின்ற**

**179. வன்னெறியிற் சென்றாலும் வாஎன் றழைத்துநமை**
**நன்னெறியிற் சேர்க்கின்ற நற்றாய்காண்**

(ப-ரை.) மூளுகின்ற வன் நெறியில் சென்றாலும்-மென்மேலும்) முதிர்கின்ற கொடிய வழிகளில், (குரூரமாகச்) சென்றாலும்; வா என்று அழைத்து - (இங்கே) வா என்று மீட்பித்து; நமை நல் நெறியில் சேர்க்கின்ற நல் தாய்காண்-நம்மை உயர் வழியில் இணைக்கின்ற உத்தமத் தாய் (அவனே) காண், (எ-று.)

(வி-ரை.) வன்னெறி-துன்மார்க்கம்; நன்னெறி-சன்மார்க்கம்; தப்பு வழியில் ஒப்பிச் செல்லும் தநயனை, தன் இயற்கைப் பேரருளால், அபாயம்! அந்த வழியே போகாதே! இப்படித் திரும்பு! இங்கே வா என்று திசை திருப்பி, சன்மார்க்கத்திற் சார்விப்பவன் இறைவன் என்றபடி. (179)

**-செந்நெறியில்**

**180. நாம்தேடா முன்னம் நமைத்தேடிப் பின்புதனை**
**நாம்தேடச் செய்கின்ற நற்றாய்காண்**

(ப-ரை.) செம் நெறியின் நாம் தேடா முன்னம் நமைத்தேடி-செம்மை நெறியில் நாம் தேடுவதன் முன் (தன் பேரருளால்) நம்மைத் தேடி வந்து; பின்பு-பிறகு; தனை நாம் தேட செய்கின்ற நல் தாய் காண்-தன்னை நாம் தேடுமாறு செய்கின்ற நல்ல தாய் (அவனே) காண், (எ-று.)

(வி-ரை.) "அப்பனீ, அம்மைநீ, ஐயனும்நீ, அன்புடைய மாமனும் மாமியும்நீ, ஒப்புடைய மாதரும், ஒண்பொருளும்நீ, ஒரு குலமும் சுற்றமும் ஓர் ஊரும்நீ, துய்ப்பனவும் மெய்ப்பனவும் தோற்றுவாய்நீ, துணையாக என்னெஞ்சம் துறப்பிப்பாய்நீ, இப்பொன்நீ, இம் மணிநீ, இம்முத்துநீ, இறைவன்நீ, ஏறு ஊர்ந்த செல்வன் நீயே!" என்று தெளிந்து அவனை நாம் தேடும் முன், வாழ்விக்க நம்மைத் தேடி வருகின்றான்; தன் உயர் பேரருளை உணர் தருமாறு உணர்த்துகின்றான்; அதன் பின் அவனை யடையும் காதல் அதிகரிக்கின்றது. காதல் மிக்க பொழுது, உருவம் கரக்கின்றான்; தேடு! எம்மைத் தேடிக் கொண்டே இரு என்று செயல்படுத்தி, சீவகரணம் எல்லாம் சிவகரணம் ஆக்கும் அவனை, தாய்மையன் என்பதுதான் தர்மம். (180)

**-ஆந்தோறும்**

**181. காலம் அறிந்தே கனிவோடு நல்லருட்பால்**
**ஞால மிசையளிக்கு நற்றாய்காண்**

(ப-ரை.) ஆம் தோறும் -(இம்மை மறுமையில் வெறுப்பும், திருவருளில் விருப்பும்) உளதாகும் ஒவ்வொரு சமயத்தும்; காலம் அறிந்தே-(இருவினை ஒப்பு, மலபரிபாகம் உண்டாகும்) அக்காலம் உணர்ந்து; கனிவோடு நல் அருள்பால் ஞாலம் மிசை அளிக்கும் நல் தாய் காண் - கருணையுடன் உத்தம அருளமுதத்தை உலகில் ஊட்டுகின்ற உத்தமத் தாயாகி (அவன்) உளன் காண், (எ-று.)

(வி-ரை.) காலம் காண்கிறான்; கனிவு காட்டுகிறான்; அருட்பாலை ஊட்டுகின்றான் என்றபடி. (181)

**-சாலவுறு**

**182. வெம்பிணியும் வேதனையும் வேசறிக்கை யுந்துயரும்**
**நம்பசியும் தீர்த்தருளும் நற்றாய்காண்**

(ப-ரை.) சால உறு வெம் பிணியும் - விரிவாகிப் பெரிதும் விளைகின்ற (இறப்பு பிறப்பு எனும்) ஏதமான நோய்களையும்; வேதனையும்-(அதனாலாகும்) மனக்கவலைகளையும்; வேசறிக்கையும்-(அதனால் விளையும்) அயர்வுகளையும்; துயரும் -(அவைகளால் ஆகும்) துன்பங்களையும்; நம் பசியும் தீர்த்தருளும்-(அவைகளைத் தவிர்க்க முயலும்) நம் இச்சைகளையும் போக்கியருளும்; நல்தாய் காண் -உத்தமத் தாயாகியுளன் காண், (எ-று.)

(வி-ரை.) உடலை, உளத்தை உணர்வை நோக்குமாறு இறுக்கி நொறுக்கிக் கொதிப்பை ஏற்றுதலின், இறப்பு பிறப்பை 'வெம்பிணி' என்றார். வேதிப்பது 'வேதனை;' வேதித்தல் -நிறம்மாற, உடல் பலமொழியச் செயும்நிலை வேசறிக்கை-அயர்வு. பசி-கண்டதில் விளையும் காமிப்பு.

**-அம்புவியில்**

183. **வெந்நீரில் ஆட்டிடிலெம் மெய்நோகும் என்றருளாம்**
**நன்னீரில் ஆட்டுகின்ற நற்றாய்காண்**

(ப-ரை.) அம்புவியில் - அழகிய இந்நிலவுகில்; வெம்நீரில் ஆட்டிடில் எம் மெய்நோக்கும் என்று-சுடுநீரில் நீராட்டினால் எம் உடல் நோகும் என்று; அருள் ஆம் நல் நீரில் ஆட்டுகின்ற நல் தாய் காண்-திருவருளாகிய குளிர்ந்த நீரில் குளிப்பாட்டுகின்ற நலம் விளைவிக்கும் தாய் காண் (அவன்) (எ-று.)

(வி-ரை.) வெம் நீர் - வெம்மையையுடைய நீர்; காய்ச்சிய நீர். ஆட்டுதல் - முழுக்காட்டுதல். நன்னீர் -தண்ணீர். உடல் அழுக்கைப் போக்க நீராட்டுவர் தாயர்; ஆன்ம அழுக்கைப் போக்க அருள் நீராட்டும் அன்னை இறை என்றபடி. "மாசறுத்து எமை ஆநந்த வாரிநீ ராட்டிப் பண்டைத், தேசுரு விளக்க வல்ல சிவபரம்பரை" என்பர் பரஞ்ஜோதி முனிவர். (183)

**-எந்நீரின்**

184. **மேலாய் நமக்கு வியனுலகில் அன்புடைய**
**நாலா யிரந்தாயின் நற்றாய்காண்**

(ப-ரை.) எந்நீரின் மேலாய் -(உணரத் தக்க) எந்தத் தன்மையினும் உயர்ந்தோனாய்; வியன் உலகில் -உத்தம இவ் உலகத்தில்; அன்பு உடைய நாலாயிரம் தாயின் நல் தாய் காண் -(உயர்ந்த) அன்புடைய நாலாயிரம் தாயர்கள் (ஓர் உருக் கொண்டது) போன்ற கனிவுமிக்க தாயாக இருப்பவன் காண், (எ-று.)

(வி-ரை.) "அன்புடைய தாயர்கள் ஓர் ஆயிரம்பேர் ஆனுலும், அன்புடையாய் நின்னைப்போல் ஆவாரோ? எனும் விண்ணப்பக் கலிவெண்பா இங்கு நினைவிற்கு வருகிறது. நீர்மை-இயல்பான தன்மை. வியன் - அகல் இடம். (184)

**-ஏலாது**

185. **வாடி அழுதாலெம் வருத்தம் தரியாது**
**நாடி எடுத்தணைக்கும் நற்றாய்காண்**

(ப-ரை.) ஏலாது வாடி அழுதால் - (மோதும் பசி) தாங்க முடியாமல் வாடி (முகம்) வருந்தினால்; எம் வருத்தம் தரியாது - எமது வருத்தம் (கண்டு) பொறாது; நாடி எடுத்து அணைக்கும் நல் தாய் காண்-(இடம்) நாடி வந்து (வாரி) எடுத்து (மார்புடன்) அணைத்துக் கொள்ளும் தயாமயமான தாய் காண் (அவன்,) (எ-று.)

(வி-ரை.) ஏலாது -சகிக்க முடியாமல்; எதிர்மறை. (ஏலுதல் - உடன்பாடு.) நாடி - விரைந்து வந்து. (185)

**-நீடுலகில்**

**186. தான்பாடக் கேட்டுத் தமியேன் களிக்குமுன்னம்**
**நான்பாடக் கேட்டுவக்கும் நற்றாய்காண்**

(ப-ரை.) நீடு உலகில் தான் பாடக் கேட்டு தமியேன் களிக்கு முன்னம் - பேருலகில், (கேண்மையுடன்) தான் பாடக்கேட்டு அகதியான அடியேன் ஆநந்தம் அடைவதற்கு முன்; நான் பாட கேட்டு உவக்கும் நல்தாய் காண்-(மகவாகிய) நான் பாட; ( அம் மழலை மொழி) கேட்டு மகிழும் (அவனே) சிறந்த தாய்; அறிந்து கொள், (எ-று.)

(வி-ரை.) அவன் பாட்டில் அருள் நாதம்; அதைச் சிரவணித்தால் ஆநந்தம் ஆம். அது நிகழுமுன், பழந்தமிழில் அடியேன் பாடுவது கேட்டு, பரமாநந்தம் கொள்ளும் அவன் போலும் தாய்மையை, நாம் வேறு எங்கு அறிய முடியும் என்பது குறிப்பு. நமி - தனி; தமியன் -ஆதரவு இல்லாத அகதி. (186)

**அன்புள அம்மான்**

**-வான்பாடும்**

**187. ஞானமணம் செய்யருளாம் நங்கைதனைத் தந்துநமக்**
**கானமணம் செய்விக்கும் அம்மான்காண்**

(ப-ரை.) வான் பாடும் ஞான மணம் செய் அருளாம் நங்கைதனை தந்து - பண்ணவர் (புகழ்ந்து) பாடுகின்ற (மாபெரும்) ஞானவல்லியை மணம் செய்து வைக்கும் (உயர்ந்த) திருவருள் சக்தியை உபகரித்து; நமக்கு ஆன மணம் செய்விக்கும் அம்மான் காண்-நமக்கு உரியதான திருமணத்தை (அருளொடு) நடத்தி வைக்கும் அம்மான் (அவனே) காண், (எ-று.)

(வி-ரை.) வான் -சிதாகாயம் எனினுமாம். எந்த உலகிலும், நாடோறும் திருமணங்கள் நடைபெறுகின்றன; அதுபோல் ஞானாகாயத்திலும் நன் ஞான மணங்கள் நிகழ்வுறுகின்றன. மணமகள் ஞானவல்லி; மணமகன் ஆன்மா; திருவருட் சத்தியே ஒப்பந்தப் பதிவை, சிறப்பாக ஒவ்வொரு பொழுதிலும் செய்விக்கின்றது. சீர் கெட்ட செயற்கைச் சிற்றின்பத்தைச் சீ என்று அருவறுத்து அகன்றவர்கள் முன், அம்மாபோல் வருகின்றான் அம்மான். மாயா புரியில் உள்ள காயாபுரிக் கோட்டையுள் ஐம் பொறிக்காவலில் அகப்பட்டு, சிற்றின்பச் சேற்றில் சிக்கிக் கிடந்த ஆன்மாவை, விவரம் உணர்ந்து, அதுதானே வென்று வெளியேறச் செய்கின்றான். ஞானாகாயத்தில், பயனான திருவருட் சத்தி பதிவு நடத்தி, ஆநந்த ஞானவல்லியை, மணமகனான ஆன்மா மணந்து வாழ வழிவகுக்கும் அம்மான் அந்த அம்மான் என்பதை மனமே நீ அறிந்துகொள் என்று அறிவித்தப்டி. இக் கண்ணியை ஓயாது ஓத ஓத, உணர்வு எங்கோ சென்று உவகை பெரிதும் உறுகிறதே! அம்மான் - அம்மாவின் உடன் பிறந்தவன் எனும் பொருட்பெயர். (187)

**-தேனினொடும்**

**188. இன்பால் அமுதாதி ஏக்கமுற இன்னருள்கொண்
டன்பால் விருந்தளிக்கும் அம்மான்காண்**

(ப-ரை.) தேனினொடும் இன்பால் அமுத ஆதி-தேனுடனும் பயனான சுவையுடைய பால், அமுது முதலியன; ஏக்கம் உற-(நாம் இதற்கு ஒப்பாக மாட்டோம் என்று) ஏக்கம் கொண்டு பின் வாங்குமாறு; இன் அருள் கொண்டு-(இனிக்கும்) அருளைக் கொண்டு; அன்பால் விருந்து அளிக்கும் அம்மான் காண் - அன்புடன் விருந்து நடத்தி மகிழ்விக்கும் அம்மான் ஆயினன் (அவன்) காண், (எ-று.)

(வி-ரை.) தேனினொடு என்பதில் ஒடு-எண்ணுப்பொருட்டு. அமுதாதி என்பதில், முக்கனியும் கற்கண்டும் பிறவும் கூட்டுதல் முறை. விருந்து-புதுவது ஆன இன்பம். 187-ஆம் கண்ணியில் திருமணம் நடத்திவைத்த திறம்; இங்கு அம்மான் விருந்து நடத்துகின்ற அருமை. பாலும் தேனும் அமுதும் ஆதிய, நாப்புலனிக்குச் சுவை நல்குவன; அம்மான் விருந்து, ஆன்ம உணர்விற்கு வைத்தது. (188)

**<u>வழிகாட்டும் துணை</u>**

**-வன்பாவ**

**189. ஆழ்கடல்வீழ்ந் துள்ளம் அழுந்தும் நமையெடுத்துச்
சூழ்கரையில் ஏற்றும் துணைவன்காண்**

(ப-ரை.) வன் பாவ ஆழ்கடல் வீழ்ந்து உள்ளம் அழுந்தும் நமை எடுத்து-வன்மையை யுடைய ஆழமான பிறவிக் கடலில் வீழ்ந்து (அறியாமைச் சேற்றில்) உள்ளம் அழுந்தும் நம்மைத் தூக்கி; சூழ் கரையில் ஏற்றும் துணைவன் காண் - (ஒளி) சூழும் முத்திக் கரையில் வைக்கும் (ஆருயிர்த்) துணைவன் காண் அவன், (எ-று.)

(வி-ரை.) மேலானது புண்ணியம்; அது மென்மையும் ஆகும்; பாவம் கீழானது; கடினமும் ஆகும்; கடல் தன்னைக் காட்டும்; பவசாகரம் தன் சொரூபத்தைக் காட்டுவது இல்லை. உடலை இழுக்கும் கடல்; உள்ளத்தை இழுக்கும் பவக்கடல். கடலுள் விழுந்த உடலை, அலைகள் கரையில் ஒதுக்கிவிடும். உடலையும் உளத்தையும், பவக்கடல் தன்னுள் இழுத்தபின் விடுவதில்லை. தன்னுள் கொள்ளும் வன்மையது பாவம். இழுத்துக் கரை சேர்க்கும் வண்மைத் துணைவன் இறைவன் என, தொனியில் இப்பொருள் தோன்றுதல் காண்க. (189)

**-வீழ்குணத்தால்**

**190. இன்பம் எனைத்தும் இதுவென் றறியாநம்
துன்பம் துடைக்கும் துணைவன்காண்**

(ப-ரை.) வீழ் குணத்தால் இன்பம் எனைத்தும் இது என்று அறியா-எல்லாவற்றையும் விரும்பும் (ஏதமான) குணங்களால், இதுதான் உண்மையான இன்பம் என்று அறியாத; நம் துன்பம் துடைக்கும் துணைவன் காண்-நமது துன்பத்தை (அடியொடு) தொலைக்கும் துணைவன் என்பதைத் தெரிந்துகொள், (எ-று.)

(வி-ரை.) எனைத்தும்-எப்பொருளிலும். வீழ்குணம்-சித்தித்தவைகளைச் சிறிதாகக் கருதி, கைக்கு எட்டாதவைகளைப் பெரிதா நினைத்து, அவைகளை ஆவலிக்கும் பயனறியாப் பண்பு. (வீழ்தல்-விரும்பிய அவைகளிலேயே அறிவு சாய்தல்.) இன்பம் இருவகை; ஒன்று சிற்றின்பம்; மற்றொன்று பேரின்பம். முதலதில் இருக்கும் வேட்கை, அடுத்ததில் இருப்பதில்லை. ஒன்று உடலளவாகி ஒழிவது; மற்றது உயிரளவு ஆவது. ஒன்று சிறுமை; மற்றது பெருமை. ஒன்று உடல் இணக்கு; மற்றொன்று உயிரும் இறையும் எனும் சிவ சீவ சம்பந்தம். ஒன்று, இன்பம் போல் தோன்றி, துன்ப சொரூபத்தில் தோய்விப்பது; அடுத்தது துன்பமே தோன்றாதது. ஒன்று பலரும் அறிந்தது; மற்றது அனுபூதிமான் கட்கு அனுபவமானது. இவைகளை, 'இன்பம் இது என்று அறியா' என்பதில் பெறவைத்தார். எது நித்தியமானது என்று உண்மையாகவே அறியாமையால், கண்ணீரும் கம்பலையும் ஆகிறது ஆன்மநிலை. இதுகண்ட ஆன்மநேய அத்தன், துன்பம் போக்கும் துணைவனாவதைப் பல கோணங்களில் பார்க்கலாம். துணைவன் என்பதில், வகரம் பெயரிடை நிலை; இப்பெயர் ஆன்ம நட்பாளன் எனும் புனித பொருளது.

**-வன்பவமாம்**

**191. தீநெறியிற் சென்று தியங்குகின்ற நந்தமக்குத்**
**தூநெறியைக் காட்டும் துணைவன்காண்**

(ப-ரை.) வன் பவம் ஆம் தீநெறியில் சென்று தியங்குகின்ற நந்தமக்கு-கடுமையான பாவங்களைக் காட்டுகின்ற தீய வழிகளில் சென்று, (அங்கிருந்து மீள அறியாமல்) மயங்கி வருந்துகின்ற நம் போன்றார்கட்கு; தூ நெறியைக் காட்டும் துணைவன் காண்-சுத்த சன்மார்க்கத்தைக் காண்பித்தருளும் துணைவன் காண், (எ-று.)

(வி-ரை.) தீ நெறி-பிறவி நெறி; தூநெறி-முத்தி நெறி. "அவனருளாலே அவன் தாள் வணங்கி" என்பது போல், காட்டானேல் ஆன்மா காணாது. "முத்தி நெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனை, பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம், சித்திநெறி யறிவித்துச் சிவமாக்கி எனையாண்ட, அத்தனெனக் கருளியவாறர்பெறுவார் அச்சோவே" என்பது திருவாசகம். (191)

**-மாநிலத்தில்**

**192. இன்றுதொட்ட தன்றி இயற்கையாய் நந்தமக்குத்**
**தொன்றுதொட்டு வந்தஅருள் சுற்றங்காண்**

(ப-ரை.) மா நிலத்தில் இன்று தொட்டது அன்றி-பெரிய இந்நிலவுலகில் இன்று ஆரம்பித்த உறவு என்று அல்லாமல்; இயற்கையாய் நந்தமக்கு தொன்று தொட்டு வந்த-இயற்கையாகவே நமக்குப் பண்டு தொட்டுப் பயின்று வந்த; அருள் சுற்றம் காண்-, (எ-று.)

(வி-ரை.) உடல் அளவான உறவு, இன்று நேற்று உண்டானது; இது வினை அளவான செயற்கைப் பாழ். இறை உறவு, உயிரளவான உறவு; இது அநாதி நித்தியமான இயற்கைச் செய்தி. உலகியல் உறவு, உடலொடு ஒழிவது; எப்பிறப்பிலும் அவ்வந் நிலைக்குத் தக்கபடி, ஆர்வம் காட்டி அணைப்பவன் அத்தன்; சுற்றியிருப்பது; என்றும் தழுவியிருப்பது எனும் பொருளது சுற்றம் எனும் பெயர்; அதற்கேற்ப எந்தக் கருவில் இருந்த பொழுதும், பிறந்த பின்னும், இறந்த பின்னும் உயிர்க்கு உயிராகி உறவுகொளும் பெருமானை, 'தொன்று தொட்டு வந்த சுற்றம்' என்றார். "கரு எலாம் இன்றியே கரு எலாம் ஆயவன்: எனும் ஆளுடை பிள்ளையார் தேவாரம், இங்கு சிந்திக்கத் தகும்.

**-தொன்றுதொட்டே**

**193. ஆயுமுடற் கன்புடைத்தாம் ஆருயிரிற் றான்சிறந்த**
**நேயம்வைத்த நம்முடைய நேசன்காண்**

(ப-ரை.) தொன்று தொட்டே-அநாதியான காலம் முதல்; ஆயும் உடற்கு அன்புடைத்தாம் ஆர் உயிரில் தான் - ஆய்விற்கு உரிய ஆக்கையை அபிமானித்து அலையும் ஆன்மாவினும்; சிறந்த நேயம் வைத்த நம்முடைய நேசன் காண்-(நம்பால்) மிகச் சிறந்த அன்புவைத்த நமது நேயன் (அவன் என்பதை நீ) அறிந்துகொள், (எ-று.)

(வி-ரை.) ஆக்கையைத் தான்என்று அபிமானித்தலின், 'உடற்கு அன்புடைத்தாம் உயிர் என்றார். ஆர்-அருமை. உயிரின் என்பதில் இன் - உவம உருபு. ஆன்ம நேய உரிமை ஆண்டவனிடம் உளது; சன்மார்க்கத்தில் உளது; வெறும் பேச்சில் அதன் விளைவில்லை என்பது குறிப்பு. தான் என்பது, பரனைக் குறித்த இயல்புப் பெயர். நம்முடைய என்பது, உரிமை கொண்டாடும் உண்மை நிலை. (193)

**-பேயரென**

**194. வாங்காது தாமே மறந்தாலும் நம்மைவிட்டு**
**நீங்காத நம்முடைய நேசன்காண்**

(ப-ரை.) வாங்காது - (எம்மான் அருள் உருவை உளத்தில்) வைத்து எண்ணாமல்; பேயர் என நாமே மறந்தாலும்-பேய் பிடித்தவர்போல் (இயல்பான அறிவை இழந்து) நாம் மறந்து இருந்தாலும்; நம்மை விட்டு நீங்காத நம்முடைய நேசன் காண் - நம்மை (சிறிதுநேரமும்) விட்டு விலகாத நம்முடைய நேயன் (அவன் என்பதை) அறிந்து கொள்; (எ-று.)

(வி-ரை.) வாங்குதல் -(எங்குமான சொரூப தடத்தத் திருமேனிகளை நெஞ்சில்) தங்கச் செய்தல். வாங்காது மறந்தாலும் நீங்காத நேசத்தான் என்பது அருமையினும் அருமை. (194)

**-தீங்காத**

**195. ஈட்டுகின்ற ஆபத்தில் இந்தா எனஅருளை**
**நீட்டுகின்ற நம்முடைய நேசன்காண்**

(ப-ரை.) தீங்காக ஈட்டுகின்ற ஆபத்தில்-ஆபத்துகள் தீமையாக அணுகுகின்ற சமயத்தில்; இந்தா என அருளை நீட்டுகின்ற நம்முடைய நேசன்காண்-இங்கே வா என்று கருணை(க் கரங்களை) நீட்டுகின்ற நமது (ஆன்ம) நேயன் (அவன் என) அறிந்து கொள், (எ-று.)

(வி-ரை.) ஈண்டுதல்-ஈட்டுதல் என மெலித்தல் வலித்தலாயது. இந்தா என்பது, அண்மைச் சுட்டடியாக நீண்ட பெயர். அருளை நீட்டல் - எங்கிருப்பினும் உதவல்; "எங்கே என்னை இருந்திடம் தேடிக்கொண்டு அங்கே வந்து அடையாளம் அருளினார்" என்பது தமிழ் மறை. 'ஆபத்தில் உதவுவான் தோழன்' என்பது பழமொழி. "ஆபத்தில் அஞ்சல் என்ற பெருமாளே" என்பது திருப்புகழ். நம்முடைய என்பது, உரிமையுரை. (195)

**-கூட்டுலகில்**

**196. புல்லென்ற மாயையிடைப்போந்தோறும்நம்மையிங்கு**
**நில்லென் றிருத்துகின்ற நேசன்காண்**

(ப-ரை.) கூட்டு உலகில் புல் என்ற மாயையிடை போம்தோறும் - (அவன்) பெயரும் உருவும் பெற்றுள உலகில், மாயையின் கீழ்மையான மயக்கில் அகப்பட்டு ஆழும் ஒவ்வொரு நேரத்திலும், நில் என்று இங்கு நம்மை இருத்துகின்ற நேசன் காண் - (இனி மேலும் செல்லாதே!) இங்கேயே நில் என்று நம்மைத் தடைப்படுத்தி, (திருவருள் நெறியில்) இருத்துகின்ற ஆன்ம நேயன் அவன் காண், (எ-று.)

(வி-ரை.) தத்துவங்கள் 36; தாத்துவிகங்கள் 60; ஒவ்வொன்றிற்கும் பெயருண்டு; வேறு வேறு உரு உண்டு; இவைகள் யாவும் ஒன்று சேர்ந்தால், 'கூட்டுலகம்' எனும் பெயர் கொள்ளும். புல் - புன்மை யெனும் பண்படி. புன்மை-அற்பத் தன்மை. புன்மையே மாயையின் போர்வை. உலகத்தில் அம்மாயை எவரையும் நிலை குலைய வழி செய்யும்; காணும் அவ்வழியில் மயங்கிக் காலாழுந் தோறும், "சிந்தையற நில் என்று சும்மா உணர்த்தி, மேல் சின்மயா நந்த வெள்ளம் தேக்கித் திளைத்து நான் அதுவா யிருக்க நீ செய் சிற்றம் மிகநன்று காண்" என்றபடி, ஆன்ம நேய உரிமையில் நில் என்று நிறுத்தி, காக்கும் தெய்வ நேயம் இங்கு கருதப் பெற்றது. (196)

**-சில்லென்றென்**

197. **உட்டூவும் தன்னைமறந் துண்டாலும் மற்றதற்கு**
**நிட்டூரஞ் செய்யாத நேசன்காண்**

(ப-ரை.) சில் என்று என் உள் தூவும் தன்னை மறந்து உண்டாலும்-சில் என்று என்னுள் சிந்தப் பெறும் (அருளமுதாம்) தன்னை மறந்து, (அடுத்தவைகளை நாம்) அனுபவித்துக் கொண்டு இருந்தாலும்; மற்று அதற்கு நிட்டூரம் செய்யாத நேசன் காண் -அதற்காக, சினக்கும் கொடுமை செய்யாத (சிறந்த) நேசன் காண் அவன், (எ-று.)

(வி-ரை.) அருள் அமுதம், குறிப்பான பெயர்க்குத் தக்கபடி குளிர்வது; உளத்துள், உணர்வுள், உயிர்ப்புள், தெளிக்கிறது அதைத் தெய்வம். இஃது, இயற்கைச் செய்தி; என்றும் உள்ள அனுபவம்; தெளிந்த எல்லா ஆன்மாக்கட்கும், இந்நிலை தெரிந்துளது. அங்ஙனம் இருந்தும், பழைய வாசனையால் பல்லிளித்து, இதனை மறந்து அதன் மயம் ஆகும் ஆன்மாக்கள்; அது கண்டு அருவருத்தல் செய்யாமல், அப்பொழுதும் பாசமான நேசம் செய்கிறது பரமான்மா. இதை நினைக்கும் போதே மனம் நெகிழ்கிறதே! சில் -குளு குளு நிலை. தூவுதல் -தெளித்தல். உண்டல்-அனுபவித்தல்; "உண்டற்குரிய அல்லாப் பொருளை, உண்டன போலக் கூறலும் மரபே" என்பது தொல்காப்பியம். (197)

**-நட்டூர்ந்து**

198. **வஞ்சமது நாமெண்ணி வாழ்ந்தாலும் தான்சிறிது**
**நெஞ்சிலது வையாத நேசன்காண்**

(ப-ரை.) நட்டு ஊர்ந்து - அணு அணுவாக (தான்) நட்புடன் அணுகி; வஞ்சம் அது நாம் எண்ணி வாழ்ந்தாலும்-வஞ்சனை மனம் கொண்டு நாம் வாழ்ந்தாலும்; தான் சிறிதும் அது நெஞ்சில் வையாத நேசன் காண் - தான் அதை ஒரு சிறிதும் திருவுளத்தில் கொள்ளாத (ஆன்ம) நேயன் காண், (எ-று.)

(வி-ரை.) நட்டு -விரும்பி. கல்லார் கற்றார், நல்லார் பொல்லார் எனும் வேறுபாடு இல்லாமல், எல்லா ஆன்மாக்களிலும் அதி மெதுவக அணுகுதலை, 'ஊர்ந்து' எனும் சொல்லால் உணர்த்தினார். தஞ்சமென்று தான் சார அறியாமல், வஞ்சம் எண்ணி வாழ்வதுவே ஆன்ம வழக்கம். வஞ்சமாவது-இனவேற்றுமை, மொழிப்பகை, சமயபேதம் ஆதிய வழிகளில் சதுரங்கம் ஆடுவது. ஆணவச் சார்பு, மாயை செய் மயக்கம், கர்ம பேதங்கள் ஆதிய இதற்குக் காரணம் என்று திருவுளத்து உணர்ந்து, ஆன்மப் பிழைகளை திருவுளத்தில் கொள்ளாதது தெய்வநேயம் என்றபடி. (198)

**-எஞ்சலிலாப்**

199. **பார்நின்ற நாம்கிடையாப் பண்டமெது வேண்டிடினும்**
**நேர்நின் றளித்துவரும் நேசன்காண்**

(ப-ரை.) எஞ்சல் இலா பார் நின்ற நாம் கிடையா பண்டமது வேண்டிடினும் - (அப்பெருமான்,) குறைவொன்றும் இல்லாத குவலயத்தில் உள்ள நாம், அகப்படா எப்பொருளை ஆவலித்து வேண்டினாலும்; நேர் நின்று அளித்து வரும் நேசன் காண்- (அருளொடு) முன்னின்று அளித்து வரும் நேயன் (எனலை நினைத்துப்) பார், (எ-று.)

(வி-ரை.) எஞ்சல் இலாமை-குறைவிலாத் தன்மை; (எஞ்சுதல் -குறைதல்.) என்றும் தேவைப் படுபொருள் எதிரில் உளது; அவை எளிதானதும் ஆகும். புனித அவைகலைப் பொருட்படுத்தாமல், தேவையற்றவைகளை ஆவலித்து, அரஹர! சிவசிவா! அதுதா இதுதா என்று, பெருமானை எண்ணிப் பிரார்த்திக்கும் ஜீவன். ஆகாமியத்தை எழுப்பும் ஆன்ம நிலைகண்டு, அதனால் வரும் பயனையும் அனுபவித்தால் அன்றி தளராது இத்தாபம் என்று, வேண்டுவன யாவும் வழங்குகின்றான் விமலன்; இது சுருதி சொல்லும் செய்தி என்று அந்த அளவில் சோர்ந்து விடாமல், ஒவ்வொருவரது வாழ்க்கையையும் ஒரு சிறிது ஊன்றி எண்ணினால், உண்மையே உண்மை யீது என்ற உணரவரும்; இந்த வேதனையை எவரிடம் சொல்லி ஆறுவது? எண்ணிப்பார் மனமே! என்றபடி. (199)

**-ஆர்வமுடன்**

**200. ஆர்ந்தநமக் கிவ்விடத்தும் அவ்விடத்தும் எவ்விடத்தும்**
**நேர்ந்தவுயிர் போல்கிடைத்த நேசன்காண்**

(ப-ரை.) ஆர்வமுடன் ஆர்ந்த நமக்கு - அன்புடன் நிறைவுகண்ட அடியோமுக்கு; இ இடத்தும் அ இடத்தும் எ இடத்தும்-இந்த நிலவுலகிலும் அந்த விண்ணுலகிலும், (வேறு) எந்த உலகிலும்; நேர்ந்த உயிர்போல் கிடைத்த நேசன் காண் - (உடலுடன்) பொருந்திய உயிர்போல் நேர்ந்து வந்து உதவுகின்ற நேயன்காண், (எ-று.)

(வி-ரை.) ஆர்வம்-பெருகிய அன்பு. ஆர்தல்-நிறைதல். நேர்தல்-இடைப்படுதல். சடமானவைபோல் அன்றி உயிர்போல் என்றமையின், அவ்வுயிரால் உயிர்ப்பவர்கள் நாம் என்பது உய்த்துணர் வைப்பு. (200)

## <u>மன்னர் மன்னன்</u>

**-சேர்ந்துமிகத்**

**201. தாபம்செய் குற்றம் தரினும் பொறுப்பதன்றிக்**
**கோபம் செயாநமது கோமான்காண்**

(ப-ரை.) சேர்ந்து மிக தாபம் செய் குற்றம் தரினும் - (கீழ்மைப் பண்பு) கெழுமி கொதிப்பேற்றும் குற்றங்கள் மிகப்பலவாச் செய்தாலும்; பொறுப்பது அன்றி கோபம் செயா நமது கோமான் காண் - பொறுத்துக் கொள்வது அல்லாமல், கோபித்துக் கொள்ளாத நமது கோமான் அவன், (எ-று.)

(வி-ரை.) தாபம் செய் குற்றம் - (தழல் போல்) தபிக்கச் செய்யும் தாழ்வுகள். கோபத்திற்குப் பகுதி குபு; உச்சிமுதல் உள்ளங் கால்வரை, குபுகுபு என்று வெம்மை கொப்புளிக்கும் நிலையில் விளைவது கோபம் எனப்பெறும். கோமான் - கோ-அரசன்; மான் - பெயர்விகுதி. (201)

**-பாபமற**

**202. விள்ளுமிறை நாமன்பு மேவலன்றி வேற்றரசர்**
**கொள்ளுமிறை வாங்காநங் கோமான்காண்**

(ப-ரை.) பாபம் அற விள்ளும் இறை-பாவங்கள் தீர பாடப்பெறும் பரமன்; நாம் அன்பு மேவல் அன்றி - நம் இடத்து அன்பைப் பகுதியாக வாங்குவது அல்லது, வேற்று அரசர் கொள்ளும் இறை வாங்கா நம் கோமன் காண் - அயற்புலத்து மன்னர் போல் பொருள்களைப் பகுதியாக வாங்காத நம் பூபதி காண், (எ-று.)

(வி-ரை.) விள்ளுதல் - வாய்விட்டுத் துதித்தல். இறை-வியாபக முதல்வன்; இரண்டாம் வரியில் உள்ள இறை-பகுதி. மேவல்-விரும்பிப் பெறுதல். (202)

**-உள்ளமுற**

**203. உண்டளிக்கும் ஊணுடைபூண் ஊரா திகள்தானே**
**கொண்டுநமக் கிங்களிக்கும் கோமான்காண்**

(ப-ரை.) ஊண், உடை, பூண், ஊர், ஆதிகள் உள்ளம் உற உண்டு அளிக்கும்-(கன்ம அளவாக) உணவு, ஆடை, அணிகலன், நகர் முதலியவைகளை உடனிருந்து (ஆன்மாக்களை) உளதாக அனுபவிக்கச் செய்து; தானே கொண்டு-(குருமுகமாகி அவைகளைத்) தானே (பாத காணிக்கையாக) வாங்கி; நமக்கு இங்கு அளிக்கும் கோமான் காண்-(இவை எமது உடைமை; உனதன்று; எச்சரிக்கையா யிரு என்று ஆணையிட்டு, அவைகளைத் திருப்பி,) நம்மிடம் இவ்வுலகில் ஒப்படைத்து இருக்கும் ஒப்பற்ற மன்னவன் (அவன்) காண், (எ-று.)

(வி-ரை.) எமதாக்கினான், திருப்பித் தனதாக்கினான்; உணவு, எமக்கும் அடியவர்க்கும் நிவேதனம்; உடை அணிகலன் ஆதிய, எமக்கும் அடியவர்க்கும் ஆகும்; நின்னிடம் ஒப்படைத்துள உடல் கரணம் புவனம் யாவும் எமது உடைமை; சுய நலத்தில் நின்னதெனச் சுழிக்காதே என்று எச்சரித்த கோமான் எனும் கருத்துள்ள இக் கண்ணி, என்றும் மனனத்தில் இருக்கத் தக்கது. (203)

## செல்வச் செழிப்பு

**-மண்டலத்தில்**

**204. ஒன்றலும் நீங்கா துகங்கள் பலபலவாய்ச்**
**சென்றாலும் செல்லாநம் செல்வம்காண்**

(ப-ரை.) மண்டலத்தில் ஒன்றாலும் நீங்காது-நிலவுலகில், எந்த ஒன்றாலும் அழியாததாய்; உகங்கள் பல பலவாய் சென்றாலும் செல்லா-பல யுகங்கள் அழிந்தாலும் தேய்ந்து அழிந்து தீராத; நம் செல்வம் காண் - நம் செல்வம் அவனே காண், (எ-று.)

(வி-ரை.) கள்வர் கவர்தல்; பகைவர் பறிமுதல் செய்தல் என்றுமில்லை; காற்றாலும் கனலாலும் அழிவது இல்லை; குறைதல் வளர்தல் கொள்வது இல்லை; எடுக்கக் குறையாதது; ஊழிதோரூழி உயர்வது நம் செல்வம்; அச்செல்வமே அவன் என்று நெஞ்சிற்கு அறிவுறுத்தியபடி, (204)

**-முன்தாவி**

**205. நாடிவைக்கும் நல்லறிவோர் நாளும் தவம்புரிந்து**
**தேடிவைத்த நம்முடைய செல்வங்காண்**

(ப-ரை.) முன்தாவி நாடி வைக்கும் - (விரதங்கள் தரும தானங்களின் பெயரால்) விரைந்து முன் வந்து ஆய்ந்து தொகுத்து; நல் அறிவார் -நல் ஞானிகள்; நாளும் தவம் புரிந்து-வாழ்நாள் முழுதும் தவத்தை வளர்த்து; தேடி வைத்த நம்முடைய செல்வங்காண்-(அவர்கள் முயல்வில்) தேடிவைத்த நம்முடைய செல்வம் (அவனே) காண், (எ-று.)

(வி-ரை.) தாவி, நாடி, புரிந்து, தேடி வைத்த செல்வம் என்பது, சொரூப ஜோதி, தடத்த உருவில் வர எடுத்துக் கொண்ட முயல்வை எண்ணி வைத்த கண்ணி இது. அச்செல்வமே நம் ஈசன் என்பது குறிப்பு. (205)

<u>**திரவிய ரூபம்**</u>

**-மாடிருந்து**

**206. நாமெத் தனைநாளும் நல்கிடினும் தானுலவாச்**
**சேமித்த வைப்பின் திரவியங்காண்**

(ப-ரை.) மாடு இருந்து நாம் எத்தனை நாளும் நல்கிடினும்-பக்கத்தில் இருந்து நாம் எவ்வளவு காலம் (வாரி அடியவர்க்கு) வழங்கினாலும்; தான் உலவா-தான் சுருங்குதல் இல்லாதபடி; சேமித்த வைப்பின் திரவியம் காண் - சேர்த்து வைத்த புதையல் செல்வம் காண்(அவன்), (எ-று.)

(வி-ரை.) மாடு-அண்மை. திருவருட்செல்வம் அடியவர்க்கன்றி மற்றவர்க்கு அனுபவிக்க இயலாதது ஆதலின், நல்குதல் அடியவர்க்கே என்று கொள்ளப் பெறும். வைப்பு-புதையல் நிதி; கொடுத்து வைத்தவர்க்கு அன்றி, புதையல் பொருள் எவர்க்கும் புலனாவது இல்லை; அதுபோல் திருவருள் நிதி, அருள் ஞானிகட்கும் அடியவர்க்குமே என்பது அறியப்பெறும். (206)

## உடமையாளன்

**-பூமிக்கண்**

207. **ஈங்குறினும் வானாதி யாங்குறினும் விட்டகலா**
**தோங்கருளல் நம்மை யுடையவன்காண்**

(ப-ரை.) பூமிக்கண் ஈண்டு உறினும் -(நாம்) இந்நில வுலகில் இருந்தாலும்; வான் ஆதி யாங்கு உறினும்-பண்ணவர் உலகம் முதலிய பதங்களில் இருந்தாலும்; விட்டு அகலாது-(நேசமுள நம்மை) விட்டு நீங்காமல்; ஓங்கு அருளால் நம்மை உடையவன் காண்-உயர்ந்த தன் பெருங்கருணையால் நம்மை (உடைமையாக் கொண்டுள்ள) தலைவன் காண், (எ-று.)

(வி-ரை.) 'எல்லாம் உன் அடிமையே! எல்லாம் உன் உடைமையே' என்று ஒப்படைத்த பின், ஆன்மாக்கள் அடிமையாயின; ஆக்கைகள் உடைமையாயின என்றபடி.

## சுந்தரேசன்

**-ஆங்கவன்றன்**

208. **கங்கைச் சடையழகும் காதன்மிகும் அச்சடைமேல்**
**திங்கள் கொழுந்தின் திருவழகும்**

(ப-ரை.) ஆங்கவன்தன் கங்கை சடை அழகும் - அப்பெருமானுடைய கங்கை சூடிய சடையின் அழகும்; காதல் மிகும் அச்சடை மேல் திங்கள் கொழுந்தின் திருவழகும் - ஆர்வம் மிக்க அந்தச் சடை மேல் இளம்பிறைத் திங்களின் உயர்ந்த அழகும், (எ-று.)

(வி-ரை.) கங்கை, மதி வரலாறுகள், திருவடிபுகழ்ச்சி, விண்ணப்பக் கலிவெண்பா உரைகளில் உள. காதல் - கட்டு மீறிய தெய்வ வேட்கை. கொழுந்து - பிறை.

**-திங்கடன்மேல்**

209. **சார்ந்திலங்கும் கொன்றைமலர்த் தாரழகும் அத்தார்**
**ஆர்ந்திலங்கும் வண்டின் அணியழகும்**

(ப-ரை.) திங்கள் தன் மேல் சார்ந்து இலங்கும் கொன்றை மலர் தார் அழகும் - பிறைக் கண்ணியின் மேல் இருந்து பிரகாசிக்கின்ற (அருமை) கொன்றை மலர் மாலையின் அழகும்; அத் தார் மேல் ஆர்ந்து இலங்கும் வண்டின் அணி அழகும்- அம்மாலையின் மேல் ஆரவாரித்துத் தங்கி விளங்கும் வண்டுகளின் வரிசை வனப்பும், (எ-று.)

(வி-ரை.) தரத்தில் உயர்ந்த மாலை தார் எனும் பெயர் பெறும். (209)

**-தேர்ந்தவர்க்கும்**

**210. நோக்கரிய நோக்கழகும் நோக்கார் நுதலழகும்**
**போக்கரிய நன்னுதலிற் பொட்டழகும்**

(ப-ரை.) தேர்ந்தவர்க்கும் நோக்க அரிய நோக்கு அழகும் - முதிர்ந்த உணர்வினர்கட்கும் காண முடியாத திருவிழி அழகும்; நோக்கு ஆர் நுதல் அழகும் - (ஞான) விழியுள அருமையான திருநெற்றி யழகும், போக்கு அரிய நன் நுதலில் பொட்டு அழகும் - அழியாத சிறந்த நுதலில் வைத்த பொட்டின் பொலிவும், (எ-று.)

(வி-ரை.) தேர்ந்தவர் - தெளிந்த ஞானிகள். "நோக்கரிய நோக்கே!" என்ற திருவாசகம் இங்கு நினைக்கத் தகும். போக்கரிய எனும் அடையால், அது இயற்கைத் திலகம் என எண்ண வைத்தபடி. (210)

**-தேக்குதிரி**

**211. புண்டரத்தின் நல்லழகும் பொன்னருள்தான் தன் எழிலைக்**
**கண்டவர்பால் ஊற்றுகின்ற கண்ணழகும்**

(ப-ரை.) தேக்கும் - (அந் நுதலின்) நிரம்ப இட்ட; திரிபுண்டரத்தின் நல் அழகும் - மூன்று ரேகையான திருநீற்றுக் கீற்றில் திகழும் பொலிவும்; பொன் அருள்தான் தன் எழிலைக் கண்டவர்பால் ஊற்றுகின்ற கண் அழகும் - தன் அழகைத் தரிசித்தவர்கள் இடத்தில் பொன்போலும் அருளைப் பொழிகின்ற, (மதியும் பரிதியுமான இடம் வலம் உள்ள) திருக்கண்களின் அழகும், (எ-று.)

(வி-ரை.) அருளிற்கு உவமை கூற உலகில் எதுவும் அகப்படா ஆதலின், 'பொன் போலும்' என வாளா கூறினார். தான் - தேற்றப் பொருட்டு. திரிபுண்டர அழகிற்கும் உவமையில்லை. ஆதலின் 'நல்' எனும் அடை மாத்திரமாக நிறுத்தினார். ஒரு கீற்றில் பிரமன், ஒரு கீற்றில் திருமால், ஒரு கீற்றில் உருத்திரர்; அவைகளில் அகர உகர மகர ஆட்சி; மற்று,ருத்திர மகேஸ்வர சதாசிவ ஆட்சி; இறைவன் திருமார்பின் மூன்று ரேகை, "வரையகன் மார்பிடை வரையும் மூன்றுள." தேவி திருவயிற்றில் மூன்று மடிப்பு; அது, மூர்த்திகள் மூவரைத் திருவயிற்றுள் வைத்து உயிர்த்தவள் ஆதலை, அறிவுறுத்தும் செய்தியாயது. "மூவரை வாய்ந்து அழகெறிக்கும் திருவயிறு" என அறியப் பெறும்; இந்த அனுபவங்கள் பல வெளிப்படுக்கும் விபூதியின் மூன்று ரேகைகள். விரிவு, பஸ்மஜாபால உபநிடதம், திருநீற்றுப் பதிகம் முதலியவைகளிற் காணலாம். "இடர் தவிர்ப்பர் ஆதலால், நீறு கொண்டு மூன்று ரேகை நெற்றி மீதில் எழுதுமே" என்பர் ஆன்றோர். விழியின் அழகு அருளைப் பொழிதல்; "கண்ணுக்கு அணிகலம் கண்ணோட்டம்" எனல் அறிக. (211)

**-தொண்டர்கடம்**

**212. நேசித்த நெஞ்சமலர் நீடு மணமுகந்த**
**நாசித் திருக்குமிழின் நல்லழகும்**

(ப-ரை.) தொண்டர்கள் தம் நேசித்த நெஞ்சமலர் நீடு மணம் முகந்த-அடியவர்கள் ஆயினாருடைய பக்தி நிறைந்த இதய கமல மணத்தை முகர்கின்ற; நாசி திருக்குமிழின் நல் அழகும்-நாசிகள் ஆகிய (கண்டார் மனம்) கவரும் குமிழம்பூப் போன்ற எடுப்பான அழகும், (எ-று.)

(வி-ரை.) பக்தி மணம் இன்பப் பரிமளமானது. அந்த இதய மணத்தை முகர்ந்தபடியே இருக்கும் இறைவன் எனலை எண்ணும்போதே, என்னே அவன் கருணை என்று மனம் இன்புறுகின்றதே? (212)

**-தேசுற்ற**

**213. முல்லை முகையாம் முறுவலழ கும்பவள**
**எல்லை வளர்செவ் இதழழகும்**

(ப-ரை.) தேசு உற்ற முல்லை முகை ஆம் முறுவல் அழகும்-(வெண்மை) ஒளி பொருந்திய முல்லை. அரும்பு போன்ற புன்சிரிப்பிற்கு உரிய பற்களின் அழகும்; பவள எல்லை வளர் செவ் இதழ் அழகும் - (அந்நகையின்) எல்லையில் வளர்கின்ற சிவந்த பவளம் போன்ற திரு அதர அழகும், (எ-று.)

(வி-ரை.) "ஆர்வில் பல்லழகு, துன்பீர் அம்பு எனவே நெஞ்சம் துள்ளு கின்றதரோ" என்பர் பாம்பன் அடிகள். முல்லைப் பல்லழகுடன் பவள இதழ் அழகையும் ஒரு சேரப் பார்த்தபடி. (213)

**-நல்லவரைத்**

**214. தேவென்ற தீம்பாலிற் றேன்கலந்தால் போலினிக்க**
**வாவென் றருளுமலர் வாயழகும்**

(ப-ரை.) நல்லவரை-நற்குணம் உள்ள அன்பர்களே; தே என்ற தீம்பாலில் தேன் கலந்தாற் போல் இனிக்க-இனிய பாலுடன் தேன் கலந்தது போல் இனிக்குமாறு; வா என்று அருளும் மலர்வாய் அழகும்-வா என்று அருளோடு அழைக்கும் மலர் போன்ற திருவாயழகும், (எ-று.)

(வி-ரை.) இதயமுகமான அன்பர்கட்கு அயலாக, எந்த உலகிலும் சிறந்தவர்கள் இல்லை ஆதலின், அவர்களை 'நல்லவர்' என்றார். தே என்றபால்-தேவாமுதம் எனும் குறிப்பு. இக்கண்ணியின் முதல் எழுத்துக்கள், தேவா என நிற்கும் நிலை உணர்க. (214)

**-பூவொன்றும்**

**215. கோன்பரவும் சங்கக் குழையழகும் அன்பர்மொழித்
தேன்பரவும் வள்ளைச் செவியழகும்**

(ப-ரை.) பூ ஒன்றும் கோன் பரவும் சங்கக் குழை அழகும்-தாமரை ஆகிய ஆசனத்தில் தங்கி இருக்கின்ற பிரமன் வழிபடும் சங்கினால் ஆன (செவியணியான) குழை அழகும்; அன்பர் மொழி தேன் பரவும் வள்ளை செவி அழகும்-அன்பர்கள் (பாடும்) சொற்கள் ஆகிய தேன்புகும் வள்ளைக் கொடி ஒத்த திருச்செவியழகும், (எ-று.)

(வி-ரை.) பூ ஒன்றும் கோன் - கமலாசனன் எனும் பொருட்டு. பிரமன் துதிமொழி, செவியன் குழையளவாகித் தடைப்பட, அன்பர்மொழி சதா கேட்கும் செவியழகன் என்றபடி. (215)

**-நான்பரவி**

**216. வேட்டவையை நின்றாங்கு விண்ணப்பஞ் செய்ய அது
கேட்டருளும் வார்செவியின் கேழழகும்**

(ப-ரை.) நான் பரவி வேட்டவையை நின்றாங்கு விண்ணப்பம் செய்ய-அடியேன் துதி செய்து சந்நிதியில் இருந்து விரும்பியவைகளை விண்ணப்பிக்க; அது கேட்டருளும் வார்செவியின் கேழ் அழகும்-அதைக் கேட்கும் நீண்ட திருச்செவியின் தெய்வப் பொலிவும், (எ-று.)

(வி-ரை.) பரவுதல்-வழிபட்டு வாழ்த்தல். வேட்டவை-பன்மை. நின்றாங்கு என்பதில் ஆங்கு சொல்லுருபு வார் - நீட்சி. கேழ்-ஒளி. (216)

**-நாட்டிலுயர்**

**217. சைவ முதலாய்த் தழைக்க அருள்சுரக்கும்
தெய்வ முகத்தின் திருவழகும்**

(ப-ரை.) நாட்டில் உயர் சைவம் முதலாய் தழைக்க-உலகில் உள்ள (எச்சமயத்தினும்) உயர்ந்த சைவசமயம், முதன்மைச் சமயமாய் (எங்கும் தழத்து இருக்க; அருள் சுரக்கும் தெய்வ முகத்தின் திரு அழகும்-அருள் வளரும் தெய்வக் கமலத் திருமுகத்தின் பெரும் பொலிவும். (எ-று.)

(வி-ரை.) 'சைவம் சிவத்தொடு சம்பந்தம் என்றான், சைவம் வளர்க்கும் சம்பந்த மூர்த்தி' என்பது ஆன்றோர் அருளுரை. இதனால், சிவ சம்பந்தம் உடையது சைவம் என்று அறிக. (சிவம் - மங்கலம்) சைவத்தின் முதன்மையாவது, எச் சமயத்தையும் தன் அங்கமாகக் கொண்ட சமரச மெய்ந்நிலை. அதற்கென்றே அருள் சுரக்கும் தெய்வ முகம் என்ற நயம், எண்ணி இன்புறற்கு உரியது. (217)

**-தெய்வமுகத்**

**218. துள்ளம் குளிர உயிர்குளிர மெய்குளிரக்
கொள்ளும் கருணைக் குறிப்பழகும்**

(ப-ரை.) உள்ளம் குளிர உயிர் குளிர மெய்குளிர-(உணர்ந்தார்) உள்ளம் குளிரவும், உயிர் குளிரவும், உடல் குளிரவும்; தெய்வமுகம் கொள்ளும் கருணை குறிப்பு அழகும்-தெய்வத் திருமுகம் கொண்ட அருள் குறிப்பின் (சிறந்த) அழகும், (எ-று.)

(வி-ரை.) தெய்வ முகம் கொள்ளும் கருணைக் குறிப்பழகை உணர்பொழுதே உள்ளமும், உள்ளத்தில் இருந்த உயிரும், அவ்வுயிர் இருந்த உடலும் குளிரும் என்றபடி. இதனால், தாபம் விளைவிக்கும் பிறவி வெம்மை தவிர்ந்துவிடும் என்பது குறிப்பு. (218)

**-உள்ளறிவின்**

**219. எள்ளாத மேன்மையுல கெல்லாம் தழைப்பஒளிர்
தெள்ளார் அமுதச் சிரிப்பழகும்**

(ப-ரை.) உள் அறிவின் எள்ளாத மேன்மை உலகு எல்லாம் தழைப்ப-உள்ளத்து உணர்வில் உதாசீனப் படுத்தாத(மெய்ம்மையின்) மேன்மை தரணி முழுதும் தழைப்ப; ஒளிர் தெள் ஆர் அமுத சிரிப்பு அழகும்-பிரகாசிக்கின்ற தெளிவு நிறைந்த அமுதமான நகையின் அழகும், (எ-று.)

(வி-ரை.) உள் அறிவு-அறிவுள் இருக்கும் ஞானம். இருக்கும் அறியாமை அறிவு இரண்டையும் விரட்டியபின், 'உள்ளறிவு' உதிக்கும்; அந்த அறிவில் இகழாத மேன்மை ஒன்று உண்டு. (இது, சாதகர்கள் அறிந்த பரம ரகசியமான சால்பு.) புற அறிவிற்கு அது புலனாகாமையால், அப்படி ஒன்று இருந்தால் அது தெரிய வேண்டுமே, தெரிய வில்லை யாதலின், பொய்யே பொய் அஃது உளது என்பது என்று, எள்ளல் செய்தி எங்கும் ஆயது. (சிவசிவசிவசிவ.) அத் தற்பர மேன்மை எங்கும் தழைப்ப, சிரிப்பின் ஒளி பரப்பும் சிவம். ஆஹா! என்ன அருமையான செய்தி யிது, ()

**-உள்ளோங்கும்**

**220. சீல அருளின் திறத்துக் கிலச்சினையாம்
நீல மணிமிடற்றின் நீடழகும்**

(ப-ரை.) உள் ஓங்கும் சீல அருளின் திறத்துக்கு இலச்சினையாம்-திருவுளத்தில் திகழ்ந்து பெருகும் வைதிக அருளின் வன்மைக்கு அடையாளமான; நீலமணி மிடற்றின் நீடு அழகும்-திருநீல கண்டத்தின் பேரழகும், (எ-று.)

(வி-ரை.) உள்ளம் கவர்ந்து ஓங்குவது, சீல அருளின் திறம். இப்பண்பு இல்லா உணர்வின் அவைதிகரை, ஏற்பது இல்லை இயற்கை என்பது இங்கு எண்ணத் தகும்.

நீல ரத்தினம் போன்ற திருக்கழுத்தை, 'நீல மணிமிடறு' என்றார். 'நீடழகு' என்பதில், உள்ளத்து உயர்வு, சீலம், அருள், திறம் யாவும், நீலமணி மிடற்றில் நிறைந்துளது எனலை நினைப்பித்தபடி. (220)

**-மாலகற்றி**

221. **வாழ்ந்தொளிரும் அன்பர் மனம்போலும் வெண்ணீறு**
**சூழ்ந்தொளிகொண் டோங்குதிருத் தோளழகும்**

(ப-ரை.) மால் அகற்றி வாழ்ந்து ஒளிரும் அன்பர் மனம் போலும் வெண்ணீறு சூழ்ந்து-(உலகியல்) மயக்கத்தை ஒழித்து, (வளர்விக்கும் மெய்ந் நெறியில்) வாழ்ந்து பிரகாசிக்கும் மெய்யன்பர்களின் திருவுளம் போன்ற திருவெண்ணீறு சூழ்ந்து; ஒளிகொண்டு ஓங்கு திருத்தோளழகும்-(திருமேனியின் பொன்னொளி, நிலவின் வெள்ஒளி யாவும் ஒரு முகமாகி) ஒளிர்ந்து, (பவளமலைபோல்) எடுப்பான திருத்தோள்களின் அழகும், (எ-று.)

(வி-ரை.) அன்பர் அனம் களங்கம் அற்றது; அதைத் திரு வெண்ணீற்றுக்கு உவமித்த அருமையே அருமை. சூழ்ந்தொளி என்பதில், பவளமால் வரையின் நிலவு ஒளியும், அண்மையின் உள்ள அம்பிகையின் நீலவொளியும் கலந்து, "இந்நிறத்தின் இவ்வணத்தன் இவன் இறைவன் என்று எழுதிக் காட்டொணாதே" எனும் தமிழ்மறை நினைவிலுறும்.

**-தாழ்ந்திலவாய்த்**

222. **தானோங்கும் அண்டமெலாம் சத்தமுறக் கூவுமொரு**
**மானோங்கும் செங்கை மலரழகும்**

(ப-ரை.) தாழ்ந்திலவாய் தான் ஓங்கும் அண்டம் எலாம் சத்தம் உறக்கூவும்-தாழ்வு இல்லாததாய், அளவிறந்து உயர்ந்த அண்டங்கள் அனைத்தினும் எதிரொலி எழுமாறு கூவுகின்ற; ஒரு மான் ஓங்கும் செங்கை மலர் அழகும்-ஒப்பற்ற மான் கன்று நிமிர்ந்து விளங்கும் சிவந்த திருக்கை மலரழகும், (எ-று.)

(வி-ரை.) தாருவனத்தவர், ஏவிய மானைக் கரத்தில் மாதேவர் ஏந்தியுளர்; அது கூவும் குரல், சர்வ அண்டங்களிலும் கேட்கிறது என்பதனால், அம் மானின் ஆற்றலும், அதை ஏந்திய இறைவர் பெருமையும் தெரிதலுறும். (222)

**-ஊனோங்கும்**

223. **ஆணவத்தின் கூற்றை அழிக்க ஒளிர்மழுவைக்**
**காணவைத்த செங்கமலக் கையழகும்**

(ப-ரை.) ஊன் ஓங்கும் ஆணவத்தின் கூற்றை அழிக்க-காயங்கள் தோன்றற்குக் காரணமான ஆணவத்தின் கிளைகளை (அடியோடு) அழிக்க; ஒளிர் மழுவை காண

வைத்த செங்கமலக் கையழகும்-ஒளிர்கின்ற மழுவை, (யாவரும்) காண ஏந்திய செந்தாமரை அனைய புனிதத் திருக்கரப் பொலிவும், (எ-று.)

(வி-ரை.) ஆணவம் அநாதி; அதை அழித்தல் எவராலும் ஆவதில்லை; அடக்கிச் செயலை ஒடுக்கலாம்; எவராலும் அவ்வளவே இயலும்; இங்கு ஆணவத்தின் இனங்களான காமக் குரோதாதிகளை அழிக்க, பிரகாசத்தை மழு பெருக்குகின்றது என்றபடி. (223)

**-நாணமுற்றே**

**224. ஏங்கும் பரிசுடைய எம்போல்வார் அச்சமெலாம்
வாங்கும் அபய மலரழகும்**

(ப-ரை.) நாணம் உற்றே ஏங்கும் பரிசு உடைய-(நல்லோரைக் காண) நாணம் கொண்டு, ஏக்கம் பெருகி இருப்பதையே இயல்பாக வுடைய; எம்போல்வார் அச்சம் எல்லாம் வாங்கும் அபய மலர் அழகும்-எம்மைப் போன்றவர்கள் எய்தும் அச்சம் அனைத்தையும் அடியோடு தீர்க்கும் அபய திருக்கர மலரின் அழகும், (எ-று.)

(வி-ரை.) நாணம் - சால்பின் ஐந்து தூண்களில் ஒன்று என்றார் வள்ளுவர்; அது சத் தர்மச் சார்பு. இது, சத்தானவர்களை, சத்தானவைகளைச் சந்திக்க நாணுகின்ற நாச நடை. இதன் பயன் சதா ஏக்கம் கொண்டு இருக்கும் பரிபவம். இப் பாவப் பரிசால் வரும் அச்சம் அனைத்தையும் தவிர்க்கின்ற அபய திருக்கர அழகை மறவாது நமது மனம். (224)

**-தீங்கடையாச்**

**225. சீர்வரவும் எல்லாச் சிறப்பும் பெறவுமருள்
சார்வரத ஒண்கைத் தலத்தழகும்**

(ப-ரை.) தீங்கு அடையா சீர் வரவும் - தீமை கலவாத சிறந்த வருகை புரியவும்; எல்லா சிறப்பும் பெறவும் - அனைத்துச் சிறப்பை அடையவும்; அருள் சார் வரத ஒள்கை தலத்து அழகும்-(அன்பர்க்குப்) பரம அருளைப் பாலிக்கின்ற ஒளி மயமான வரத திருக்கரத்தின் அழகையும், (எ-று.)

(வி-ரை.) சீர்-திருவருட் செல்வம். சிறப்பு-(கால கர்ம தத்துவங்களைக் கடக்கும்) மேன்மை; உலகியலில் கல்வி, பதவி, மதிப்பு முதலியவைகளைக் குறித்தது எனினும் ஒருசார் பொருந்தும். வரதம் - வரம் தருவது; அதனால் அதனை, ‘ஒள்கை’ என்றார். (225)

**பேரரவப்**

**226. பூணிலங்க வெண்பொன் பொடியிலங்க என்பணித்தார்
மாணிலங்க மேவுதிரு மார்பழகும்**

(ப-ரை.) பேர் அரவப் பூண் இலங்க-பெரிய பாம்பு அணிகள் பளபளக்கவும்; வெண் பொன்பொடி இலங்க-வெள்ளி போன்ற திரு நீறு விளங்கவும்; என்பு அணி தார் மாண் இலங்க மேவு திரு மார்பு அழகும்-எலும்பின் அழகிய மாலைச் சிறப்பு விளங்கும் திருமார்பின் பொலிவும், (எ-று.)

(வி-ரை.) பூணப் படுவது 'பூண்' வெண்பொன் - வெள்ளி; அந்நிறத்தது, களங்கமற்ற திருநீறு என்பது குறிப்பு. மாண்பு-மாட்சி. என்பு மாலை வரலாறு திருவடிப் புகழ்ச்சி 79-ஆம் வரி உரையில் உள்ளது. (226)

**-சேணிலத்தர்**

**227. மேலுடுத்த ஆடையெலாம் வெஃக வியாக்கிரமத்**
**தோலுடுத்த ஒள்மருங்கின் துன்னழகும்**

(ப-ரை.) சேண் நிலத்தர் மேல் உடுத்த ஆடை எலாம் வெஃக-விண்ணுலகத் தேவர்கள் (உத்தமத் தம்) உடம்பில் உடுத்த (பீதாம்பரம் முதலிய) ஆடைகள் அனைத்தும் ஆவலிக்க; வியாக்கிரமத் தோல் உடுத்த ஒள் மருங்கில் துன் அழகும்-புலித்தோல் உடுத்த புதுஒளி இடையில் பொருந்தி யிருக்கும் (புனித) அழகும், (எ-று.)

(வி-ரை.) பால் ஏடு போலும் லேசுடைய உடை, ஆடை எனும் பெயரால் அறியப் பெறும். வெஃகல்-பெரிது விரும்பல். வியாக்ரமம்-புலி. ஒள்-ஒளி; தூய்மையுமாம். அமரர் உடுத்துள உயர்ந்த ஆடைகள், உமாபதி உடுத்த புலித்தோல் உடையைக் கண்டு வெஃகின எனலால், அந்தத் தோலாடையின் அருமை தோன்றுகின்றது.

**-பாலுடுத்த**

**228. கேழ்க்கோலம் மேவுதிருக் கீளழகும் அக்கீளின்**
**கீழ்க்கோ வணத்தின் கிளரழகும்**

(ப-ரை.) பால் அடுத்த கேழ் கோலம் மேவு திரு கீள் அழகும்-பால் போலும் வெண்ணிறமான புனித ஒளியும் அழகு பொருந்திய கீள் உடையின் வனப்பும்; அ கீளின் கீழ் கோவணத்தின் கிளர் அழகும்-அந்தக் கீளின் கீழாகத் தரித்த கோவணத்தின் சிறந்த கோலமும், (எ-று.)

(வி-ரை.) பால் அடுத்த-வெண்மையும் தூய்மையுமான எனும் பொருளது. கேழ்-புனித ஒளி. கீள்-தகட்டு உருவாக நூலால் நெய்து அரை ஞாணாகக் கட்டுவதற்கு அமைவது; "கீளார் கோவணமும் திரு நீறு மெய்ப்பூசி" என்று சுந்தரரும், "சடையும் பிறையும் சாம்பற் பூச்சும் கீழ், உடையும் கொண்ட உருவம் என்கொலோ" எனும் ஆளுடைய பிள்ளையாரும், "கீளலாது உடையுமில்லை" என்று அப்பரும் அருளுவது இங்கு எண்ணத் தகும்.

**“மன்னுகலை துன்னுபொருள் மறைநான்கே வான்சரடாத்**
**தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ”**

என்பது திருவாசகம்.

**“ஓங்கு கோவணப் பெருமையை உள்ளவா றுமக்கே**
**ஈங்கு நான் சொல்ல வேண்டுவதில்லை:**

என்பது பன்னிரண்டாந் திருமுறை. (228)

**-கீழ்க்கோலம்**

229. **ஒட்டிநின்ற மெய்யன்பர் உள்ளம் எலாம்சேர்த்துக்**
**கட்டிநின்ற வீரக் கழலழகும்**

(ப-ரை.) கீழ் கோலம் ஒட்டி நின்ற-கீழ் உறுப்பில் அணுக்கம் கொண்டு இருந்த; மெய் அன்பர் உள்ளம் எலாம் சேர்த்து கட்டி நின்ற வீரக் கழல் அழகும்-மெய்ம்மை அடியவர் உள்ளங்கள் அனைத்தையும் ஒரு முகமாக (வசீகரித்திழுத்துக்) கட்டப்பெற்று இருந்த வீரக் கழலில் விளையழகும்,

**-எட்டிரண்டும்**

230. **சித்திக்கும் யோகியர்தம் சிந்தைதனில் தேன்போன்று**
**தித்திக்கும் சேவடியின் சீரழகும்**

(ப-ரை.) எட்டு இரண்டும் சித்திக்கும் யோகியர்தம் சிந்தைதனில்-எட்டும் இரண்டும் உருவான யோகிகளின் சித்தத்தில்; தேன் போன்று தித்திக்கும் சேவடியின் சீர் அழகும்-தேனைப்போல் இனிக்கின்ற சிவந்த ஒளிமயமான திருவடிகளின் சிறந்த பொலிவும், (எ-று.)

(வி-ரை.) எட்டு இரண்டு என்பவைகளை, அ உ என வரி வடிவில் எழுதிக் காட்டுவது தமிழ் மரபு.

**அஉ அறியா அறிவில் இடைமகனே!**
**நொ அலையல் நின் ஆட்டைநீ”**

என்பது யாப்பருங்கலம். அறிவே சிறிதும் இல்லா ஒருவனை, எட்டும் இரண்டும் எவ்வளவு என்னில், தெரியாது என்பன்; இன்றேல் உளறி வழிவன்; இப்படி நகையாடுவது உலகியல் வழக்கு. இது போலித்தனமான போக்கு.

உணர்வியல் உலகில், இதுகுறித்த ஆய்வே அற்புதம் ஆனது. அகரம் சிவ இயக்கம்; உகரம் உமை இயக்கம்; இந்த இரண்டும் தியான காலத்தில் இணையும்

பொழுது, சித்தத்தில் உருவாகும் சிவலிங்கம். "சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டி, சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி" என்பது ஔவை அகவல்.

**"எட்டும் இரண்டும் உருவான இலிங்கத்தே**
**நட்டம் புதல்வா நவிலக்கேள்-சிட்டன்**
**சிவாயநம என்னும் திருஎழுத்தஞ் சாலே**
**அவாயமற நின்றாடு வான்"**

என்பது சாத்திரம் கூறும் சதுரம் பாடு. சாதனையர், இக்கண்ணியை எண்ணுறு பொழுது உள்முகம் ஆவர்; இதற்கு மேல் இங்கு உரை கூற வேண்டா; உரைத்தால், ஆரவாரக் கடைவிரித்தது ஆகும். (230)

**-சத்தித்து**

**231. மல்வைத்த மாமறையும் மாலயனும் காண்பரிய**
**செல்வத் திருவடியில் சீரழகும்**

(ப-ரை.) சந்தித்து மல் வைத்த மாமறையும்-நாதம் எழுப்பி, பொருள் வளம் கொண்ட புனித மறைகளும்; மால் அயனும் காண்பு அரிய-திருமாலும் நான்முகனும் காண இயலாத; செல்வத் திருவடியின் சீர் அழகும்-(சித்தி முத்தி எனும் இரு) செல்வங்களையுடைய திருவடிகளின் சிறந்த பொலிவும், (எ-று.)

(வி-ரை.) வெறும் ஆரவாரக் குரலெழுப்பி, (மதவாத) மற்போர் தொடங்கும் மறைகள் என, மனம் போன போக்கில் உரைகாணல் மரபாக மாட்டாது; அப்படி உரை காணும் இடங்கள் வேறுள. பரிபாக முதிர்வு, அதன் இடைக்காலம், ஆரம்பம் என முத்திற இடங்களை நினைவுறுத்தும் முடிவுகளை ஆய்ந்து உரை கோடல் அறம். மறையவும், உத்தம அயனும், மாலும், நம் தரத்தில் எவ்வளவோ உயர்ந்துளர். இரண்டொரு வரிகளை மனனம் செய்து, இதனாலேயே யாவும் அறிந்தோமென முனைத்து, சொரூபகேந்திர சிந்தனையின்றி, விபரீதக் குரலெழுப்பித்தான் இன்றைய உலகம், இன்று எவ்வளவு இரங்கு முகம் கொண்டுளது! இவைகளை அஞ்சிய மனங்கொண்டே விநயமுடன் உரை வரையும் உறவு கொண்டுளம். (231)

**-சொல்வைத்த**

**232. செம்மை மணிமலையைச் சேர்ந்த மரகதம்போல்**
**அம்மையொரு பால்வாழ்ந் தருளழகும்**

(ப-ரை.) சொல் வைத்த செம்மை மணிமலையை சேர்ந்த மரகதம் போல்-புகழ் பெருகிய சிவந்த மாணிக்க மலையான சிவத்தைச் சேர்ந்துள்ள மரகத மலை போன்ற; அம்மை ஒருபால் வாழ்ந்து அருள் அழகும்-பார்வதி யம்மை இடது பாகத்தில் இருந்து அருள் பாலிக்கும் அழகும், (எ-று.)

(வி-ரை.) ஆன்மாக்களின் பிரார்த்தனைச் சொற்கள் அளவிறந்து சென்று சேர்ந்திருத்தலின், ‘சொல் வைத்த மணிமலை’ என்றார் எனினுமாம். பால்-இடப்புறம்.

**“வரம் தவாதன யாவர்க்கும் வரன்முறை வழங்கி**
**முருந்தவாம் நகை மலைக்கொடி முகிழ்நகை யரும்ப**
**திருந்த ஆயிரம் கதிர்விடு சிங்கமெல் அணைமேல்**
**இருந்த நாயகன் இருக்கை கண்டு இறைஞ்சினான்”**

எனும் பரஞ்சோதியர் அறிவிப்பு, ‘அருள் அழகு’ என்பதில் எண்ணத் தகும். (232)

<u>**பார்க்கும் பயன்**</u>

**-அம்மமிகச்**

**233. சீர்த்திநிகழ் செம்பவளச் செம்மே னியினழகும்**
**பார்த்திருந்தால் நம்முள் பசிபோம்காண்**

(ப-ரை.) மிக சீர்த்தி நிகழ் செம்பவள செம்மேனியின் அழகும்-பேரும் புகழும் பிரகாசிக்கும் செம்மைப் பவளம் போன்ற திருமேனியின் பொலிவும், பார்த்திருந்தால் நம்முள் அம்ம பசிபோங்காண்-பார்த்துக் கொண்டே இருந்தால் அம்மா, (பாழும்) நம் வயிற்றுப் பசி பறந்து போய் விடுமே()

(வி-ரை.) அம்ம-உரையசைக் கிளவி; மற்று ‘அம்ம கேட்பிக்கும்’ என்னும் தொல்காப்பியக் குறிப்புமாம். மென்மேலும் தொடரும் தீராப்பசி, இருந்த இடம் தெரியாது மறையும்; இதற்குக் காரணம், பார்த்த கண் வாங்காது பார்ப்பார் ஆன பின், அப்பன் காட்டுவன்; அம்மை ஊட்டுவள். இதன் மேலும் எழுத இயல்வது இல்லை. (233)

**-தீர்த்தருளம்**

**234. கொண்டிருந்தான் பொன்மேனிக் கோலமதை நாம் தினமும்**
**கண்டிருந்தாலல்லலெலாம் கட்டறுங்காண்**

(ப-ரை.) தீர்த்தர் உளம் கொண்டு இருந்தான் பொன் மேனிக் கோலமதை-ஞானிகள் திருவுளத்தை இடமாக்கொண்டு இருந்த பிரானுடைய திருமேனிப் பொலிவை; நாம் தினமும் கண்டிருந்தால் அல்லல் எலாம் கட்டறுங்காண்-நாம் நாள்தோறும் பார்த்தகண் வாங்காமல் பார்த்தபடி இருந்தால், (இறவி பிறவியாம்) இடர்ப்பாடுகள் யாவும் அறுபட்டு விடும், (எ-று.)

(வி-ரை.) தீர்த்தர்-திருத்தமான நீர்நிலை போன்ற தூய மேலவர். கோலம் - இயற்கைப் பொலிவு. கட்டறுதல்-இனி இல்லையாதல். (234)

**கேட்கும் பயன்**

**-தொண்டடைந்து**

**235. பாட்டால் அவன்புகழைப் பாடுகின்றோர் பக்கநின்று கேட்டால் வினைகள்விடை கேட்குங்காண்**

(ப-ரை.) தொண்டு அடைந்து-திருப்பணி மயமகி; பாட்டால், அவன் புகழைப் பாடுகின்றோர் பக்கம் நின்று-பாக்களால் அப்பரன் திருப்புகழைப் பாடுகின்றார் பக்கத்தில் இருந்து; கேட்டால் வினைகள் விடை கேட்கும் காண்-சிரவணித்துக் கொண்டு இருந்தால், (பலகாலமாகப் பாதித்திருந்த) கன்மங்கள் யாவும், (இனிப் பாதிக்க மாட்டேன்; போகிறேன்) உத்தரவு கொடுங்கள் என்று விண்ணப்பிக்கும்; தெரிகிறதா, (எ-று.)

(வி-ரை.) தொண்டு-கைத்தொண்டு, மெய்த்தொண்டு; பாடுதல்-வாய்த்தொண்டு. கருவி கரணாதிகள் சத்கருமத்தில் சார்தலே தொண்டு எனப்பெறும். (235)

**ஓதும் பயன்**

**-நீட்டாமல்**

**236. ஓன்னார் புரம்பொடித்த உத்தமனே யென்றொருகால் சொன்னால் உலகத் துயரறுங்காண்**

(ப-ரை.) நீட்டாமல் ஒன்னார் புரம் பொடித்த உத்தமனே என்று ஒருகால் சொன்னால்-கால தாமதம் செய்யாமல், பகைவர்களது முப்புரத்தை எரித்த உத்தமா என்று ஒரு தரம் கூறினால்; உலகத் துயர் அறும்காண்-(வருந்திய) உலகத்துயர் யாவும் ஒழிந்துவிடும், (எ-று.)

**எண்ணும் பயன்**

**-எந்நாளும்**

**237. பன்னுமுள்ளத் துள்ளாம் பரசிவமே யென்றொருகால் உன்னுமுன்னம் தீமையெலாம் ஓடிடுங்காண்**

(ப-ரை.) எந்நாளும் பன்னும் உள்ளத்துள் ஆம் பரசிவமே என்று ஒருகால் உன்னு முன்னம்-எப்போதும் இறைபுகழ் கூறும் உள்ளத்துள் குடிபுகும் பரசிவமே என்று ஒரு தரம் உன்னிப்பாக உணர ஆரம்பித்ததும்; தீமை எல்லாம் ஓடிடும் காண்-பாதகம் யாவும் பறந்தோடும், (எ-று.)

**-அன்னவன்றன்**

**238. ஆட்டியகால் பூமாட் டடையென்றால்அந்தோமுன்**
**நீட்டியகால் பின்வாங்கி நிற்கின்றாய்**

(ப-ரை.) அன்னவன்தன் ஆட்டு இயல் கால் பூ. மாட்டு அடை என்றால்-தாண்டவம் செய்யும் அப்பெருமானுடைய தாள்மலர்களில் அடைக்கலம் ஆகியிரு என்று (ஆன்றோர் பலர்) அறிவித்தால்; அந்தோ-ஐயோ; முன் நீட்டியகால் பின் வாங்கி நிற்கின்றாய்-(எடுத்து வைத்த) முன் காலைப் பின் இழுத்துக் கொள்கின்றாயே, (எ-று.)

(வி-ரை.) ஆட்டு இயல் கால் - இயல்பாகவே பஞ்சகிருத்திய தாண்டவம் செய்யும் பாதங்கள். இயல் - (இடையறா அருளின்) இயற்கை. கால் பூ-திருவடித் தாமரை. குறுகிய வினைகட்குத் தக்கபடி கூத்தாடும் உலகத்தில், பெருகிய அருளியல்பால் பேராடல் செய்கின்றான், "அலகறியாத் திருக்கூத்தெம் ஐயர் புரியாரேல், விலகறியா உயிர் பலவும் நீயுமிங்கே நின்று, மினுக்குவதும் குலுக்குவதும் வெளுத்துவிடும் காணே" எனும் திருவருட்பாப் பகுதி, இங்கு நம் சிந்தனையில் எழுகிறது. முன்னேற்றம் என்று பெயர் வைத்து, அருள்நெறியில் பின்னேறிச் செல்கின்ற பேதைமையைச் செய்யாதே என்பது குறிப்பு. (238)

**-ஊட்டுமவன்**

**239. மாற்கடவு ளாம்ஓர் மகவலறக் கண்டுதிருப்**
**பாற்கடலை யீந்தவருட் பான்மைதனை**

**-நூற்கடலின்**

**240. மத்தியினீ கேட்டும் வணங்குகிலாய் அன்படையப்**
**புத்தியுளோர்க் கீதொன்றும் போதாதோ**

(ப-ரை.) ஊட்டும் அவன் மால் கடவுள்-(உயிர்கள் அனைத்திற்கு) உணவூட்டும் அத்திருமாலாகிய தேவனும்; ஆம் ஓர் மகவு-(புலிக்கால் முனிவர் புதல்வர்) ஆன உபமந்யரும்; அலற கண்டு-அலறிப் பிராத்தித்தலை அறிந்து; திருப்பாற் கடலை யீந்த அருள் பான்மைதனை-(அவ்விருவர்க்கும்) திருப்பாற் கடலை, இடமாகவும் (உணவாகவும்) உதவிய தண்மை அருளாகிய தன்மையை, (எ-று.)

(ப-ரை.) நூல் கடலின் மத்தியின் நீ கேட்டும் வணங்குகிலாய்-கடல்போல் பெருகிய கலைகளின் இடையிடை நீ (கண்டிருந்தும்) கேட்டிருந்தும் (தற்பரன் அருள்நினைந்து) தலை வணங்கினாய் இல்லை; அன்பு அடைய-பெருகிய அன்பைப் பெறுதலுற; புத்தி உளோர்க்கு ஈது ஒன்றும் போதாதோ-அறிவை உள்கிய அறிஞர்க்கு, இந்த ஒரு அருளாடலை எண்ணுவது போதாதோ (எ-று.)

(வி-ரை.) படியளப்பவர் என்பது பரந்தாமர் திருநாமம். காலால் அளந்தார்; மாபலியை அடக்கினார். அவரவர் வினை அளவிற்குத் தக்கபடி, கையால் அளப்பவரும் ஆயினார். ஆதார வரிசையில், மணிபூரகம் எனும் வயிறே அவர் வாழும் இடம். அதை நிரப்புதல் அவர் தொழில். அமுதக் கடலில், குண்டலினியான ஆதி சேடன் மடியில்

அறிதுயில் கொள்ள அவாவினேன்; ஆடல் அரசே! அருள்க துரையே என்று, விமலன் திருமுன் பலகாலமாக விநயம் கொண்டு விண்ணப்பித்தல் ஆயினர். அங்ஙனே ஆக என்று, பரமேசர் பாற்கடலை அவர்க்குப் பாலித்தார். இது ஒரு கால வரலாறு.

வசிட்டர் தங்கையை, புலிக்கால் முனிவர் திருமணம் புரிந்தார்; நல்லற இல்லறம் நடந்தது. உபமந்யத் எனும் உத்தமப் பிள்ளை உதித்தது. வசிட்டர், அருந்ததியொடு வந்தார். தங்கையை, சேயொடு தம் ஆஸ்ரமத்திற்கு அழைத்தார். காலத்தில் பால் தந்தது காமதேனு. பாலர் அதைப் பருகினார். ஐந்து வயது ஆயது. தாயும் சேயும் திரும்பினர். தங்கள் ஆஸ்ரமத்தில் தங்கினர். பசிக்கிறதே என்றார் பாலர். தாய் பசும்பாலைத் தந்தார். அது காமதேனுவின் பால்போல் இல்லை. வேண்டாம் இது என்று மறுத்து, பிள்ளை வீரிட்டு அழுதது. புலிக்கால் முனிவர் விவரம் அறிந்தார். ஆறுதல் செய்தார். அழுகை அடங்கியபாடு இல்லை. ஆத்திரம் கொண்டார். பிள்ளையைப்பிடித்தார். இழுத்து வந்தார். தாண்டவம் நிகழும் அம்பலத்தில் தள்ளினார். அளிப்பானைக் கேள் என்று அறிவித்துத் திரும்பினார். தனியிருந்தார். தவத்தில் ஆழ்ந்தார்.

அழுதது பிள்ளை. அத்தர் நகைத்தார். பாற்கடலைப் பார்த்தார். ஆள்காட்டி விரலால் அழைத்தார். படர்ந்து வந்தது பாற்கடல். உம். இங்கே பார்! பருகு என்று பணித்தார் பரமர். உபமந்யு உணர்ந்தார். இரு கரங்களைக் கரையாக அணைத்தார். பருகினார். பசி தணிந்தது. இதனால் அவர்க்கு, இனி உலகம் உள்ள அளவு பசியில்லை. கரந்தது கடல். இருந்தது சிவம். உள்முகம் ஆயினர் உபமந்யு.

நெஞ்சே! சிந்தையைத் தன்பால் சேர்த்த திருமாற்கும் சிறுவற்கும், சிவனார் செய்த கம்பீரமான பேரருளை இயம்பாத நூல் இல்லை; "பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்; மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்." இது திருவாசகத் திருப்பல்லாண்டு; சக்கரம் என்பது, ஆகுபெயர் இலக்கணத்தால் பாற்கடலையும் அறிவிக்கும். முன்னேறிவா! முதலவனடி நினை என்றால், ஏன் பின் வாங்குகிறாய்; இப்படியுமா பாவம் இருக்கும் என்று வருந்தியபடி.

"அறிவை அறிவது பொருள்" என்பது ஆன்றோர் அருளுரை. அறியாமல் செயல்படுவது வேறு; அதன் சொரூபத்தை உணர்வது வேறு; புத்தி உளோர்-அறிவை உள்கிய மேதைகள்; அத்தகையர்க்கு, இந்த இரு வரலாறுகளின் புறம் தெரியும்; அகம் புரியும் என்பது உள்ளுரை. ()

**-முத்திநெறி**

**241. மாணா அரக்கன் மலைக்கீழ் இருந்தேத்த
வாணாள் வழங்கியதோர் வண்மைதனை**

-நாணாளும்

242. **நண்ணி யுரைத்தும் நயந்திலைநீ அன்புகொளப்**
**புண்ணியருக் கீதொன்றும் போதாதோ**

(ப-ரை.) முத்தி நெறி மாணா அரக்கன் மலைக்கீழ் இருந்து ஏத்த-முத்தி வழியில் அரிய சிறப்பெய்தாத அரக்கனாகிய இராவணன், (கயிலை) மலைக்கீழ் அகப்பட்டு, (துன்பு பொறாது) துதிசெய்ய; வாழ்நாள் வழங்கியது ஓர் வண்மைதனை-இரக்கம் கொண்ட எம்பெருமான், அவனுக்கு) வாழ்நாள் (மூன்றுகோடி) வழங்கிய வண்மைத் தன்மையை; நாள் நாளும் நண்ணி உரைத்தும் நயந்திலை நீ-ஒவ்வொரு நாளும் உனக்கு அணுக்கம் ஆகி உபதேசித்தும், நீ அதனை விரும்பி ஏற்றிலையே; அன்பு கொள புண்ணியருக்கு ஈது ஒன்றும் போதாதோ-சிவ புண்ணிய சீலர்கள் கூர்த்த அன்பு கொள்ள, (புனித) இவ்வொரு வரலாறு போதாதோ?

(வி-ரை.) நெறி-மார்க்கம். மாணா-மாண்பு இலாத; மாண்பு-சிறந்த பெருஞ் சீர்த்தி. இவ்வரலாறு, திருவடிப் புகழ்ச்சி 37ஆம் வரி உரையில் உளது. (241-42)

-புண்ணியராம்

243. **சுந்தரர்க்குக் கச்சூரில் தோழமையைத் தான்தெரிக்க**
**வந்திரப்புச் சோறளித்த வண்மைதனை**

-முந்தகத்தில்

244. **பேதமறக் மேட்டும் பிறழ்ந்தனையே அன்படையப்**
**போதமுளோர்க் கீதொன்றும் போதாதோ**

(ப-ரை.) புண்ணியர் ஆம் சுந்தரர்க்கு-சிவ புண்ணிய சொரூபரான ஆளுடைய நம்பிகட்கு; தோழமையை தான் தெரிக்க-(தாம்) தோழர் என்பதை (அகில உலகிற்கும்) தாமே தெரிவித்தருள; கச்சூரில் வந்து-திருக்கச்சூர்த்தலத்தில் வந்து; இரப்பு சோறு அளித்த வண்மைதனை-(இல்லந்தோறும்) யாசித்துக் கொணர்ந்த சோற்றை (தாமே முன்னிருந்து) அருத்திய ஈகை யுடைமையை; முந்து அகத்தில் பேதம் அற கேட்டும் பிறழ்ந்தனையே-முதன்மை உணர்வில் (என்னோடு) அபேதமாக இருந்து சிரவணித்து இருந்தும் மாறி விட்டாயே; அன்பு அடைய-அன்பின் சொரூபம் ஆக; போதம் உளோர்க்கு ஈது ஒன்றும் போதாதோ-தெளிந்த உணர்வினர்க்கு இந்த (புனித) ஒரு அருளாடல் போதாதோ! (எ-று.)

(வி-ரை.) தெரித்தல்-தெளிவாகத் தெரிந்து கொள்ளச் செய்தல். நெஞ்சை முன்னிலை யாக்கி உரைத்தலின், முந்து அகம் என்பதற்கு, உன் முற்பட்டு நிற்கும் உணர்வு என்று பொருள் கொளப் பெற்றது. நான் வேறு நீ வேறு ஆகாமல், ஒன்றித்துச் சிரவணித்தோம்; இடையில் நீ எதற்கு தறிகெட்டுப் போயினை என்று இடித்து உரைத்தபடி. போதம்-(தேர்ந்து விளைந்த) தெளிவு. போதம் உளார்க்குப் போதாதே என்பதனால், இனிய தெளிவை நீ எய்திலை என, மேலும் உறைக்குமாறு

உரைத்தபடி. “இந்தொண்டர் பசியறக் கச்சூரில் மனைதொறும் இரக்க நடை கொள்ளும் பதம்” என்பது, திருவடிப் புகழ்ச்சியில், விண்ணப்பக் கலிவெண்பா 265 ஆம் கண்ணி உரையில் இவ் வரலாறு உளது. (243-44)

**(தொடரும்)**

**அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி**
**அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை**

**தயவு.**